


"தோழர் **வே.ஆனைமுத்து** வழியில்"

**சுவடி : 1** **ஏடு : 5**

**சனவரி-பிப்ரவரி 2023**

**ஆசிரியர்**

வாலாசா வல்லவன்

**ஆசிரியர் குழு**

க. முகிலன்

சா. குப்பன்

தி. துரை சித்தார்த்தன்

முனைவர் முத்தமிழ்

சி. நடராசன்

ந. கருணாகரன்

இரா. திருநாவுக்கரசு

**இதழ் வடிவமைப்பு :**

**சன் நகலகம்**

சென்னை - 600 005.

பேசி : 98400 15179

**அனைத்துத் தொடர்புகளுக்கும்**

ஆசிரியர் **'புதிய சிந்தனையாளன்'**

2/12, சி.என்.கே.சந்து,

சேப்பாக்கம், சென்னை - 600 005.

தொடர்புக்கு :

**86681 09047, 98947 28032**

**94885 34225**

மின்னஞ்சல் :

sinthanaiyalantamilmonthly@gmail.com

*

இணையத்தில் படிக்க

www.keetru.com




# தமிழ்நாட்டு ஆளுநரின் அடாவடித்தனம்

ஆங்கிலேயர் ஆட்சிக் காலத்தில் 1919-இல் ஏற்படுத்தப்பட்ட மாண்டேகு-செம்ஸ்போர்டு சட்டத்தின்படியும், 1935-இல் இயற்றப்பட்ட அரசமைப்புச் சட்டப்படியும், 1949-இல் நிறைவேற்றப்பட்டு 1950 சனவரி 26 முதல் நடைமுறையில் இருந்துவரும் இன்றைய அரசமைப்புச் சட்டத்தின்படியும் ஆளுநர்கள் ஒவ்வொரு ஆண்டின் தொடக்கத்திலும் உரையாற்றி சட்டமன்றக் கூட்டத் தொடரைத் தொடங்கி வைப்பது மரபாக இருந்து வருகிறது.

பொதுவாக ஆளுநர் உரை என்பது அந்தந்த மாநில அரசுகள் எழுதிக் கொடுப்பதை-மாநில அரசின் கொள்கை செயல்திட்ட அறிக்கையைப் படிப்பதுதான் வழக்கமான நடைமுறையாக இருந்து வருகிறது.

இந்த ஆண்டு சனவரி திங்கள் 9-ஆம் நாள் தமிழ்நாடு சட்டமன்றம் கூடிய போது, ஆளுநருக்குத் தமிழ்நாடு அரசு தயாரித்து அனுப்பிய உரையை முழுமையாகப் படிக்காமல் அதில் இடம்பெற்றிருந்த பெரியார், அண்ணா, காமராசர், கலைஞர், அண்ணல் அம்பேத்கர், திராவிட மாடல் அரசு போன்ற முதன்மையான பெயர்களைத் தவிர்த்துவிட்டுப் படித்தார்.

இந்திய அரசு அமைப்புச் சட்டத்தின் 159ஆம் பிரிவின்படி ஆளுநர் உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதி முன்னிலையில் பதவியேற்பு உறுதிமொழி கூறியபோது, "ஆர்.என். இரவி என்கிற நான் தமிழ்நாடு மாநிலத்தின் ஆளுநராக உண்மையுடன் செயலாற்றுவேன் என்றும் அரசு அமைப்புச் சட்டத்தைக் காப்பதற்கும், நிலை நிறுத்துவதற்கும் என் சக்தியைப் பயன் படுத்திப் பாடுபடுவேன் என்றும் தமிழ்நாடு மாநிலத்தின் மக்களுக்காகவும் அவர்களுடைய நலன் கருதியும் பணியாற்றுவேன் என்று எல்லாம் வல்ல இறைவன் பெயரால் உறுதி எடுத்துக் கொள்கிறேன்" என்று உறுதி மொழியைக் கூறினார். ஆனால் அவர் ஏற்றுக்கொண்ட உறுதிமொழிகளுக்கு மாறாகவும் அரசியல் சட்டத்திற்கு எதிராகவும் தொடர்ந்து செயல்பட்டு வருகிறார். இது அரசமைப்புச் சட்டத்தையே அவமதிக்கும் செயலாகும். இந்திய ஆட்சிப்பணி, இந்திய காவல் உள்ளிட்ட பணிகளுக்கு தேர்வு செய்யப்பட்ட இ.ஆ.ப., இ.கா.ப. தேர்ந்தெடுக்கப்பட்ட அலுவலர்களை அழைத்து மாநில அரசின் திட்டங்களைச் செயல்படுத்தக் கூடாது; ஒன்றிய அரசின் திட்டங்களையே செயல்படுத்த வேண்டும் என்று அறிவுரை கூறுகிறார். இது அப்பட்டமான அரசமைப்புச் சட்ட மீறலாகும். இ.ஆ.ப., இ.கா.ப. போன்ற பணியாளர்களைத் தேர்ந்தெடுப்பது ஒன்றிய அரசாக இருந்தாலும் மாநில அரசுப் பணிகளுக்கு அவர்களை அனுப்பியதும் அவர்கள் மாநில அரசின் பணியாளர்களாகத்தான் செயல்பட வேண்டும். மாநில அரசின் திட்டங்களைத் தான் செயல்படுத்த வேண்டும். இது சட்ட விதி. ஆனால் ஆளுநர் இரவி அவர்கள் சட்டத்திற்கு எதிராகச் செயல்படுவதுடன் மற்றவர்களையும் அவ்வாறு செயல்படத் தூண்டுவது கண்டிக்கத்தக்கது ஆகும்.

காசித் தமிழ்ச் சங்கமம் என்ற பெயரில் காவிகள் காசியில் நடத்திய விழாவிற்குச் சென்று வந்தவர்களை அழைத்து, அவர்களுக்கு விருந்து கொடுத்து அவர்களிடையே உரையாற்றும் போது "தமிழ்நாடு" என்று சொல்லாதீர்கள்; "தமிழகம்" என்று சொல்லுங்கள் என்று கூறினார். தமிழ்நாடு என்று சொல்வது பிரிவினையைத் தூண்டுவதாக உள்ளது என்றும் கூறி வருகிறார்.

தமிழ்நாடு பெயர் மாற்றக் கோரிக்கை என்பது பல ஆண்டுகளாக தமிழர்கள், தமிழ் அமைப்புகள், திராவிடர் கழகம், தி.மு.க., பொதுவுடைமைக்

கட்சியினர் ஆகியோரின் கோரிக்கையாக இருந்து வந்தது. 1967-இல் அண்ணா அவர்கள் முதலமைச்சராக வந்த பிறகு 1967 சூலைத் திங்கள் 18-ஆம் நாள் சென்னை மாநில அரசின் சட்டமன்றத்தில் 'தமிழ் நாடு அரசு' என்று பெயர் மாற்றத் தீர்மானம் கொண்டு வந்தார். அத்தீர்மானம் ஒரு மனதாக தீர்மானம் நிறைவேற்றப்பட்டது.

1968 நவம்பர் திங்கள் 23-ஆம் நாள் நாடாளுமன்றத்தில் தமிழ்நாடு பெயர் மாற்றச் சட்ட முன்வடிவு நிறைவேற்றப்பட்டது. குடிஅரசுத் தலைவரின் ஒப்புதல் பெற்று, இந்திய ஒன்றிய அரசின் அறிவிப்பு ஆணையும் வெளியிடப்பட்டது. 1969 சனவரி 14-ஆம் நாள் தைத் திங்கள் முதற்கொண்டு "தமிழ்நாடு" என்று சட்டப்படி அழைக்கப்பட்டு வருகிறது. அரசமைப்புச் சட்டப்படியான இந்தப் பெயரை உச்சரிக்க மறுப்பதும் தமிழ்நாட்டு அரசின் இலச்சினையை வெளியிடாமல் பொங்கல் வாழ்த்துச் செய்தியை வெளியிடுவதும் இந்திய அரசியல் அமைப்புச் சட்டத்தை அவமதிக்கும் செயல் மட்டுமின்றி தமிழ்நாட்டு மக்களின் உணர்வுகளைக் காயப்படுத்தும் செயலாகும்.

சங்க இலக்கியங்கள் எழுதப்பட்ட காலம் தொட்டே தமிழ் மக்களுக்கு என்று ஒரு தனித்தப் பண்பாடு உள்ளது. வடவருடைய ஆரியப் பண்பாட்டைத் தமிழ் மக்கள் மீது திணித்து, இந்திய ஒருமைப்பாடு என்ற பெயரால் தமிழர்களின் பண்பாட்டைச் சீரழிக்கும் செயல்களில் ஒன்றிய அரசின் தலைமை அமைச்சர் மோடி, உள்துறை அமைச்சர் அமித்சா மற்றும் பா.ச.க. வைத் சேர்ந்த அமைச்சர்கள் தமிழகத்தில் தொடர்ந்து பரப்புரைச் செய்து வருகின்றனர். அதற்கு ஆர்.எஸ்.எஸ்., ஆளுநர் ஆர்.என். இரவி அவர்களைக் கருவியாகப் பயன்படுத்தி வருகின்றனர்.

தமிழ்நாடு சட்டமன்றம் இயற்றிய பல முதன்மையான சட்ட முன்வடிவுகளுக்கு ஒப்புதல் அளிக்காமல் அடாவடித்தனமாக அளவு கடந்த காலம் கடத்தி வருகிறார் ஆளுநர்.

இராசீவ் காந்தி கொலை வழக்கில் குற்றவாளிகளாகச் சேர்க்கப்பட்டிருந்த பேரறிவாளன் உள்ளிட்ட ஏழுத் தமிழர் விடுதலைக்கு எதிராகச் செயல்பட்டார். அரசியல் சட்டக்கூறு 161 அய் அவமதிக்கும் வகையில் தமிழ்நாட்டு அரசின் தீர்மானத்துக்கு ஒப்புதல் அளிக்காமல் அளவு கடந்த காலம் கடத்தினார்.

எழுவரின் விடுதலையை உறுதிச் செய்து உச்ச நீதிமன்றம் வழங்கியத் தீர்ப்பில் என்பது ஆளுநரின் செயலைக் கண்டிக்கின்ற வகையில் மாநில அரசின் முடிவுகளுக்கு கட்டுப்பட்டவர்தான் ஆளுநர் என்றும், இந்திய அரசமைப்புச் சட்டத்திற்கு அப்பாற்பட்ட அதிகாரம் யாருக்கும் இல்லை என்று கூறியது. வெட்கம், மானம் இருந்தால் அன்றே ஆளுர் இரவி பதவி விலகி இருக்க வேண்டும்.

ஆளுநர் பதவியே தேவையற்றது. தமிழ்நாடு தன்னுரிமை பெறவேண்டும் என்பதே மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் கொள்கையாகும்.

தமிழ்நாட்டு அரசுக்கும் தமிழ் மக்களுக்கும் எதிராகச் செயல்படும் ஆர்.என். இரவி ஆளுநர் பதவியிலிருநது உடனடியாக விலகவேண்டும் என்பதே நமது நிலையாகும்.

09.02.2023 - **வாலாசா வல்லவன்**

## மா.பெ.பொ.க. விழுப்புரம் மாவட்டச் செயலாளர் சென்னகுணம் ஆ.கு.ஆறுமுகம் மறைந்தார்



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சித் தொடக்க முதல் தேனீ போன்று செயலாற்றியவர். தொடக்கத்தில் தென்னார்க்காடு மாவட்ட அமைப்பாளராக விழுப்புரம் க.திருப்பாண்டியன் இருந்தபோது, அகவை முதிர்ந்த அவருக்கு அனைத்து வகையிலும் பேருதவியாக இருந்து விழுப்புரத்தில் மாநிலப் பொதுக்குழு கூட்டங்கள் நடத்துவதிலும் கொள்கைப் பரப்புரைப் பொதுக் கூட்டங்கள் நடத்துவதிலும் துடிப்புடன் பணியாற்றியவர். திருப்பாண்டியன் மறைவிற்குப் பிறகு எந்தத் தொய்வுமின்றி கொள்கை-கட்சிப் பணிகளில் ஈடுபாட்டுடன் செயலாற்றியத் தோழர் ஆ.கு.ஆறுமுகம் அவர்கள்.

அவர் வாழ்ந்த ஊரான சென்னகுணத்தில் தண்ணீர்ச் சிக்கலைப் போக்க கட்சியின் பொதுச் செயலாளர் தோழர் வே.ஆனைமுத்து அவர்கள் உறுதுணையுடன் சென்னைத் தலைமைச் செயலகத்தில் முறையீடு செய்து மேல்நிலை நீர்த்தேக்கத் தொட்டி அமைய ஆவன செய்ததால் ஊர் மக்களிடம் நற்பெயருடன் விளங்கியவர். மிகவும் எளிய குடும்பம், எனினும் அவரது மகன்களான ஆ.முத்தமிழ்ச்செல்வன், ஆ.கலையரசன் இருவரும் உயரிய முனைவர் பட்டம் பெற்றுள்ளனர்.

தன்மானப் பகுத்தறிவுப் பாதையில் தம் இறுதிக்காலம் வரை வாழ்ந்தார். கடந்த இரண்டு ஆண்டுகளாக மிகவும் உடல் நலிவுற்றிருந்த நிலையில் 08.02.2023 அன்று தம் வாழ்வின் முடிவெய்தினர் என்பது மிகவும் துயர்தரு வதாகும். அவர் உடல் மருத்துவமனைக்குக் கொடையாக வழங்கப்பட்டது. கண்களும் கொடையளிக்கப்பட்டன. மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி மனம் கசிந்த இரங்கலை உரித்தாக்குகிறது.

# இந்தியாவின் ஒற்றுமையைப் பாதுகாப்பார்களா? சீர்குலைப்பார்களா?
## அண்ணல் அம்பேத்கரிடம் இராஜாஜி குறிப்பிட்ட எச்சரிக்கை

பேராசிரியர் **மு.நாகநாதன்**

இந்தியா ஒரு நாடன்று. இந்தியா ஒரு துணைக் கண்டம். டச்சு, போர்த்துக்கீசிய, பிரெஞ்சு, ஆங்கிலேயே நாடுகளிலிருந்து வந்து இந்தியாவில் வணிகக் குழுமங்களை ஏற்படுத்தினார்கள். அக்காலக்கட்டத்தில் இந்தியத் துணைக் கண்டத்தில் பல இயற்கை வளங்கள் அதிகளவில் இருந்தன. இந்த வளங்களைச் சுரண்டி புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி உற்பத்திப் பொருட்களாக மாற்றி உலகசந்தை யில் கிழக்கிந்தியக் குழுமங்கள் வணிகம் செய்து தங்கள் நாடுகளின் வளத்தைப் பெருக்கிக் கொண்டன.

பிரித்தானியக் கிழக்கிந்தியக் குழுமம் இந்தியாவின் பெரும் பகுதிகளைக் கைப்பற்றித் தங்களின் வணிகச் சுரண்டலைப் பெருமளவில் தொடர்ந்தது. இந்நிகழ்வைப் பற்றி அறிஞர் காரல் மார்க்சு "இந்தியாவை ஆளும் வர்க்கத் தினர் கைப்பற்ற எண்ணினர். பண வர்க்கத்தினர் கொள்ளை யடிக்க விரும்பினர். ஆலை அதிபர்கள் குறைந்த விலைக்கு விற்க விரும்புகின்றனர். இப்பொழுது நிலைமைகள் மாறி விட்டன. இன்றியமையாத் தேவைகளான உள்நாட்டுத் தொடர்புகளையும் நீர்ப்பாசன வழிகளையும் இந்தியாவிற்குக் கொடையாக வழங்குவதன் வாயிலாக இந்தியாவை உற்பத்தித் தரும் வளமிக்க நாடாக மாற்றியமைக்கலாம் என ஆலை அதிபர்கள் கண்டுபிடித்துவிட்டார்கள். எனவே அவர்கள் இந்தியாவிற்கு இரயில்வே இணைப்பை ஏற்படுத்த விரும்பு கிறார்கள். அதை அவர்கள் செய்வார்கள். அதன் விளைவுகள் பாராட்டுக்குரியதாக இருக்க முடியாது". (The aristocracy wanted to conquer it, the moneyocracy to plunder it, and the millocracy to under sell it. But now the tables are turned. The millocracy have discovered that the transformation of Indian into a reproductive country has become of vital importance to them, and that, to that end, it is necessary, above all, to gift her with means of irrigation and of internal communication. They intend now drawing a net of railways over India. And they will do it. The results must be inappreciable-Karl Marx and Fredrick Engels – On the National and Colonial Questions – Selected Writings- edited by Aijaz Ahmed, P.71) என்று குறிப்பிடுகிறார்.

ஆனால் பிரித்தானியக் கிழக்கிந்தியக் குழுமத்தின் ஆட்சியில் ஊழல்கள் மலிந்தன. இராபர்ட் கிளைவ் மீது பிரித்தானிய அரசு நடத்திய ஊழல் விசாரணை இதற்கு ஒரு சான்றாகும். இதன் பின்னர் பல குழப்பங்கள் ஏற்பட்டு, நிர்வாகத்தில் சீர்கேடுகள் பன்மடங்கு பெருகி, இறுதியில் சிப்பாய்க் கலகமாக வெடித்தது. இதற்குப் பிறகுதான் பிரித்தானிய அரசின் நேரடி ஆட்சியின்கீழ் 1857ஆம் ஆண்டு இந்தியத் துணைக்கண்டம் கொண்டுவரப்பட்டது.

1857க்குப் பிறகு நடந்த சில அரசியல் நிகழ்வுகளை வரலாற்று ஆய்வாளர் இராமசந்திர குகா தனது 'காந்திக்குப் பிறகு இந்தியா' (India After Gandhi) எனும் நூலில் விளக்கியுள்ளார். அவர் தனது முன்னுரைக்கு அளித்த தலைப்பே இயற்கையாக அமையாத நாடு (Unnatural Nation) என்பதாகும். கிழக்கிந்தியக் குழும ஆட்சியின் காலத்தில் நிலவிய குழப்பமான தெளிவற்ற நிர்வாகம் மாறி 1857இல் ஒரு புதிய, திறன்மிக்க வலிமையான ஒரு நிர்வாகம் ஏற்பட்டது. புதிய மாவட்டங்கள், நிர்வாகங்கள் உருவாக்கப் பட்டன. காவல் துறை, வனத்துறை, நீர்வளத் துறை போன்ற துறைகளை மேலாண்மை செய்வதற்குத் திறன்மிக்க இந்திய ஆட்சிப் பணியாளர்கள் நியமிக்கப்பட்டனர். இத்தகைய கட்டமைப்புகள்தான் இந்தியாவினுடைய ஒற்றுமைக்கும் நிலைத்த தன்மைக்கும் வழிவகுத்தன. இந்தப் புதிய கட்டமைப்புகள் வழியாக பிரித்தானிய இராணுவத்தைப் பல பகுதிகளுக்கு விரைந்து அனுப்புவதற்கு வழிவகுத்தன.

1888இல் ஒரு நிலையான இந்தியாவை உருவாக்க முடிந்தது. ஜான் ஸ்ட்ராச்சி என்ற வெள்ளை அதிகாரி இந்தியா வை ஒருங்கிணைக்கும் பணியில் பெரும் பங்காற்றினார். இவர் கவர்னர் ஜெனரல் குழுவின் உறுப்பினராகவும் இருந்தார். இவர் ஓய்வு பெற்ற பிறகு கேம்பிரிட்ஜ் பல்கலைக் கழகத்தில் இந்தியாவைப் பற்றிப் பல தொடர் சொற்பொழிவு களை நிகழ்த்தினார். ஐரோப்பிய நாடுகளில் காணப்பட்ட வேறுபாடுகள் இந்தியாவில் காணப்பட்ட வேறுபாடுகளுடன் ஒப்பிடுகையில் மிகச்சிறிய அளவே எனக் குறிப்பிட்டார். இன, மொழி, மத வேறுபாடுகள் ஐரோப்பிய நாடுகளைவிட இந்தியத் துணைக்கண்டத்தில் மிகவும் அதிகம்; ஐரோப்பிய நாடுகளைப் போன்று இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதிகள், நாடுகளைப் போன்று அமையவில்லை, அவை களுக்குத் தனித்த அரசியல் சமூக அடையாளங்கள் கிடையாது என்றும் குறிப்பிட்டுள்ளார்.

கேம்பிரிட்ஜ் பல்கலைக்கழகத்தில் உரை கேட்க வந்தவர்களைப் பார்த்து ஸ்ட்ராச்சி என்ன கூறினார் தெரியுமா? "இந்தியாவைப் பற்றி முதலாகவும் முதன்மை

யாகவும் அறிந்து கொள்ள வேண்டியது என்னவென்றால் இந்தியா என்ற அமைப்பு ஒரு போதும் இருந்ததில்லை. இருக்கவும் இல்லை. ஐரோப்பிய நாடுகளைப் போன்ற இடம் சார்ந்த அரசியல் சார்ந்த, சமூகம், மதம் சார்ந்த ஒற்றுமை கூட கிடையாது. இந்தியா என்ற நாடு கடந்த காலத்திலும் இல்லை. எதிர்காலத்திலும் இருக்கப் போவதில்லை'' (There was no Indian nation or country in the past; nor would there be one in future, p.xxi).

பஞ்சாப், வங்காளம், வடக்கு மேற்கு பகுதிகள் பற்றிக் கூறுகின்ற போது, சென்னை மாகாணத்தைப் பற்றி ஒரு கருத்தை ஜான் ஸ்ட்ராச்சி தெரிவித்துள்ளார். சென்னை மாகாணம் இந்திய நாட்டின் ஒரு பகுதியாகத் தங்களை ஒருபோதும் கருதவில்லை (Madras, should ever feel that they belong to one Indian nation, P.XXI) இவ்வாறு ஜான் ஸ்ட்ராச்சி குறிப்பிட்டதை ஆய்வாளர் குகா முன்னுரையில் விரிவாக விளக்கியுள்ளார். இத்தகைய வரலாற்று உண்மைகளை நன்கு படித்து உணர்ந்ததால் தான் பேரறிஞர் அண்ணா நாடாளுமன்ற மேலவையில் தனது உரையில் இந்தியா ஒரு நாடன்று; இந்தியா ஒரு துணைக்கண்டம் எனக் கூறினார்.

இந்த வரலாற்று உண்மையைப் பறைசாற்றும் வண்ணம் 1857இல் பிரித்தானிய ஆட்சியில் இந்தியத் துணைக்கண்டத்தின் பகுதிகளாக இருந்த பர்மா, பாகிஸ்தான், பங்களாதேஷ் போன்ற பகுதிகள் இன்று தனித்தனி நாடு களாக மாறிவிட்டன.

சான்றாக இந்தியத் துணைக்கண்டத்தின் ஒரு பகுதியாக இன்று விளங்கும் கோவா 1961-இல்தான் போர்த்துக்கீசிய ஆதிக்கத்திலிருந்து விடுதலைப் பெற்றது. இன்றும் பாண்டிச்சேரி பகுதியில் வாழும் மக்கள் பிரான்சு நாட்டினுடைய நாடாளு மன்றத் தேர்தல்களில் பங்கேற்று வாக்களிக்கின்றனர். பிரெஞ்சு தூதரகம் பாண்டிச்சேரியில் இன்றும் இயங்கி வருகிறது. மேற்கூறிய வரலாற்று உண்மைகள் இந்தியா ஒரு ஒருங்கிணைக்கப்பட்ட நாடு என்பதைப் பறைசாற்று கின்றன.

1885ஆம் ஆண்டு டிசம்பர் திங்களில் மும்பையில் இருந்த கோகுல்தாஸ் தேஜ்பால் சமஸ்கிருத கல்லூரியில் 72 உறுப்பினர்கள் கூடி காங்கிரசு அமைப்பை ஏற்படுத்தினர். இதை உருவாக்குவதற்குத் துணைபுரிந்தவர் ஓய்வு பெற்ற இந்திய ஆட்சிப் பணியாளர் ஏ.ஓ.ஹியும் என்பதும் குறிப் பிடத்தக்கது. காங்கிரசு என்ற அமைப்பு ஆரம்பக்காலத்தில் பிரித்தானிய அரசிடமிருந்து இந்தியர்களுக்குச் சலுகைகளைக் கேட்கும் கட்சியாகவே இயங்கியது. ஆங்கிலவழிக் கல்வி பயின்ற ஆதிக்கச் சாதியினர்தான் இவ்வமைப்பில் அதிக எண்ணிக்கையில் இடம் பெற்றனர்.

1915ஆம் ஆண்டு காந்தியார் காங்கிரசு இயக்கத்தில் இணைந்தார். இவர் இணைந்த பிறகுதான் காங்கிரசு ஒரு மக்கள் இயக்கமாக உருவெடுத்தது. பல்வேறு மொழி, மத, இன பண்பாட்டு அடையாளங்களைக் கொண்ட தனித் தனியாக இயங்கிய மக்களை ஒன்றிணைத்து இந்திய அளவில் ஒரு வலிமையான அரசியல் கட்டமைப்பை உருவாக்க வழிவகுத்தார். இருப்பினும் காந்தியின் அரசியல் செல்வாக்கு பர்மா, இலங்கை போன்ற நாடுகளில் காலூன்ற வில்லை. காந்தியின் அரசியல் ஆளுமைதான் வெவ்வேறு பகுதிகளாக இருந்த பல மாநிலங்களிலிருந்து அரசியல் உணர் வாளர்களைக் காங்கிரசு இயக்கத்தில் இணைய வழிவகுத்தது.

1947-இல் இந்தியா விடுதலைப் பெற்ற போது மக்களின் செல்வாக்கைப் பெற்றிருந்த காந்தியால் பாகிஸ்தான் பிரிவி னையைத் தடுக்க முடியவில்லை. இதற்கு இந்தியா ஒரு நாடாக இயற்கையாக அமையாததுதான் காரணம். 1938 ஆம் ஆண்டு பிரித்தானிய ஆட்சியின் போது தனியார்த் துறையில் காப்பீட்டுக் கழகம் ஒன்று தொடங்கப்பட்டது. ஒன்றிணைக்கப்பட்ட இந்திய தீ மற்றும் பொது காப்பீட்டுக் கழகம் (United India Fire and General Insurance Company) என்றுதான் பெயரிடப்பட்டது. 1972ஆம் ஆண்டு இந்தக் காப்பீட்டு நிறுவனத்தை நாட்டுடைமை ஆக்கியபோது இன்று உள்ள பெயர் 'ஒன்றிணைக்கப்பட்ட இந்தியக் காப்பீட்டு நிறுவனம்' (United India Insurance Company) என்று சூட்டப்பட்டது. இத்தகைய வரலாற்று உண்மைகளையும் நிகழ்வுகளையும் அறிந்து கொள்ளாமல் ஒரு மத உணர்வைத் தூண்டும் 'பாரத மாதவிற்கு ஜே' என வெற்று வெறி முழக்கமாக சனாதன சங்கிகளால் எழுப்பப்படுகிறது.

பர்மா, இலங்கை, பாகிஸ்தான், வங்கதேசம் ஆகிய பகுதிகள் இந்தியத் துணைக்கண்டத்தின் ஒன்றாக இருந்த போதும் பல நாடுகளாகப் பிரிந்த போதும் பாரத மாதா எங்கே இருந்தார் என்ற கேள்வி எழுகிறது அல்லவா? ஒரு வேளை காஞ்சிபுரம் அத்திவரதர் போல் வடநாட்டுக் குளத்தில் பதுங்கி இருந்தார் என ஆளுநர் இரவி போன்றோர் சொல்லக்கூடும். புராண, இதிகாச, சனாதன மனுநீதி நூல்கள் எல்லாம் ஆதிக்கச் சமுதாயத்தினரால் தங்களின் ஆதிக்கத்தை நிலைநிறுத்துவதற்காகக் கட்டப்பட்ட பொய்கள் என்பதுதான் வரலாற்றுக் குறிப்புகள் நமக்கு அடையாளம் காட்டுகின்றன.

இந்தியக் காங்கிரசுக் கட்சியின் வரலாற்றில் காந்தியார் செல்வாக்குமிக்க தலைவராக வலம் வந்த போது, இராஜாஜியின் மகளை காந்தி மகனுக்கு மணம் முடித்தார். காந்தி சில காலக்கட்டங்களில் இராஜாஜி தனது மனசாட்சி எனக் குறிப்பிட்டுள்ளார். இந்தியாவினுடைய முதல் இந்திய கவர்னர் ஜெனரல் எனும் பதவியும் வகித்தவர் இராஜாஜி.

இந்திய அரசமைப்புச் சட்டம் உருவான போது அண்ணல் அம்பேத்கர் அரசமைப்புச் சட்ட அவையின் வரைவுக்

குழுவின் தலைவராக இருந்த போது இருவரும் சந்தித்து அரசமைப்புச் சட்டம் தொடர்பாகப் பல கருத்துகளைப் பரிமாறிக் கொண்டனர்.

அண்ணல் அம்பேத்கர், நான் இராஜகோபாலாச்சாரி யாரைப் பலமுறை அக்காலக்கட்ட நிகழ்வின்போது, சந்தித் துள்ளேன். ஒரு சந்திப்பின் போது, உருவாகி வருகின்ற அரசமைப்புச் சட்டம் பற்றித் தனது கருத்தை வெளிப்படுத்தி னார். என்னிடம், 'நீங்கள் ஒரு பெரும் தவறைச் செய்கிறீர்கள். இந்தியா முழுவதுமுள்ள எல்லா பகுதிகளுக்கும் சமப் பிரதிநிதித்துவம் அளிக்கும் ஒரு கூட்டாட்சி அமைப்பு இயங்க முடியாது. அப்படிப்பட்ட கூட்டமைப்பில் பிரதமரும் குடியரசுத் தலைவரும் எப்போதுமே இந்தி பேசும் பகுதிகளிலிருந்துதான் தேர்ந்தெடுக்கப்படுவார்கள். இரண்டு கூட்டமைப்புகளை நீங்கள் உருவாக்க வேண்டும். ஒரு கூட்டமைப்பை வட நாட்டிற்கும் ஒரு கூட்டமைப்பைத் தென் நாட்டிற்கும் உருவாக்க வேண்டும். வடக்கும் தெற்கும் இணைந்த ஒரு பெரும் கூட்டமைப்பில் மூன்று அதிகாரங்கள்தான் இருக்க வேண்டும். அந்த அமைப்பில் இரண்டு கூட்டமைப்புகளுக்கும் சமமான பிரதிநிதித்துவம் அளிக்கப்பட வேண்டும்' என்று சொன்னார். இந்தக் கருத்துகள்தான் இராஜகோபாலாச்சாரி யின் உண்மையான எண்ணங்களாக இருந்தன. இவை உள்ளார்ந்த இதயத்திலிருந்து ஒரு காங்கிரசுக்காரரின் எண்ண வெளிப்பாடாக அமைந்தது. இந்தியா வடக்கு, தெற்கு என உடையும் எனக் குறிப்பிட்ட ஒரு தீர்க்கதரிசியாகவே நான் இராஜகோபாலாச்சாரியாரைப் பார்க்கிறேன். இராஜகோபாலாச்சாரியாரின் கணிப்பு பொய்யாக வேண்டும் என நாம் எல்லாவற்றையும் செய்ய வேண்டும்.

''அமெரிக்காவில் வடக்கு, தெற்கு மாநிலங்களுக் கிடையே நடந்த உள்நாட்டுப் போரை நாம் மறந்துவிட முடியாது. வடக்கிற்கும் தெற்கிற்கும் ஒரு உள்நாட்டுப் போர் கூட நடக்கலாம். காலம் அத்தகைய மோதல்களுக்கான அடிப்படைகளைக் கொடுக்கலாம். வடக்கிற்கும் தெற்கிற்கும் மாபெரும் பண்பாட்டு வேறுபாடுகள் இருப்பதை மறந்துவிட முடியாது. அந்த பண்பாட்டு வேறுபாடுகள் பெருமளவில் பற்றி எரியக்கூடியது'' என இராஜாஜியுடன் நடந்த உரை யாடலை விளக்கியுள்ளார்.

இராஜாஜி அன்று கணித்ததில் ஒன்று இன்று நடந்து விட்டது. 1950லிருந்து இந்தியக் குடியரசுத் தலைவர், துணைக் குடியரசுத் தலைவர் பதவிகளில் வடநாட்டு தென்னாட்டுத் தலைவர்கள் மாறி மாறி பதவி வகித்துள்ளனர். ஆனால் இந்த மரபு கடந்த 15 ஆண்டுகளாக முறியடிக்கப் பட்டு வருகிறது. குறிப்பாக, குடியரசுத் தலைவராக அப்துல் கலாம் பதவிக்காலம் 2007இல் முடிந்த பிறகு இன்றுவரை தென் மாநிலங்களிலிருந்து குடியரசுத் தலைவர் தேர்ந்தெடுக்கப்படவில்லை. 1997முதல் துணைக் குடியரசுத் தலைவராகத் தென் மாநிலங்களைச் சார்ந்த வெங்கய்ய நாயுடு தவிர இன்றுவரை யாரும் தேர்ந்தெடுக்கப்பட வில்லை. பா.ச.க. தலைமையிலான மோடி அரசு முதல் முறையாகக் குடியரசுத் தலைவரும் துணைக்குடியரசுத் தலைவரும் வட மாநிலங்களிலிருந்து தேர்ந்தெடுத்துள்ளது.

ஒன்றிய அரசின் அதிகாரங்கள் மேலும் மேலும் குவிக்கப்பட்டு வருகின்றன. வட மாநிலங்கள் போதிய பொரு ளாதார வளர்ச்சியைப் பெறவில்லை. நேர்முக, மறைமுக வரிகள் வருவாய், ஒன்றிய அரசிற்குக் கிடைக்கும் வரி வருவாய் ஆகியவற்றில் பெரும்பகுதி 3 மாநிலங்களில்- தமிழ்நாடு, கர்நாடகா, ஆந்திரா மாநிலங்களிலிருந்து பெறப்படுகிறது. மக்கள் தொகையைக் கட்டுப்படுத்துவதில் தென் மாநிலங்கள் பெரும் வெற்றிகளைப் பெற்று வருகின்றன. ஆனால் வட மாநிலங்களில் மக்கள் தொகை தொடர்ந்து அதிகரிப்பதால் இந்தியப் பொருளாதாரத்திற்குப் பெரும் பாதிப்பை ஏற்படுத்துகிறது. தென் மாநிலங்களுக்குக் குடிபெயர்ந்த வட மாநிலத் தொழிலாளர்களின் எண்ணிக்கை ஏறக்குறைய ஒரு கோடிக்கு மேல் இருக்கும் எனக் கணக்கிடப்படுகிறது.

ஒன்றிய அரசு மாநிலங்களிலிருந்து பெறப்படும் நிதியா தாரங்களைப் பிரித்துக்கொடுப்பதில் தொடர்ந்து தென்மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. அதேபோன்று ஒன்றிய அரசின் தனித்திட்டங்களின் நிதி ஒதுக்கீடு பெருமளவில் வட மாநிலங் களுக்குத்தான் செல்கின்றன. நாடாளுமன்ற உறுப்பினர் களின் எண்ணிக்கையிலும் வட மாநிலங்கள் குறிப்பாக இந்தி பேசும் மாநில மக்களைக் கொண்ட மாநிலங்கள்தான் அதிக அளவு உறுப்பினர்களைக் கொண்டுள்ளன. உச்சநீதிமன்றத்தின் தலைமை நீதிபதிகளாகப் பொறுப்பேற்ற 50 நீதிபதிகளில் இதுவரை தென்மாநிலங்களைச் சேர்ந்த 6 நீதிபதிகள் மட்டுமே நியமிக்கப்பட்டுள்ளனர்.

இவ்வாறு வட மாநிலங்கள் போற்றப்படுகின்றன. தென் மாநிலங்கள் புறக்கணிக்கப்படுகின்றன. ஒன்றிய அரசு உருவாக்குகிற இத்தகைய இடர்பாடுகளுடன் தென்னக மாநிலங்கள் மானுட மேம்பாட்டுக் குறியீடுகளின் தரவரிசைப் பட்டியலில் முதல் மூன்று இடங்களில் தமிழ்நாடு, கேரள மாநிலங்கள் தொடர்ந்து இடம்பெற்று வருகின்றன.

**தமிழ்நாட்டின் ஆளுநர் இரவி அண்மைக்காலமாகத் தொடர்ந்து ஆதிக்கச் சாதியினரை உயர்த்தியும் ஒடுக்கப்பட்ட வர்களைத் தாழ்த்தியும் எழுதப்பட்ட சனாதனக் கருத்துகளை முன்னிறுத்தி வருகின்றார். தமிழ் நாடு எனச் சொல்வது இந்திய ஒற்றுமைக்கு எதிரானது எனும் கருத்தையும் கூறிவருகிறார். இக்கருத்துகள் எல்லாம் ஓர் ஆளுநரின் கருத்தாக எடுத்துக் கொள்ள முடியாது. ஒன்றிய அரசின் ஆதரவில்லாமல் இது போன்ற கருத்துகளை ஆளுநர் தெரிவிக்க முடியுமா? இணைய வழி சூதாட்டத்தைத் தடைசெய்யும் சட்டத்திற்குக் கையொப்பம் வழங்காமல் இருப்பது ஒட்டுமொத்த தமிழ்நாட்டு மக்களின்**

**உரிமைகளுக்கு எதிரானது என்பதை ஒன்றிய அரசு பொறுப்பில் இருக்கின்ற பிரதமருக்கும் உள்துறை அமைச்சருக்கும் தெரியாதா? சமஸ்கிருதத்தைப் போற்றுவது இந்தியைத் திணிப்பது ஒன்றிய அரசின் நிதிஒதுக்கீட்டில் தமிழ் மொழியைப் புறக்கணிப்பது இந்திய ஒற்றுமைக்கு வழிவகுக்குமா? அல்லது இராஜாஜி அண்ணல் அம்பேத்கரிடம் குறிப்பிட்டது போல வடநாடு தென் நாடு மோதலுக்கு வழிவகுத்துவிடும் அல்லவா!**

பா.ச.க.வினர் கூறிவரும் ஒரே மொழி, ஒரே மதம், ஒரே நாடு, ஒரே தேர்தல் போன்ற கருத்துகள் மேலும் இந்தியாவின் ஒற்றுமையைச் சீர்குலைத்துவிடும். இதுவரை ஒன்றிய-மாநில அரசுகளின் உறவுகளைப் பற்றி ஆய்வு செய்த வல்லுநர் குழுக்களின் பல அறிக்கைகள் வெளி வந்துள்ளன. ஆனால் இன்று வரை ஆக்கப்பூர்வமான எந்த ஒரு நடவடிக்கையும் இவ்வறிக்கைகளின் பரிந்துரைகளின்படி ஒன்றிய அரசால் எடுக்கப்படவில்லை.

பிரதமராக வாஜ்பாய் இருந்த காலத்தில் நீதிபதி வெங்கடாச்சலய்யா தலைமையில் அமைக்கப்பட்ட 11 உறுப்பினர்களைக் கொண்ட சட்ட வல்லுநர்களின் பின்வரும் கருத்தை ஒன்றிய அரசு ஏற்குமா?

வலிமையான ஓர் ஒன்றிய அரசும் வலிமையான மாநில அரசுகளும் அமைவதால் பிளவு ஏற்படாது என இக்குழு கருதுகிறது. இரண்டுமே வலிமையாக அமைய வேண்டும். ஒன்றிய அரசிற்கும் மாநில அரசிற்கும் உள்ள உறவு, ஒட்டுமொத்த உடலுக்கும் அதனுடைய இதர உறுப்புகளுக்கும் உள்ள தொடர்பு போன்றதாகும். உடல் நலமாக இருப்பதற்கு அதனுடைய உறுப்புகள் வலிமையாக அமைய வேண்டும். இன்றைக்குக் காணப்படுகிற பல பிரச்சினைகளுக்கு முதன்மையான காரணம் அதிகாரக் குவியலும் அதிகாரம் தவறாகப் பயன்படுத்துவதுமே ஆகும் என இக்குழு கருதுகிறது. (The Commission feels that there is no dichotomy between a strong Union and strong States. Both are needed. The relationship between the Union and States is a relationship between the whole body and its parts. For the body being healthy it is necessary that its parts are strong. It is felt that real source of many of our problems is the tendency of centralization of powers and misuse of the authority. (Report of the National Commission to Review the Working of the Constitution, 2003, p.152)

வாஜ்பாயை மதிப்பவர்களாக இருந்தால் மக்களின் உரிமைகளைப் பாதுகாக்கும் மாநிலங்களின் உரிமைகளை அளிக்க உரிய அரசமைப்புச் சட்டத்திருத்தத்தின் வழியாக மேற்கொள்ள வேண்டும். மேற்கொள்வார்களா? இந்திய ஒற்றுமையைச் சீர்குலைப்பார்களா? ❖

வேலூர் வி.ஜி.ராவ்நகர் ஒருங்கிணைந்த பகுதிகள் குடியிருப்போர் நலச்சங்கம் மற்றும் மூத்த குடிமக்கள் நலச்சங்கம் சார்பில்

## பொங்கல்-திருவள்ளுவர் நாள் விழா



திருவள்ளுவர் ஆண்டு தைத் திங்கள் 12ஆம் நாள் (26.01.2023) அன்று குடியிருப்போர் நலச்சங்கமும் மூத்த குடிமக்கள் சங்கமும் இணைந்து வி.ஜி.ராவ் நகரில் உள்ள சமுதாயக் கூடத்தில் பொங்கல் மற்றும் திருவள்ளுவர் நாள் விழா சிறப்பாகக் கொண்டாடப்பட்டது.

பேராசிரியர் இர.நடராசன் தலைமையில் விழா தொடங்கியது. முதலில் அங்குள்ள நடனப்பள்ளி மாணவிகள் எழிலார்ந்த பரத நாட்டியம் ஆடி அனைவரையும் மகிழ்வித்தனர். சிறுவர்கள் சிலம்பம் விளையாடிக் காட்டினர். நிகழ்ச்சியில் தமிழ்நாடு வணிகர் சங்கங்களின் பேரமைப்பின் வேலூர் மாவட்டத் தலைவரும் திருக்குறள் மன்றத் தலைவருமான திரு.இரா.ப.ஞானவேல் திருக் குறளின் சிறப்புகள் பற்றி உரையாற்றினார். தொடர்ந்து திரு.வாலாசா வல்லவன் பொங்கல் விழாச் சிறப்பு பற்றி உரையாற்றினார்.

மழலையர் பள்ளி, தொடக்கப்பள்ளி, உயர் நிலை, மேல்நிலைப் பள்ளி மாணவர்களுக்கு நடத்தப் பெற்ற திருக்குறள் ஒப்புவித்தல் போட்டி, ஓவியப் போட்டி, பேச்சுப் போட்டி ஆகியவற்றில் வெற்றி பெற்ற மாணவர்களுக்கு நூல்கள் பரிசளிக்கப் பெற்றது. அப்பகுதி மக்கள் பங்கேற்புடன் விழா சிறப்பாக நடைபெற்றது. விழாக் குழுத் தலைவர் மு.சுவாமிநாதன், விழாக்குழுச் செயலாளர் இரா.வேல்வீரன், மூத்தக் குடிமக்கள் சங்கத் தலைவர் நா.யோகானந்தம் மற்றுமுள்ள பொறுப் பாளர்கள் விழாவினை சிறப்பான முறையில் ஏற்பாடு செய்து நடத்தியது பாராட்டுக்குரியதாகும்.

# தமிழ் மொழி உணர்ச்சியும் தமிழ்நாட்டு உணர்ச்சியும்

- பொழிலன்

தமிழர்களுக்கு மொழி உணர்ச்சி அதிகம் என்பதாகப் பிற மொழியினர் கருதுகின்றனர்.

தமிழர்களுக்கு மொழி உணர்வே இல்லை என்பதாகத் தமிழிய உணர்வு சார்ந்த அறிஞர்களும் இயக்கத்தினர்களும் குறைபட்டுக்கொள்கின்றனர். இந்த இரண்டு கருத்துகளிலுமே உண்மை உண்டு என்றாலும் அதில் எது முழு உண்மை என்று அறிவதற்கு முன்பாகத் தமிழர்களுக்கு மொழி உணர்ச்சி தேவையா இல் லையா என்பது குறித்தும் அறிய வேண்டி இருக்கிறது. மொழி என்பதே கருத்துப் பரிமாற்றத்திற்குரிய ஒரு கருவிதான் என்ற அளவில் பேசப்பட்ட கருத்துகள் உண்டு.

ஒரு மொழியில் பிற மொழி கலப்பதை மறுப்பது 'தூய்மைவாதம்'. அது ஒரு மொழி வெறி என்பதான கருத்துகளும் உண்டு,

மொழி என்பது மாந்தனால் உருவாக்கப்பட்ட ஒரு கருவி என்றளவோடு கருதிட முடியாது. கருவி அல்லது பொருள்களுக்குள் அது படைக்கப்பட்ட தேவையின் உள்ளடக்கம் மட்டுமே இருக்கும்.

ஆனால் மொழி அப்படி அல்லாது குமுகத்தின் அனைத்து வளர்ச்சி நிலைகளிலும் விரிந்து வளர்ந்து கொண்டே இருக்கிறது. மொழிக்குள் வரலாறு இருக்கிறது. பண்பாடு இருக்கிறது. அறிவியல் இருக்கிறது. அரசியல் - பொருளியல் என அனைத்தும் இருக்கின்றன.

ஒவ்வொரு சொல்லும் அவை அனைத்தையும் வெளிப்படுத்திக் காட்டுகிறது. ஒரு மொழியில் கலந்து விட்ட பிற மொழிச் சொல் கூட அந்த மொழிக்குரிய மக்களின் வாழ்நிலையை, அடிமை நிலையை, உரிமை நிலையைச் சுட்டிக்காட்டவே செய்யும். அரசு, அரசன்- எனும் சொற்களின் முந்துநிலைகளில் அரைசு, அரைசன்-எனும் வளர்ச்சி நிலைவழித் தொடக்கக் காலங்களில் அதிகாரம் படைத்தவன்-மக்களை அடக்கி யிருந்த செய்தியைச் சொல்வதைக் காணலாம்.

'அராஜகம்' - எனும் பிறமொழிச் சொல் கொடுமை எனும் பொருளோடு நில்லாது அரசனுக்கு மாறான (அ+ராஜகம்) எனும் சொற்பொருளையும் கொண்டிருப்பதை உணரலாம் அதன் வழி அரசனுக்கு மாறானதே கொடுமையானது என்கிற கருத்தும், அரசனோடு உடன்பட்டிருப்பதே சரி என்றுமான வகையில் வந்தேறி ஆட்சியர்கள் வழி உருவாக்கப்பட்ட அச்சொல் பல வரலாற்று விளக்கங்களையும் தருகிறது. பிறமொழிச் சொற் கலப்பு என்பது பிறமொழியினரின் வந்தேறிய அதிகாரத்தாலும் ஊடுருவலாலுமே இங்கு ஏற்பட்டிருக் கிறது என்பதை அறிய வேண்டும்.

தமிழில் சொற்கள் இல்லை என்பதற்காகப் பிற மொழிச் சொல்லைக் கடன் பெற்றுப் பயன்படுத்திக் கொள்கிற வழக்கம் தமிழ் மொழிக்குரியதாக இல்லை.

இந்நிலையில், ஒவ்வெரு சொல்லுக்குப் பின்னும் ஒரு வகுப்பின் (வர்க்கத்தின்) அடையாளம் மட்டு மின்றி ஒரு காலத்தின், ஓரிடத்தின், ஒரு குலத்தின், ஓர் இனத்தின் எனப் பல்வேறு நிலைகளை உணரத் தக்க பின்புலங்கள் உள்ளன.

எனவே, மொழி ஒரு கருவியாக மட்டுமின்றி அரசியலை, குமுகவியலை, வாழ்வியலை, பொருளியலை என அனைத்தையும் இணைத்துக் காட்டும் அடை யாளமாகவும் இருப்பதை உணரமுடியும். எனவே, மொழி மக்கள் இனத்தின் உணர்வுக்குரியதாக அமை கிறது.

பிறமொழிக் கலப்பென்பது திணிக்கப்படுகிற பிறமொழி அதிகாரத்தை உணர்த்துகிறது. எனவேதான் மொழி உரிமை உணர்ச்சி என்பது திணிக்கப்படுகிற பிற மொழி அதிகாரத்திலிருந்து தற்காத்துக் கொள்ளுகிற ஒரு மக்கள் இனத்திற்கு அடிப்படையாகவும் மாறுகிறது.

தன் தாய்மொழிவழிக் கல்வியை இழக்கிறபொழுது, தன் தாய்மொழி வழி வழிபாடு இழக்கப்படுகிற பொழுது, தன் தாய்மொழி வழி அரசாட்சி இழக்கப் படுகிற பொழுது இழப்புக்குள்ளான மொழிக்காக, அந்த மொழியின மக்கள் உணர்வெழுச்சி கொண்டு போராடுகிறார்கள்.

அப்படியான உணர்வெழுச்சி தன் தாய்மொழி உயர்ந்தது என்கிற காரணத்திற்காக மட்டுமே வருவதன்று. தன் தாய் மொழி உயர்ந்தது அல்லாத எளிய மொழி யாக இருந்தாலும் கூட அத்தகைய உணர்வெழுச்சி வரவே செய்யும்.

தாய்மொழி என்பதை அம்மா - என்கிற பொருளில் தாயின் மொழியாகப் பலரும் கருதக்கூடும். ஆங்கிலத் தில் புலப்படுத்துவது போல் அது தாயின் மொழி என்பதானப் பொருளுடையதாக மட்டுமே தமிழில் இல்லை. தமிழில் தாய்மொழி என்பதற்கு உரிமை மொழி என்கிற உட்பொருள் உள்ளதையும் உணர்தல் வேண்டும். தாய் என்பதற்கே உரிமை உடையவர் - என்கிற பொருள் உண்டு. தாயம் என்கிற விளையாட்டில் கூட அவ்விளையாட்டில் நுழைந்து விளையாடு வதற்கான உரிமையைப் பெறுவதே 'தாயம்' - என்கிற பெயரில் அமைந்திருப்பதை ஒப்பிட்டு அறியலாம்.

எனவே, ஒரு மொழியைத் தாய்மொழியாகக் கொண்டவருக்கு அந்தத் தாய்மொழியின் உரிமையே

அடிப்படையானதேயன்றி அது சிறந்த மொழியா அல்லது சிறப்பற்ற மொழியா என்பது முதன்மையான தில்லை. அந்த வகையில் தமிழர்க்குத் தாய்மொழி தமிழின் மீதான உரிமை முகாமையானது.

அஃதோடு மட்டுமன்றி நம் தாய்மொழி தமிழோ உலக மொழிகளுக்கெல்லாம் மூல மொழியாகவும் மூவாயிரம் ஆண்டுகளுக்கும் முற்பட்ட இலக்கண இலக்கியச் சிறப்புடைய மொழியாகவும் இன்றைய அறிவியல் வளர்ச்சிகளையும் எளிதே உள்வாங்கவும் பெயர்த்து வழங்கிடும் வகையிலும் திறனுடையதாகவும் இருக்கிற வகையில் தமிழர்க்கான தமிழ் மொழிக் காப்புணர்வும், உரிமை மீட்புணர்வும் அதிகமாகவே இருக்க வேண்டியிருக்கிறது.

அந்நிலை, ஒரு பக்கம் இருக்க தமிழர்களின் தாய்மொழி உணர்ச்சி என்பது தமிழ் மொழியின் உரிமை மீட்பு உணர்ச்சியை வெளிப்படுத்திக் காட்டுவதாக அமைந்திருக்கிறது.. தாங்கள் இழந்துவிட்டிருக்கிற தமிழ் மொழி உரிமைகளை மீட்டுக் கொள்வதற்காக அமைந்திருக்கிறது.

தமிழ் மொழி உரிமை இழப்பு என்பது கல்வி உரிமை வழியாக, வழிபாட்டுரிமை வழியாக, அரசின் அலுவல்கள் பயன்பாட்டுரிமை வழியாக, ஞாய மன்ற நடைமுறைப்படுத்த உரிமைகள் வழியாக - என எல்லா வகையிலும் இருந்து வருகிறது.

உலகின் அனைத்து அறிவியல் வளங்களையும் எதிர்கொள்ளும் ஆற்றல் பெற்றிருந்தும் தமிழைக் கல்வி மொழியாகத் தமிழர்களால் பெற்றிருக்க முடியவில்லை. சமயங்களற்ற அற வாழ்க்கையையும், இயற்கை ஆற்றல்களை வழிபடுகிற நிலை தொடங்கி பின்னர் அவையே சமயக் கருப்பொருள்களாக மாறி சிவனியம் (சைவம்), மாலியம் (வைணவம்) எனப் பல சமயங்களாக உருவெடுத்து அவற்றுக்கான பல்லா யிரக்கணக்கான வழிபாட்டுப் பாடல்கள் அமைக்கப் பெற்றிருந்தும் தமிழர்கள் தமிழ் வழி வழிபாடுகளைச் செய்ய இயலவில்லை.

**தமிழ்நாட்டின் அரசு அலுவல் மொழியாக முழுமையாகத் தமிழ் நடைமுறைக்கு உள்ளாகவில்லை. தமிழ்நாட்டின் பெருந் தொழில்கள், பெரும்பான்மை அரசு அலுவலகங்கள் எல்லாம் இந்திய அரசின் கட்டுப்பாட்டிலும் பிற பன்னாட்டு முதலை களிடமும் முடங்கிக் கிடப்பதால் தமிழ் முழுமையான ஆட்சி மொழியாகவில்லை.**

**தொடர்வண்டித் துறை, அஞ்சல் துறை, வானூர்தி, துறைமுகம், வருமானவரித் துறை, நெடுஞ்சாலைத்துறை, கனிம வளங்கள் துறை, பல்கலைக்கழக உயர் கல்வித் துறை, ஆட்சியர்–காவல் உயர் அதிகாரத்துறை–என நூற்றுக்கு 80 விழுக்காட்டுத் துறைகள் அனைத்தும் இந்திய அரசின் கட்டுப் பாட்டில் அடங்கிக் கிடக்கின்ற நிலையில் தமிழ்நாட்டின் அரசு அதிகாரம் இழந்து சில எடுபிடி அதிகாரங்களை மட்டுமே வைத்துக் கொண்டிருக்கிற நிலைக்குள் மட்டுமே தமிழ் முடங்கிக் கிடக்கிறது.**

எஞ்சிய ஒரு சில அதிகாரங்களிலும் அக்கறை செலுத்தித் தமிழையே வழிப்படுத்துகிற முயற்சியைத் தமிழ்நாடு அரசும் முனைப்புடன் செய்திடவில்லை. இப்படியான நிலையில் தமிழ் உணர்ச்சி என்பது தமிழ் இலக்கிய உணர்ச்சியாகவோ, தமிழ்வழிச் சமய உணர்ச்சியாகவோ, தமிழ் உறவாடல் உணர்ச்சி யாகவோ மட்டுமன்றி தமிழைத் தமிழர்களின் வாழ் வியல் நிலைகளில் உள்ள அனைத்துப் பயன்பாடு களுக்குமான வாழ்க்கை மொழியாகக் கொண்டு வருவதற்கும் போராட வேண்டி இருக்கிறது.

**தமிழ் உணர்ச்சி என்பது தமிழ் உரிமை உணர்ச்சியாக மாற வேண்டி இருக்கிறது. தமிழ் உரிமை உணர்ச்சி என்பது தமிழ் மொழி வழியான உரிமைகளை மீட்டெடுக்க வேண்டிய உணர்ச்சியாகிறது.**

அஃதாவது தமிழ் உணர்ச்சி என்பது தமிழர்களின் மொழி உணர்ச்சி என்ற அளவோடு நில்லாமல். தமிழர்களின் உரிமைக்குரிய தமிழ்நாட்டுத் தேசிய உரிமை உணர்ச்சியாகவும் மாறுகிறது. “மொழி என்றால் உடலின் நரம்பு; நம் முத்தமிழ் மொழியோ உயிரின் வரம்பு”-என்ற பாவேந்தரின் கூற்றுப்படி தமிழ் உரிமை தமிழர்க்கான வரம்பை உறுதிப்படுத்தும் உரிமையாக இருக்கிறது. தமிழர்களின் தாய் நிலமான தமிழ்நாடு என்கிற தேசிய அதிகார உரிமைகளை இழந்து இருக்கிற தமிழர்கள், தங்களின் தமிழ்மொழி உரிமைகளை மொழி அளவோடு மட்டும் மீட்டெடுத்து விட முடியாத நிலையில் அடிமைப்படுத்தப்பட்டிருக்கிற அவல நிலை அறியப்பட வேண்டியதாகிறது.

தமிழின் உணர்ச்சியைத் தமிழ்த் தேசத்தின், தமிழ்நாட்டின் உரிமை உணர்ச்சியாகவே பாவேந்தரும் பாவலரேறுவும் தமிழர்களுக்குப் பயிற்றுவிக்கிறார்கள். தமிழ் அறிஞர்கள், தமிழ்ப் படைப்பாளர்கள், ஆய்வா ளர்களிடமிருந்து அவர்கள் தனித்துத் தமிழின் உயிர் உரிமை மலர்ச்சிக்குக் குரல் எழுப்பிக் களம் அமைக்கிற இடம் அதுவாகவே இருக்கிறது.

**தமிழைக் கல்வி மொழியாக ஆக்க வேண்டும் என்றால் கல்வி உரிமையைத் தமிழ்நாட்டிற்கே முழுமையாக ஆக்குகிற முயற்சி முன்னெடுக்கப்பட்டாக வேண்டி இருக்கிறது. சிபிஎஸ்சி, கேந்திரிய வித்யாலயாக்கள், உயர் கல்வி நிறுவனங்கள், பல்கலைக்கழக அதிகாரங்கள், உயர்கல்வி உயர் பணிவாய்ப்பு களுக்கான நுழைவுத் தேர்வுகள் என அனைத்தும் இந்திய அரசின் கட்டுப்பாட்டுக்குள் தமிழ்நாட்டின் கல்வி உரிமைகளையே அடிமைப்படுத்தி வைத்திருக்கிற கொடுஞ்சூழலில் தமிழ்நாட்டிற்கே**

**முழுமையாகக் கல்வி உரிமையை மீட்டெடுக்காமல் தமிழ் வழிக் கல்வியை முழுமைப்படுத்த இயலாது.**

தமிழ்நாட்டு அரசுப் பள்ளிகள் வழியாக வலியுறுத் தப்படும் தமிழ் வழிக் கல்வியானது, அரைகுறை உரிமைகள் மட்டுமே கொண்ட அதிகாரங்களுக்குட்பட்ட நிலையில் உயர்கல்வி வரைகூடத் தாக்குப் பிடிக்க இயலாமல் தடுமாறுகிறது. எனவே, தமிழ் முழுமை யான கல்வி மொழியாகத் தொடக்கக் கல்வி முதல் ஆராய்ச்சிக் கல்வி வரை அமைய வேண்டும் என்றால் கல்விக்கான அதிகாரம் முற்றும் முழுமையாகத் தமிழ் நாட்டு அரசுக்குட்பட்டதாக மீட்கப்பட்டாக வேண்டும்.

தமிழ்நாட்டிற்கே கல்வி உரிமை என்கிற அதிகாரத் தைப் பெறாமல் தமிழ் வழிக் கல்வி என்கிற முழக் கத்தை மட்டும் முன்னிறுத்திப் போராடுவது அரைக் கிணறு தாண்டுகிற முயற்சியே. எனவே, தமிழை மீட்கிற உணர்ச்சி என்பது தமிழ்நாட்டின் உரிமை மீட்பு உணர்ச்சிகளோடு பொருந்தியது.

தமிழ்நாட்டு அதிகாரங்களுக்கான உரிமைகளை மீட்கிற உணர்ச்சி கொள்ளாமல் தமிழ் மொழி உணர்ச்சியை மட்டும் பெற்றிருப்பது தமிழ் மொழியைக் காத்துக் கொள்ளுகிற அனைத்து நிலைகளிலுமான மொழி உரிமைகளை நிலைப்படுத்திக் கொள்ளுகிற உணர்ச்சி யாக அமையாது.

அப்படி அமையாத நிலையில் தமிழர்கள் மொழி உணர்ச்சி கொள்ள வேண்டும் என்று வலியுறுத்துவது தமிழர்களைத் தமிழ் இலக்கியச் சுவையுடையவர் களாக, தமிழ் மொழிப் பரப்பின் சிறப்புகள் உணரப் பெற்றோராக மாற்றுமேயன்றி தமிழ் மொழி உரிமை மீட்பவர்களாக, தமிழ் மொழி சார்ந்த குமுக அவலங் களை அவற்றின்வழித் தமிழ்நாட்டு உரிமைகளை மீட்பவர்களாக மாற்றி விடாது.

தேசம் என்பது மொழியால் மட்டுமே கட்டப்படுவ தன்று. தேசத்தின் அடையாளக் கூறுகளுள் மொழி முதன்மையானதே ஆயினும் மொழி உணர்வால் மட்டுமே மொழித் தேசத்தின் அதிகார உரிமைகளைத் தட்டி எழுப்பி விடவோ மக்களுக்கு விளக்கப்படுத்தி விடவோ இயலாது.

**மொழி சார்ந்த தேசிய வரலாற்றின், பண்பாட்டின், அரசியலின், பொருளியலின் வழிபட்ட அந்தத் தேசத்தின் உரிமை உணர்வுகளைத் தட்டி எழுப்பி மக்களுக்கு விளக்கப்படுத்தியுமே ஒரு தேசத்தின் அனைத்து உரிமைகளையும் மீட்டுப் பெற முடியும்.**

எனவே, தமிழ் உணர்ச்சி என்பது தமிழ் மொழியின் உணர்ச்சி என்ற அளவில் மட்டுமின்றி தமிழ்மொழி சார்ந்த தமிழ்த் தேசத்தின் தமிழ்நாட்டின் உரிமை உணர்ச்சியாகவும் உணரப்படவும் பரப்பப்படவும் வேண்டியதாகிறது. ❖

## குமாரப்பாளையத்தில் மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம்



ஈரோடு அருகே உள்ள குமாரப்பாளையத்தில் மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நாள் பொதுக் கூட்டம் 27.1.2023 அன்று மாலை நடைபெற்றது. குமாரப்பாளையத்தில் 1965-இல் நடைபெற்ற இந்தி எதிர்ப்புப் போரில் அரசின் பதிவுப்படி 15 பேர் சுட்டுக் கொல்லப்பட்டு வீர மரணமடைந்தனர். அவர் களின் ஈகத்தைப் போற்றும் வகையில் சென்ற ஆண்டு 2022இல் மொழிப்போர் ஈகியர் நினைவுத் தூண் அமைக் கப்பட்டுள்ளது. மொழிப்போர் தியாகிகள் நினைவுத் தூண் அமைப்புக் குழுவினர் ஒவ்வொரு ஆண்டும் கட்சியைக் கடந்து மொழிப்போர் ஈகியர் வீரவணக்க நாள் நிகழ்வை சிறப்பாக நடத்தி வருகின்றனர். மொழிப்போர் தியாகிகள் நினைவுத் தூணுக்கு மலர் அஞ்சலி செலுத்திய பிறகு கூட்டம் தொடங்கியது.

மல்லை மு. இராமநாதன் தலைமைத் தாங்கினார். ஆ. பகலவன் வரவேற்புரையாற்றினார். நா. அன்பழகன் தொடக்க உரையாற்றினார். ‘சோளகர் தொட்டி’ நாவல் ஆசிரியர் வழக்குரைஞர் ச. பாலமுருகன், தோழர் கண குறிஞ்சி, 1965 மொழிப்போரில் கலந்துகொண்டு சிறைச்சென்று மீண்டுவந்த தோழர் சு. வடிவேலு ஆகியோர் உரையாற்றினர். இறுதியாக மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன், மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோர் சிறப்புரையாற்றினர்.

## கோவை கு. இராமகிருட்டிணன் அவர்களின் துணைவி இரா. வசந்தி மறைவு



தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் பொதுச் செயலாளர் கோவை கு. இராமகிருட்டிணன் அவர்களின் துணைவி இரா. வசந்தி அவர்கள் 20.1.2023 மறைவுற்றார் என்பதை ஆழ்ந்த வருத்தத்தோடு தெரிவித்துக் கொள்கிறோம். துணைவியை இழந்து துயரும் தோழர் கு.இராமகிருட்டிணன் அவர்களுக்கும் அவரது குடும்பத்தினருக்கும் த.பெ.தி.க. தோழர்களுக்கும் மா.பெ.பொ.க. சார்பில் மனம் கசிந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

- ஆசிரியர் குழு

# சிந்தனையாளன் பொங்கல் மலர் 2023 - ஒரு பார்வை

பேரா. **இர. நடராசன்**

**பா**ர்வையாளர்களில் ஒருவனாக இவ்வாண்டு நடைபெற்ற சிந்தனையாளன் பொங்கல் மலர்-2023 வெளியீட்டு விழாவில் கலந்துகொண்டேன். ஒரு விழா எவ்வாறு நடக்க வேண்டும் என்பதற்கு முன்மாதிரியாக இவ்விழா நடைபெற்றது எனக் கூறுவதில் எள்ளளவும் மிகையில்லை. பொதுவாக மலர்களில் வரும் அனைத்துக் கட்டுரைகளையும் ஒரே நேரத்தில் படித்து முடிப்பது என்பது இயலாத செயல். அதிலும், சிந்தனையாளன் கட்டுரைகளை முழுவதுமாகக் குறுகிய கால இடை வெளியில் படித்து முடிப்பதென்பது என்னைப் பொறுத்த வரை இதுதான் முதல்முறை. விழா ஏற்படுத்திய தாக்கம் அல்லது மலர் வெளியீட்டுக் குழுவின் அறிவிக் கையாக வாலாசா வல்லவன் வெளியிட்ட கருத்துகள் காரணமாகவும் இது நிகழ்ந்திருக்கக் கூடும். எப்படியா யினும் மலர் குறித்த என்னுடைய மதிப்புரைக்கு நான் எழுத வேண்டிய முன்னுரையாக இதனைப் பதிவு செய்ய விழைகிறேன்.

பொருளடக்கத்தில் கூறப்பட்டுள்ள 33 எண்களில், நான்கு கவிதைகளைத் தவிர மற்றவையனைத்தும் கட்டுரைகளே! இடையிடையில், சிறு சிறு கட்டங்களில், நறுக்குத் தெறித்தாற்போல் அரிய தகவல்கள் கோடிட்டுக் காட்டப்பட்டுள்ளன.

திராவிடர் இயக்கம் எதிர்கொள்ளும் சிக்கல்கள், தமிழரின் பண்பாட்டு மீட்சி, பா.ச.க. என்னும் அபாயம் ஆகியவை குறித்தும், பெரியாரியம், அம்பேத்கரியம் மற்றும் மார்க்சியம் ஒன்றாக இணைந்து பணியாற்ற வேண்டிய தேவை குறித்தும் கட்டுரைகள் விளக்குவ தாக வாலாசா வல்லவன் முகப்புரையில் குறிப்பிடுவது முற்றிலும் உண்மை.

குறளும் நானும் என்னும் தலைப்பில் குறளைப் பற்றிய பெரியாரின் திறனாய்வு இன்றைக்கும் அப்படியே பொருந்துகிறதே என வியப்படையாமல் இருக்க முடியவில்லை. பரிமேலழகரின் உரை காரணமாகப் பெரியார் திருக்குறள் பகுத்தறிவுக்கு ஏற்றதல்ல என்ற கருத்து கொண்டிருந்ததனையும், அதன் பின்னர் "பொது அறிவுள்ள மக்களோடு" பழகியதின் காரண மாகத் திருக்குறளை ஏற்றுக்கொண்டதனையும் பெரியார் மிகவும் நேர்மையாகப் பதிவு செய்துள்ளார். அஞ்சா மையும், நேர்மையும்தானே அவரின் படைக்கலன்கள்! கடவுள் வாழ்த்து குறித்தும் மனிதன் எப்படியிருக்க வேண்டும் என்பது குறித்தும் 1950-இல் பெரியார் எழுதியது இன்றும் நம் காதுகளில் ஒலித்துக் கொண்டிருக்கிறது.

400 உள்சாதிகளாகப் பிளவுபட்டுக் கிடக்கும் தமிழர் களை ஒரு செயல் திட்டத்தின் மூலம் ஒருங்கிணைக்க வேண்டிய தேவையை ஐயா ஆனைமுத்து அவர்களின் தமிழ்த்தேசத் தன்னுரிமை கட்டுரை விரிவாக எடுத்து ரைக்கிறது. மொழிவழித் தேசிய இனப் போராட்டத்தை முன்னெடுக்கும் உத்திகளாக மா.பெ.பொ.க. தோழர் களுக்கு அவர் வைக்கும் கருத்துகள் மார்க்சியத்தை முன்னிறுத்தும் அனைவருக்குமே தேவையானவை.

பார்ப்பனீயத்தின் ஒடுக்குமுறை என்ற தலைப்பில் அம்பேத்கர் பிராமணர்களது சித்தாந்தத்தின் அடிப்படை களைப் பட்டியலிடுகிறார். குறிப்பாகப் படிநிலையில் அமைந்த ஏற்றத்தாழ்வு, சூத்திரர்களை நிராயுதபாணி களாக்கிய தந்திரம், கல்வி, ஆட்சியதிகாரம், சொத்துரி மைகளை மறுத்தல், பெண் அடிமைத்தனம் ஆகிய நிலைத்த கோட்பாடுகளின் அடிப்படையில் கட்டமைக் கப்பட்ட பிராமணீய ஒடுக்குமுறை மனிதகுல உயர்வை மறுக்கிறது என்பது முன்னெப்போதையும்விட தற்போது அதிகம் உணரப்படுகிறது.

ஐவகை நிலங்களோடும் அவ்வவற்றிற்குரிய கடவுளரோடும் இணைந்திருந்த தமிழர் வாழ்வை ஆரியப் பார்ப்பனர் தமதாக்கிக் கொண்டு சனாதனச் சட்டங்களை மன்னர்கள் மூலம் நிறைவேற்றி வெகு மக்கள் கல்வியை மறுத்ததனை இரணியனின் கட்டுரை விளக்கிக் கூறுகிறது. ஆரிய அழுக்கைத் துடைப்பதில் வைகுண்டசாமி, நாராயணகுரு ஆகியோரின் பங்கைச் சுட்டிக்காட்டும் கட்டுரையாளர் வள்ளலாரின் பங்கையும் சேர்த்திருக்கவேண்டும் என்பது என் அவா.

தமிழ் அறமும் ஆரியப் பார்ப்பன அறமும் எவ்வாறு வெவ்வேறானவை என்பதனைப் பொழிலன், ஆத்தி சூடியில் தொடங்கித் தொல்காப்பியர் வழியாக விளக்குகிறார். சமற்கிருத அகராதி, இராசாசியின் விளக்கங்கள் எவ்வாறு சமயஞ் சார்ந்த விளக்கமாக அமைந்துள்ளன என்ப தையும் திருக்குறள் கூறும் அறம் தரும் வேறு பொரு ளையும் பாவலரேறு வழியில் விளக்கியுள்ள திறம் பாராட்டுக்குரியது.

பகுத்தறிவு வாதம் சோதிடத்தை எப்படி மறுதலிக் கிறது என்பதனை அறிவியல் பூர்வமாக நிறுவும் பேராசிரியர் நாகநாதன், மேலை நாட்டு அறிஞர்கள் துணையோடு கோள்கள், விண்மீன்கள் பற்றிய அரிய தகவல்களையும் தருகிறார். நெப்போலியன் தோல்விக்கு சோதிட நம்பிக்கையே காரணம் என்பது எனக்குப்புதிய தகவல். எத்தனை காலத்திற்கு முன்னர் நம் மூடச் செயல்களுக்கு நாம்தான் பொறுப்பு என்று ஷேக்ஸ்பியர் கூறியுள்ளார்.

துரை சித்தார்த்தன், இடதுசாரிகளின் சறுக்கல்களைப் பெரியார் கருத்துகளின் வழி நின்று விளக்கும் அதே நேரத்தில் மார்க்சியம்-பெரியாரியம் இணைந்து செயல்பட வேண்டியதின் அவசியத்தை சிறப்பாக விளக்கியுள்ளார்.

சாதி ஒழிக்கப்படாமல் தீண்டாமை ஒழிப்பு என்பது வெற்றுக்கூச்சல் என்பதனைத் தியாகுவின் கட்டுரை வெளிச்சம் போட்டுக் காட்டுகிறது. இந்துமத வெறிக்குள் மறைந்திருப்பது சாதிய வெறியே என்றும் தியாகுவின் கருத்து ஆய்விற்கு உட்படுத்தப்பட வேண்டும் என்றே நான் கருதுகிறேன். தாழ்த்தப்பட்டோர் இந்து சமூகத் திற்கு உள்ளேயா வெளியேயா என்பதும் விடை காணப்பட வேண்டிய வினா.

சாதியக் கட்டமைப்பை எளிய சொற்களில் நீதிபதி து.பரந்தாமன் விளக்கியுள்ளார். அரசமைப்புச் சட்டத்தின் சட்டக் கூறும் எவ்வளவு பெரிய மோசடி என்பதனை இக்கட்டுரை தெளிவாக்கியிருக்கிறது.

புள்ளிவிவரங்கள், தரவுகள் அடிப்படையில் கருத்து களை ஆணித்தரமாக வெளியிடும் வாலாசா வல்லவன் திருக்குறளும் சுயமரியாதை இயக்கமும் என்னும் தன்னுடைய கட்டுரையில் சாமி. சிதம்பரனாரில் தொடங்கி ஆனைமுத்து அய்யா ஈறாகக் குறள்நெறி பரப்பித் தொண்டாற்றிய தகவல்களை அகரவரிசைப் படித் தொகுத்தளித்துள்ள திறம் பாராட்டுக்குரியது. புலவர்களின் பரணில் இருந்த திருக்குறள் பொது வெளியில் தெருக்களில் உலவச் செய்தவர் பெரியார் என்பது பொருள் பொதிந்த கூற்று.

வள்ளலார் பரவலாகப் பேசப்பட்டுவரும் இந்நாளில் வேதம், ஆகமம் என்று வீண்வாதம் ஆடும் கூட்டத்தை வெளிக்கொணரும் முகத்தான், விடுதலை இராசேந்திரனின் கட்டுரை அமைந்துள்ளது. பிராமணிய அழிவில்தான் சாதி ஒழிப்பு அடங்கியிருக்கிறது. பெரியாரும் குன்றக் குடியாரும் எப்புள்ளியில் இணைகிறார்களோ, அதே புள்ளியில்தான் வள்ளலாருடன் பெரியாரும் இணை கிறார்கள் என்பது அருமையான பதிவு!

முடியரசனார் குறித்த செந்தலை கௌதமனின் கட்டுரை. ‘‘சீரங்கநாதனையும் தில்லை நடராசனையும்’’ என்னும் பாடலை எழுதியவர் முடியரசன் என்று சொல்லும் போது வியப்பு மேலிடுகிறது. முடியரசனின் கொள்கை உறுதிப்பாடு நமக்கெல்லாம் வழிகாட்டி.

இந்திய அரசியலில் வரலாற்றுத் திரிபுகள்தான் எத்துணை! எத்துணை! பேராசிரியர் கருணானந்தம் பல்கலைக்கழக நல்கைக் குழுவை அவருக்கே உரிய பாணியில் நையாண்டி செய்து அத்துடன் ‘விழிப்புணர் வுக்கான வரலாற்றுக் கல்வி’ என்னும் சொல்லாடல் மூலம் சமத்துவம் நோக்கி அவருடன் நம்மை அழைத்துச் செல்கிறார்.

பாரதிய சனதாக் கட்சி ஆட்சியில் பறிக்கப்படும் உரிமைகளைக் கண. குறிஞ்சி பட்டியலிடும் போது நெஞ்சம் பதைக்கிறது. அநியாயத்தைத் தடுக்காமல் அமைதி காத்தலும் ஒரு குற்றமே என்னும் அவரின் கூற்றுக்கு மறுப்பேது? தோழர் ஓவியா என்னும் பெண் விடுதலைப் போராளியின் அடுக்கடுக்கான வினாக்கள், பறிபோகும் இடஒதுக்கீடு உரிமை குறித்த இராமியாவின் எச்சரிக்கை, பெரியாரை மறுவாசிப்புச் செய்ய வேண்டுவதின் அவசியத்தை வலியுறுத்தும் திருமாவேலன் என இன்றைய காலகட்டத்திற்குப் பொருந்தி வரும் கட்டுரைகள் மலரை அலங்கரிக்கின்றன.

மோடியின் பாசிச முகத்தைத் திருமுருகன் காந்தி விளக்கும் போது நமக்கெல்லாம் தோன்றுவது இதுதான்: ‘‘சொல்லக் கொதிக்குதடா நெஞ்சம்!’’

மார்க்சிய மெய்யியலின் இன்றைய தேவை குறித்த கோச்சடையின் கட்டுரை கார்ப்பரேட்டுகளின் (கூட்டாண்மை) கைகளில் உலகப் பொருளாதாரமே சீரழிவதை உணர்த்துகிறது. கோச்சடையின் தமிழ்ச் சொற்கள் பயன்பாடு மிகச் சிறப்பாக உள்ளது.

இப்படியெல்லாமா மூடநம்பிக்கைகள் உள்ளன என்று பதறும் வகையில் அமைந்துள்ளது வந்தியத் தேவனின் கட்டுரை. அதிகாரத்தில் உள்ளவர்களால் பரப்பப்படும் தொற்றுநோய்க்கிருமிகள் மூடநம்பிக் கைகள்.

திரித்துக்கூறும் வரலாற்றுத் திரிபுகளிடையே ஆதித் தகரிகாலன் குறித்த முனைவர் ப.வெங்கடேசனின் நேர்த்தியான பதிவு பொன்னியின் செல்வன் திரைப் படம் மற்றும் நூல்கள் மறுபதிப்பு வந்துள்ள நிலையில் மிகவும் தேவையான ஒன்று.

மாநில உரிமைகளை மீட்டெடுக்க வேண்டும்; கல்வி மாநிலப் பட்டியலுக்கு மாற்றப்பட வேண்டும்; மதச்சார்பின்மை என்பதன் உண்மையான பொருள் என வலியுறுத்தப்படும் கருத்துகள் இன்றைய சூழலில் மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்தவை.

சுபவீயும் நானும், தாம்பரம் சுப்பிரமணி, பொன் னம்பலனாரின் மகள் செந்தமிழ்க்கொற்றி ஆகிய இரு கட்டுரைகளும் உணர்வுபூர்வமான மலரும் நினைவுகள்!

கவிதைகள் தேர்வு மிக அருமை.

இறுதிப் போர், கூவாய் கருங்குயிலே எழுச்சியூட்டும் கவிதைகள். பெருஞ்சித்திரனாரும் பாவேந்தரும் நம் கண்முன்னே நிற்கிறார்கள்.

அம்பேத்கர் குறித்த தமிழேந்தியின் கவிதைகள் தமிழேந்தியின் நினைவுகளை அலைமோதவிடுகிறது. நாம் வாழும் இரட்டை வாழ்க்கை சோதிவாணனின் கவிதையில் வெளிப்பட்டுக் கிடக்கிறது.

இந்தப் பொங்கல் மலர் அனைவரும் வைத்துப் பாதுகாக்க வேண்டிய கருத்துக் கருவூலம். எதிரிகளைக் கொள்கை வழியாக எதிர்க்கத் தேவையான வாளும் கேடயமும்!

மலரைப் படித்துக் கருத்துகளை உள்வாங்கிக் கொள்வீராக என்பதே தமிழ்க்குலத்திற்கு நான் விடுக்கும் வேண்டுகோள். ❖

# இடஒதுக்கீட்டின் அடிப்படை நோக்கங்கள் சிதைக்கப்படுவதன் தீமைகள்

ஆ. கலையரசன்

2022 நவம்பர் மாதத் தொடக்கத்தில் உச்ச நீதிமன்றம் பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு (E.W.S.) 10 விழுக்காடு இடஒதுக்கீடு அளிப்பதற்காக அரசமைப்புச் சட்டத்தில் 103ஆம் திருத்தம் செய்தது செல்லும் என்று தீர்ப்பளித்துள்ளது. பொருளாதாரத்தில் நலிந்த பிரிவினருக்கு இடஒதுக்கீடு செய்ததும் அதைத் தொடர்ந்து உச்சநீதிமன்றம் அளித்துள்ள தீர்ப்பும் இந்தியாவில் சாதி அடிப்படையில் இடஒதுக்கீடு எனும் ஏற்றுக்கொள்ளப்பட்ட கோட்பாட்டை திசைமாற்றி யுள்ளது.

பொருளாதாரத்தில் பின்தங்கிய நிலையை முதன் மைக் கூறாகக் கொண்டு சமூகக் கொள்கையைக் கட்டமைத்திட உடனடியாக ஒருமித்த இணக்கமானக் கருத்தை உருவாக்குவது என்பதை இந்தத் தீர்ப்பு உருவாக்கியுள்ளதாகத் தெரிகிறது. கடந்த இருபது ஆண்டுகளாக வேலை வாய்ப்பு இன்மையின் பெருக்கமும், உறுதியற்ற பொருளாதார நிலைமைகளின் நீட்சியும் பொருளாதாரத்திற்குப் பாதுகாப்பற்ற நிலை அதிகரிப்பு ஆகியன இதுபோன்ற கோரிக்கை எழுவதற்கான வாய்ப்பைக் கூடுதலாக்கியுள்ளது. இடஒதுக்கீட்டிற்கு சாதி அடிப்படையைச் சட்டப்படி நீக்குதல் மிகப்பெரியத் தவறு; இதனால் ஏற்படும் விளைவுகள் சாதி அடிப்படை யில் சொத்துடைமையில் உள்ள ஏற்றத்தாழ்வை மேலும் அதிகரிக்கும்.

### நல உதவி பெறும் உரிமையும் உண்மை நிலைமைகளும் :

பொருளாதார அளவுகோல் என்கிற புதிய கருத்தாக்கம் சாதி, இன அடிப்படையைப் பொருட்படுத்தாமல் அரசின் நல உதவிகள் பெறுவதற்கு ஒவ்வொருவரும் உரிமை யுள்ளவர்கள் என்கிற கண்ணோட்டத்தில் வேரூன்றி யுள்ளது. இந்த உரிமைக்கோரல் புரிந்துகொள்ளக் கூடியது; எனினும் சமூகத்தில் நடைமுறையில் நிலவும் உண்மை நிலையைக் கூர்ந்தாராய வேண்டியது மிகவும் தேவைப்படுவதாகும். சில மக்கள் தொகுப்பினர் அனுபவித்து வரும் கூட்டுப் பின்னடைவுகள் ஒன்றுக் கொன்று வேறுபாடானவை ஆகும். அவர்களுடைய குறிப்பிட்ட பின்தங்கிய நிலைகளுக்கு உகந்த குறிப் பிட்டத் தீர்வு முறைகள் தேவைப்படுகின்றது. தற்போது நிலவும் சமனின்மைகள் ஒரு தலைமுறையில் உரு வானவையல்ல. இந்த மக்கள் தொகுப்பினரின் சமூக-பொருளாதார வேறுபாடுகள், இலட்சியம், செயல்திறன், ஊக்கம் ஆகியவற்றின் வேறுபாடுகளால் ஏற்பட்டவை



அல்ல. பொருளாதாரம், பண்பாடு, மனித மூலதனம் அடுத்த அடுத்தத் தலைமுறைகளுக்குச் சென்றடைந் தவை ஆகும். தலைமுறை, தலைமுறையாக அப்படி வந்த வேற்றுமைகளில் ஒன்றுதான் சொத்துடை மையில் உள்ள ஏற்றத்தாழ்வு ஆகும்.

இந்தியாவில் சொத்துடைமையை அடுத்த அடுத்தத் தலைமுறைகளுக்கு மாற்றுவதில் சாதி கருவியாகச் செயல்புரிகிறது. அனைத்திந்திய கடன் மற்றும் முதலீட்டு அமைப்பு (AIDIS) அண்மையில் நடத்திய கள ஆய்வு முடிவுகளை 2021-இல் வெளியிட்டது. அவ்வறிக்கை இந்தியாவில் சொத்துடைமையில் சாதிய ஏற்றத்தாழ்வுகள் அதிகரித்துள்ளப் போக்கைச் சுட்டிக் காட்டுகிறது. நிலம், கட்டடம், கால்நடைகள், வேளாண் கருவிகள், போக்குவரத்துச் சாதனங்கள், பங்குகளில் முதலீடு, வைப்புத் தொகைகள், குடும்பத்திற்கு வரவேண்டிய கடன்தொகைகள் போன்ற பொருண்மையான சொத்து கள் பற்றியத் தகவல்களை எய்டிஸ் (AIDIS) அமைப்பு சேகரித்துள்ளது. செல்வ நிலையை அளவீடு செய்வதற்கு வருமானம் மற்றும் நுகர்வைக் கணக்கிடுவதைவிட சொத்துடைமையைக் கணக்கிடுவது சிறந்த அளவீடு ஆகும். சொத்தின் இருப்புநிலை வேறுபட காலம் அதிகம் தேவை. அதேவேளையில் வருமானமும் நுகர்வும் வேறுபடுதலின் போக்கு அடிக்கடி மாறக்கூடியது ஆகும்.

1990-க்கும் 2020-க்கும் இடையில் இந்தியாவில் ஏற்றத்தாழ்வு பரந்த அளவில் அதிகரித்துக் காணப்படு கிறது; குறிப்பாக 2000-தின் தொடக்கத்தில் மிகவும்




அதிகரித்துள்ளது. இந்த ஏற்றத்தாழ்வில் ஏற்பட்ட அதிகரிப்பு என்பது ஒருவர் தன் ஆய்வில் மேற்கொள்ளும் அளவீடுகளாலும் வழிமுறைகளாலும் வேறுபடுகிறது. வருமானத்திலும் நுகர்விலும் உள்ள ஏற்றத்தாழ்வை விட சொத்துடைமையில் உள்ள ஏற்றத்தாழ்வு மிகவும் கடுமையானதாக உள்ளது. சொத்துடைமையில் ஏற்றத் தாழ்வு பற்றிய ஜினி (GINI) அட்டவணை

1992-இல் 0.62
2002-இல் 0.63
2012-இல் 0.67
2019-இல் 0.68

(சமூகத்தில் ஏற்றத்தாழ்வு இல்லை எனின் ஜினி அட்டவணையில் 0.00)

இதற்கு மாறாக 2012-இல் நுகர்வில் இவ்வெண் 0.37 மற்றும் வருமானத்தில் 0.54 என உள்ளது. இந்தப் புள்ளிவிவரமே நம் கருத்தின் உண்மை நிலையை உணர்த்துகிறது.

2009 கணக்கின்படி ஆள் ஒருவருக்கு சராசரி சொத்து :

| | |
|---|---|
| உயர் சாதியினர் | ரூ.8,03,977 |
| பிற்படுத்தப்பட்டோர் | ரூ.4,09,792 |
| பட்டியல் வகுப்பினர் | ரூ.2,28,388 |
| பட்டியல் பழங்குடியினர் | ரூ.2,39,349 |

வேறு வகையில் சொன்னால் உயர்சாதியினரின் சொத்துடைமை, பட்டியல் வகுப்பினரைவிட 3 மடங்கும்; பிற்படுத்தப்பட்ட வகுப்பினரைப் போல 2 மடங்கும் அதிகமாக உள்ளது. நாட்டின் மொத்த சொத்தை பின்வருமாறு தங்கள் கட்டுப்பாட்டில் வைத்துள்ளனர்.

| | | |
|---|---|---|
| உயர் சாதியினர் | - | 45 விழுக்காடு |
| பிற்படுத்தப்பட்டோர் | - | 40 விழுக்காடு |
| பட்டியல் சாதியினர் | - | 10 விழுக்காடு |
| பழங்குடியினர் | - | 5 விழுக்காடு |

உயர் சாதியினர் நாட்டின் செல்வத்துள் பெரும் பங்கை வைத்திருப்பதுடன் உயர்நிலையில் உள்ள அய்ந்தில் ஒரு பகுதி செல்வத்தை அவர்கள், அவர் களுடைய விகிதாசாரத்திற்கு மிகவும் அதிகமாகக் குவித்துக் கொண்டுள்ளனர். சொத்துடைமையில், அய்ந்தில் ஒரு பங்காக உள்ள உயர் சாதியினர் 55 விழுக்காடும், அடுத்து பிற்படுத்தப்பட்ட வகுப்பினர் (OBC) 36 விழுக்காடும், பட்டியல் வகுப்பினர் 5 விழுக்காடும், பழங்குடியினர் 3 விழுக்காடும் பெற்றுள்ளனர். நிலவும் பொதுக் கருத்திற்கு மாறாக இந்த அச்சம் தருகிற ஏற்றத்தாழ்வான சொத்துடைமையானது தனிப்பட்ட வர்களின் வருமானத்தினாலோ சேமிக்கும் இயல் பினாலோ உருவாக்கப்பட்டவை அல்ல; மாறாக, நிறுவனப் பட்டுள்ள சமூக அமைப்பின் நெடிய வரலாற்றில் சில சாதிக் குழுக்கள் விலக்கி வைக்கப்பட்டதனால் விளைந்த தாகும்.

ஏற்றத்தாழ்வான சொத்துடைமையின் தோற்று வாய் வரலாற்று வழிப்பட்டதாகவும் மரபுரிமை சார்ந்தும் உள்ளது. இந்த சொத்துடைமையைப் பிரித்துப் பார்ப் போமானால் பெரும்பகுதி நிலமும் கட்டடமும் சேர்ந்தது ஆகும். நிலம் 60 விழுக்காடு, கட்டடம் 22 விழுக்காடு, நிதியாக 7 விழுக்காடு. நிலம் மற்றும் கட்டடம் இரண்டும் பெரும்பாலும் மரபுரிமையாக வந்தனவாகும். குறிப்பாக நிலவுடைமையில் உள்ள ஏற்றத்தாழ்வு என்பது பிரித்தானிய ஆட்சிக்கு முன்னரே நீண்டகால வரலாறு கொண்டதாகும். இந்தியாவில் பிரித்தானிய ஆட்சிக் காலத்தில் அவ்வாட்சியாளர்கள் தலையீட்டினால் சில சாதியினருக்கு மற்றவர்களுடைய நிலங்களை எடுத்து அளித்து உடைமையாக்கியது தொடர்ந்தது. இந்தியா வில் தொடங்கிய நிலச் சீர்திருத்தம் நிலத்தின் மீதான மரபுரிமையை மாற்றிடவில்லை.

1990-க்குப்பின் மனை விற்பனைப் பெருக்கம், நிலத்தின் விலையில் நிலவிய ஊக வணிகம் காரண மாக நிலத்தின் மதிப்பு உயர்ந்தது; இதனால் பெருமளவில் நிலமும் கட்டடங்களும் வைத்திருந்தோரின் சொத்து மதிப்பு பன்மடங்காக உயர்ந்தது. தேசிய வருமானத்தில் தனியார் சொத்துடைமையின் மதிப்பு, ஒப்பீட்டளவில் 1980-இல் 290 விழுக்காடாக இருந்தது; 2020-இல் 555 விழுக்காடாக உயர்ந்துள்ளது. 2022-ஆம் ஆண்டின் உலக ஏற்றத்தாழ்வு அறிக்கையின்படி உலகத்திலேயே இது மிக வேகமான உயர்வு என மதிப்பிடப்பட்டுள்ளது. இந்தியாவில் மரபுவழிச் சொத்து டைமைக்கு வரி விதிப்பே இல்லை என்பதால் இதில் வியப்பதற்கில்லை.

சொத்துடைமையில் இவ்வளவு அதிக ஏற்றத் தாழ்வு நிலவுகின்றச் சூழலில் நாம் (அரசின்) பொதுக் கொள்கையை எப்படி உருவாக்குவது? சாதியைக் கணக்கில் கொள்ளாதக் கொள்கை இந்தச் சொத்து டைமை இடை.வெளியைத் தடுக்குமா? சாதி இருப்பை மறுக்கும் கொள்கைக்காக வாதிடுபவர்கள் பொறுப்

பற்றத் தன்மையில் இந்த ஏற்றத்தாழ்வை நியாயப் படுத்தப் பார்க்கிறார்கள். வரலாற்றில் வழிவழி வந்த இந்த ஏற்றத்தாழ்வை, சாதியைக் கருத்தில் கொள்ளாத கொள்கைகளால் தீர்க்க இயலாது. சொத்துடைமையில் உள்ள இந்த மிகப்பெரிய இடைவெளியைத் தடுத்திட அது போதுமானது அல்ல. இந்தியாவில் சாதி அடிப் படையிலான ஏற்றத்தாழ்வை சரிசெய்திட இடஒதுக்கீடு என்ற ஒற்றைக் கொள்கை மட்டுமே வழியாகக் கருதப் படுவது என்பது கவலை தரத்தக்கது. கல்வி பெறுவதிலும் வேலை வாய்ப்பிலும் ஓரளவு முன்னேற்றம் அடைந் துள்ள போதிலும், ஏற்றத்தாழ்வின் கட்டமைப்பைக் குலைப்பதில் தோல்வியே கண்டுள்ளது.

சாதிகளிடையே சொத்துடைமையில் உள்ள இடைவெளியானது கல்வி, வேலை வாய்ப்பு மற்றும் வருமானத்தின் வேறுபாடுகளால் ஏற்பட்டதல்ல; மாறாக இந்த ஏற்றத்தாழ்வு ஒரு தலைமுறையினரிட மிருந்து அடுத்தத் தலைமுறை என வழிவழியாக வந்த ஏற்றத்தாழ்வு ஆகும். எனவே, கல்வி மற்றும் வேலை வாய்ப்புப் பெறுவதில் ஏற்படும் முன்னேற்றத் தினால் மட்டுமே இந்த இடைவெளியைச் சரிசெய்ய இயலாது. **இப்போதுள்ள சாதியடிப்படையிலான இடஒதுக் கீட்டின் அடிப்படையைச் சிதைத்து, பொருளாதார அளவு கோலை மாற்றீடாக்குவது, இடஒதுக்கீட்டின் மூலம் அடைந் துள்ள ஓரளவு முன்னேற்றத்தைப் பின்னோக்கி நகர்த்துவதுடன் நீண்டகாலமாக கட்டமைக்கப்பட்டுள்ள இந்த ஏற்றத்தாழ்வை அதிகரிக்கவே செய்யும்.**

**உலகளாவிய பட்டறிவு**

குறிப்பாக எங்கெல்லாம் பாரபட்சத்தை ஈடுசெய்வதற் கான செயல் திட்டங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளனவோ, அத்தகைய நாடுகள் பலவற்றில் நடுத்தர வகுப்பின ரிடையே தங்கள் சமூக-கலாச்சார தகுநிலையை இழக்க நேரிடுமோ என்கிற அச்சமும் கவலையும் மேலோங்கியுள்ளன.

அய்க்கிய அமெரிக்காவில் கறுப்பு அமெரிக்கர்களின் பொது நன்மைக்காக மேற்கொள்ளப்பட்ட நல்நோக்குச் செயல் திட்டங்களால் விளைந்த முன்னேற்றத்தின் எதிர்வினையாக ‘வெள்ளை எதிர்ச்செயல்’ அல்லது ‘வெள்ளைச் சீற்றம்’ உருவானது; இதனை ஒத்ததே இந்தியாவில் சாதியடிப்படையில் இடஒதுக்கீட்டுக்கு எதிர்ப்பாக வெளிப்பட்ட கடும் பேச்சு உச்சமடைந்ததால் வந்ததே உயர்சாதியினருள் பொருளாதாரத்தில் நலிவுற்ற பிரிவினருக்கான (EWS) இடஒதுக்கீடு ஆகும்.

சாதி, இனம் இரண்டின் வரலாறுகளில் வேறு பாடுகள் இருந்தபோதிலும், ஏற்றத்தாழ்வை நீடிக்கச் செய்யும் நிறுவனங்களாக அவை தொடர்கின்றன. இந்த நிற, சாதி நிறுவனங்களின் வலுவான பின்னணி களை ஒன்றை மற்றொன்றுடன் ஒப்பிட முடியாது; அதேவேளையில் நிறச்சார்பற்ற கொள்கைகளுக்கான கோரிக்கைக்கும் இந்தியாவில் சாதியைக் கணக்கில் கொள்ளாதக் கொள்கையை உருவாக்கக் கோரும் விவாதத்திற்கும் தெளிவான ஒற்றுமைகள் உள்ளன. ஐக்கிய அமெரிக்காவில் டொனால்டு டிரம்ப் அதிகாரத் திற்கு வந்த போது ஏற்றத்தாழ்வை சரிசெய்வதற்கான செயல் திட்டங்களை நிறுத்திவைக்க முயன்றார். ஜோ பைடன் தலைமையிலான அரசு வந்த பின்னும் அதை மாற்றவோ மீண்டும் செயல்படுத்தவோ இல்லை.

எந்த ஒரு சமூகத்திலும் சமத்துவமின்மையில் உள்ள வேறுபாடு என்பது அரசியல் முடிவைப் பொறுத்தே அமைகிறது. கடந்த இரண்டு நூற்றாண்டுகளின் வரலாற்றை ஆய்வு செய்த தாமஸ் பிக்கெட்டி, “சொத்துடைமைப் பகிர்வு எப்போதுமே முழுமையாக அரசியல் சார்ந்தது, அதைப் பொருளியல் பொறிமுறைக்கு மட்டுமே உரிய தாகக் குறைத்திட இயலாது” என்று விளக்குகிறார்.

மரபுவழிச் சொத்துடைமை என்ற நீடித்த மரபை யும், வாழ்வதற்கான வாய்ப்புகளையும், விருப்பத் தேர்வுகளையும் தடுக்கும் சாதியையும் மாற்றி சமன் படுத்தும் களத்தை உருவாக்குவதே ஒரு நேரிய சமூகத்திற்குத் தேவைப்படுவதாகும்.

(The Hindu ஏட்டில் 8.12.2022 அன்று
வெளியான கட்டுரை) **தமிழில் சா. குப்பன்**

(கட்டுரையாளர் ஆ. கலையரசன், சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் உதவிப் பேராசிரியர் மற்றும் ஹார்வர்டு பல்கலைக்கழகத்தின் தெற்காசிய நிறுவனத்தில் ஆய்வாளர்)

## காந்தியார் படுகொலை நாள் விளக்கக் கூட்டம்



காந்தியார் படுகொலை நாள் விளக்கக் கூட்டம் 30.1.2023 திங்கள் அன்று மாலை 6 மணிக்கு திருமுல்லைவாயில் பேருந்துநிறுத்தம் அருகே தந்தை பெரியார் திராவிடர் கழகத்தின் சார்பில் நடைபெற்றது. தோழர் முனியாண்டி தலைமைத் தாங்கினார். தோழர் மணிவண்ணன் வர வேற்புரையாற்றினார். தோழர் ஆவடி நாகராசன் முன்னிலை வகித்தார். தோழர்கள் திராவிடமணி (வி.சி.க.), முல்லைத் தமிழன் (வி.சி.க.), சௌ. சுந்தரமூர்த்தி (த.வி.க.), பெரியசாமி மக்கள் அதிகாரம், பெரியார் வளவன் (த.பெ.தி.க.) ஆகியோர் உரையாற்றினர். இறுதியில் வாலாசா வல்லவன் சிறப்புரை ஆற்றினார்.

## திருவள்ளுவர் நாள் விழாவில்

# வாலாசா வல்லவன், பாவலர் இரணியன், எஸ்.வி. இராசதுரை, ஆ.இரா. வெங்கடாசலபதி உள்ளிட்ட

# பத்து தமிழ் அறிஞர்களுக்குத் தமிழ்நாட்டு அரசு விருது



தமிழ் நாட்டரசு, தமிழ் வளர்ச்சித் துறையின் சார்பில் 16.01.2023 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற திருவள்ளுவர் திருநாள் விழாவில் தமிழ்மொழி மற்றும் இலக்கிய வளர்ச்சிக்கும் தமிழ்ச் சமுதாய உயர்வுக்கும் தொண்டாற்றிப் பெருமை சேர்த்த தமிழறிஞர்கள் பதின்மருக்கு விருதுகள் அளிக்கப்பட்டன.

இவ்விழாவில் தமிழ்நாட்டு முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் விருதாளர்களுக்குப் பொன்னாடையும் தங்கப் பதக்கமும் அணிவித்து, தகுதியுரையும் விருதுத் தொகைக்கான காசோலையும் அளித்துப் பெருமைப்படுத்தினார்.

2023-ஆம் ஆண்டுக்கான திருவள்ளுவர் விருது பெரியார், பாவாணர், பெருஞ்சித்திரனார், வே. ஆனைமுத்து ஆகியோர் கருத்தியலில் உரமேறிய, ஆய்வில் திளைத்தத் தன்மானத் தமிழ் அறிஞர் கோவை இரணியன் (நா.கு. பொன்னுசாமி) அவர்களுக்கு அளிக்கப்பட்டது. 2022-ஆம் ஆண்டுக்கான பாவேந்தர் பாரதிதாசன் விருது மார்க்சியப் பெரியாரிய பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளரும் புதிய சிந்தனையாளன் இதழின் ஆசிரியரும் திராவிட இயக்க ஆய்வாளருமான வாலாசா வல்லவன் அவர்களுக்கு அளிக்கப்பட்டது.

திராவிடர் கழகத் துணைத் தலைவரும் விடுதலை நாளேட்டின் பொறுப்பாசிரியருமான கவிஞர் கலி. பூங்குன்றன் அவர்களுக்குத் தந்தை பெரியார் விருது அளிக்கப்பட்டது. மார்க்சியம், பெரியாரியம், அம்பேத்கரியம், தலித்தியம், பெண்ணியம் பற்றிய எழுத்தாளரும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மய்யத்தின் தலைவராக இருந்தவரும் மனித உரிமைப் போராளியுமான அறிஞர் எஸ்.வி. இராசதுரை அவர்களுக்கு அண்ணல் டாக்டர் அம்பேத்கர் விருது அளிக்கப்பட்டது.

சென்னை வளர்ச்சி ஆராய்ச்சி நிறுவனத்தில் பேராசிரியராகப் பணியாற்றுபவரும் நூல்கள் பலவற்றின் ஆசிரியரும் ஆய்வாளருமான ஆ.இரா. வெங்கடாசலபதி அவர்களுக்கு மகாகவி பாரதியார் விருது அளிக்கப்பட்டது. சிந்துவெளி எழுத்து ஆய்வறிஞரும் கல்வெட்டு ஆய்வாளரும் பாவாணர் ஆய்வு நெறி, பாவாணரின் ஞால முதன்மொழிக் கொள்கை, உலக நாகரிகத்திற்கு தமிழரின் கொடை முதலான 40 நூல்களின் ஆசிரியரும் பாவாணருக்குப்பின் செந்தமிழ் சொற்பிறப்பியல் அகரமுதலித் திட்ட இயக்குநராக விளங்கியவருமான இரா. மதிவாணன் அவர்களுக்கு தேவநேயப் பாவாணர் விருது அளிக்கப்பட்டது. மற்றும் பேறறிஞர் அண்ணா விருது சி.நா.மீ. உபயதுல்லாவுக்கும், பெருந்தலைவர் காமராசர் விருது ஈ.வி.கே.எஸ். இளங்கோவனுக்கும், திரு.வி.க. விருது நாமக்கல் பொ. வேல்சாமிக்கும், கி.ஆ.பெ. விசுவநாதம் விருது கவிஞர் மு.மேத்தாவுக்கும் அளிக்கப்பட்டன.



## அறிஞர் எஸ்.வி. இராசதுரை அவர்களுக்கு

### தமிழ்நாட்டரசின் 2022-ஆம் ஆண்டுக்கான

## அண்ணல் அம்பேத்கர் விருது அளிப்பு

தமிழ்நாட்டு அரசு 1998 முதல் மேதை அம்பேத்கரின் கொள்கைகளைப் பரப்பும் ஒருவருக்கு ஆண்டுதோறும் அண்ணல் அம்பேத்கர் விருது அளித்து வருகிறது. இந்த ஆண்டு தமிழின் முன்னணி எழுத்தாளர்களில் ஒருவரும் பாரதிதாசன் பல்கலைக்கழகத்தில் பெரியார் உயராய்வு மய்யத்தின் தலைவராகச் செயல்பட்டவருமான அறிஞர் எஸ்.வி. இராசதுரை அவர்களுக்கு அளிக்கப்பட்டுள்ளது.


இவர் தமிழில் 80 நூல்கள் எழுதியுள்ளார். நூல்கள் பலவற்றை தமிழாக்கம் செய்துள்ளார். இவர் மார்க்சிய, பெரியாரிய, அம்பேத்கரிய, தலித்திய, பெண்ணியச் சிந்தனையாளர்-செயற்பாட்டாளர். இவர் தோழர் வே.ஆனைமுத்து அவர்களுடன் தோழமைப் பூண்டிருந்தவர் ஆவார். இவர் எழுதிய நூல்களுள் சில:

பெரியார் : சுயமரியாதை சமதர்மம், பெரியார் : ஆகஸ்ட் 15. இந்து இந்தி இந்தியா, ஏகாதிபத்திய எதிர்ப்பும் சாதி ஒழிப்பும், பதி, பசு, பாகிஸ்தான், அமித்ஷா அயோத்யா, கல் தெய்வம், அந்தியமாதல், தலித்தியமும் உலக முதலாளியமும், காரல் மார்க்சு : அறிவுப் பயணத்தில் புதிய திசைகள், சர்வதேச தொழிலாளர் சங்கத்தின் வரலாறும் மரபும், அறிவொளியும் மார்க்சியமும். கிராம்ஷி புரட்சியின் இலக்கணம், Towards a Non-Brahmin Millenniam: From Iyothee Thas to Periyar மற்றும் அன்புள்ள டாக்டர் மார்க்ஸ், லெனின் என்னும் மனிதர் போன்ற மொழிபெயர்ப்பு நூல்கள். அறிஞர் எஸ்.வி. இராசதுரை அவர்களை புதிய சிந்தனையாளன் சார்பிலும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பிலும் பாராட்டி மகிழ்கிறோம்.

### தமிழ்நாட்டரசின் 2023-ஆம் ஆண்டுக்கான

## திருவள்ளுவர் விருது அளிக்கப் பெற்றுள்ள

## பாவலர் இரணியன்




கோவை சிங்காநல்லூர் திருவள்ளுவர் பேரவை நிறுவனரும் பெரியார், பாவாணர், பெருஞ்சித்திரனார், வே. ஆனைமுத்து ஆகியோரின் கருத்தியலில் உரமேறிய, ஆய்வில் திளைத்த தன்மானத் தனித்தமிழ் அறிஞர் பாவலர் இரணியன் (நா.கு. பொன்னுசாமி) அவர்களைப் பாராட்டி, தமிழ்நாட்டரசு 16.01.2013 அன்று சென்னை வள்ளுவர் கோட்டத்தில் முதலமைச்சர் மு.க. ஸ்டாலின் அவர்கள் திருவள்ளுவர் விருதினை அளித்துப் பெருமைப்படுத்தினார்.

திருப்பூர் மாவட்டத்தில் உள்ள வெள்ளகோவிலை அடுத்த மூலனூர் - நாரணாவலசு ஊரைச் சேர்ந்த இரணியன் நா.கு. பொன்னுசாமி சிதம்பரம் அண்ணாமலைப் பல்கலைக்கழகத்திலும் மதுரை காமராசர் பல்கலைக்கழகத்திலும் படித்து முதுநிலைப் பட்டம் பெற்று, கோவையில் தமிழாசிரியராகப் பணிபுரிந்து, பணிநிறைவு பெற்றவர்.

பெரியாரின் தமிழ்த் தேசியம், சங்க இலக்கியத்தில் சமூக அறம், தேசிய விடுதலையும் சிறுபான் மையினர் உரிமையும் உள்ளிட்ட நூல்களை இயற்றியுள்ளார். புலரும் மற்றும் காற்றும் துடுப்பும் என்ற கவிதை நூல்களையும் யாத்துள்ளார்.

திருக்குறளை மக்கள் சிந்தனைக்கு எடுத்துச் செல்லும் பணிகளைச் செய்துவரும் இவர் தமது திருக்குறள் பணி தனது இறுதிமூச்சு வரைத் தொடருமெனத் தெரிவித்துள்ளார்.

தமிழ்நாட்டரசின் திருவள்ளுவர் விருது அளிக்கப் பெற்றுள்ள பாவலர் இரணியன் அவர்களை புதிய சிந்தனையாளன் இதழும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் பாராட்டி மகிழ்கிறது.



# தோழர் வாலாசா வல்லவனுக்கு

தமிழ் நாட்டரசின் 2022–ஆம் ஆண்டிற்கான

## பாவேந்தர் பாரதிதாசன் விருதளிப்பு

எழுத்தாளர், சொற்பொழிவாளர், திராவிடர் இயக்க ஆய்வாளர், பெரியாரியல் அறிஞர் வே.ஆனைமுத்து அவர்களின் மாணாக்கர், மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் துணைப் பொதுச் செயலாளர், புதிய சிந்தனையாளன் இதழின் ஆசிரியர் தோழர் வாலாசா வல்லவனுக்குத் தமிழ்நாட்டரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருதளித்து பெருமைப்படுத்தியுள்ளது.

பாவேந்தர் பாரதிதாசன் தொடக்கக் காலத்தில் எழுதி வெளிவந்த ‘புதுவை முரசு’ இதழ்களின் தொகுப்பு 2400 பக்கங்களில் 6 தொகுதிகளாகப் பதிப்பித்து வெளியிட்டவர். இவர் சில நூல்களை எழுதி வெளியிட்டுள்ளதுடன் அரிய பழைய நூல்களைப் பதிப்பித்து வெளியிட்டுள்ளார்.

**இவர் வெளியிட்டுள்ள முக்கியமான நூல்கள் பின்வருமாறு**

1. திராவிடர் இயக்கப் பார்வையில் பாரதியார்.
2. திரவிடர் இயக்கம் :
   தமிழ்த் தேசியத்திற்கு தடைக்கல்லா? படிக்கல்லா?
3. பெரியார் தமிழினத்தின் பகைவரா?
4. திராவிடத் தமிழ்த் தேசியம்
5. ஆதித் திராவிடர் மாநாடுகள் - தொகுப்பாசிரியர்
6. ஆதித் திராவிடர்களைப் பற்றிய வரலாற்றுக் குறிப்புகள் - தமிழில் வெளியீடு
7. குத்தூசி குருசாமியின் - சிறுகதைகள் - தொகுப்பாளர்
8. கோயில் நுழைவுப் போராட்டங்களில் திராவிடர் இயக்கங்களின் பங்களிப்பு
9. ம.பொ.சி.யும் ஆதித்தனாரும் தமிழ்த் தேசியத் தலைவர்களா?
10. ஆரிய ஆட்சி - பதிப்பாளர் (லிபரேட்டர் வெளியீடு)
11. நீதிக்கட்சித் தலைவர்களின் சொற்பொழிவுகள்

தோழர் வாலாசா வல்லவனுக்குத் தமிழ்நாட்டு அரசு பாவேந்தர் பாரதிதாசன் விருது அளித்துப் பெருமைப்படுத்திய தற்காக புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழுவினரும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியினரும் மகிழ்ச்சியைத் தெரிவிக்கின்றனர்.

# ஆய்வாளர் ஆ.இரா. வெங்கடாசலபதிக்கு

தமிழ்நாட்டரசின் 2022–ஆம் ஆண்டிற்கான

## மகாகவி பாரதியார் விருதளிப்பு



ஆ.இரா. வெங்கடாசலபதி தமிழ்நாட்டின் குறிப்பிடத்தக்க ஆய்வாளர்களில் ஒருவர். இவர் புதுதில்லி சவகர்லால் நேரு பல்கலைக்கழக்கதில் தமிழ்ப் பதிப்பு வரலாறு பற்றிய ஆய்வில் முனைவர் பட்டம் பெற்றவர். 25-க்கும் அதிகமான நூல்கள் எழுதியுள்ளார். அரிய நூல்களைத் தொகுத்துப் பதிப்பித்துள்ளார். இவர் சிறந்த மொழிபெயர்ப்பாளர் என்பதற்கு இவர் மொழிபெயர்த்துள்ள பாப்லோ நெருடா கவிதை 86 சான்று.

பெரியார் பற்றிய பல ஆய்வுக் கட்டுரைகளை ஆங்கிலத்தில் எழுதியுள்ளார். From Erode to Volga என்ற பெரியாரின் சோவியத்து-அய்ரோப்பிய பயணம் பற்றிய சிறு நூல் ஒன்றையும் எழுதி வெளியிட்டுள்ளார். பெரியார் பற்றிய ஆங்கில வெளியீடுகளைத் தொகுத்தளித்துள்ளார். இவர் பெரியார் வாழ்க்கை வரலாற்று நூலை ஆங்கிலத்தில் எழுதும் பணியில் கடந்த பல ஆண்டுகளாக ஈடுபட்டுள்ளார். இவருக்கு 2021-ஆம் ஆண்டின் கனடா தமிழ் இலக்கியத் தோட்டத்தின் இயல் விருது அளிக்கப்பட்டது. இவர் எழுதியுள்ள நூல்கள் சில.

1. பின்னி ஆலை வேலை நிறுத்தம். 2. திருநெல்வேலி எழுச்சியும் வ.உ.சி.யும் 1908. 3. வ.உ.சி.யும் பாரதியும், 4. திராவிட இயக்கமும் வேளாளரும், 5. வ.உ.சி. வராது வந்த மாமணி - தொகுப்பாளர் - பதிப்பாளர், 6. புதுமைப்பித்தன் கதைகள் தொகுப்பு, 7. புதுமைப்பித்தன் கட்டுரைகள் தொகுப்பு, 8. புதுமைப்பித்தன் மொழிபெயர்ப்புகள், 9. Province of the Book, 10. Chennai not Madras, 11. இன்று துயர்மிகு வரிகளை நான் எழுதலாம் - பாப்லோ நெருடா கவிதைகள் - மொழிபெயர்ப்பு

சிறந்த ஆய்வாளரும் நூலாசிரியரும் தொகுப்பாசிரியரும் பதிப்பாசிரியருமான பேராசிரியர், முனைவர் ஆ.இரா. வெங்கடாசலபதி அவர்களுக்கு தமிழ்நாட்டு அரசு மகாகவி பாரதியார் விருதளித்து பெருமைப்படுத்தியுள்ளமை மகிழ்தற்கு உரியது. புதிய சிந்தனையாளன் இதழும் மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியும் அவருக்கு வாழ்த்தையும் பாராட்டையும் தெரிவிக்கின்றது.

# சிந்தனையாளன் 26ஆம் ஆண்டு

## ❖ பொங்கல் மலர் வெளியீட்டு விழா
## ❖ மண்டல் குழு பரிந்துரை மக்கள் நாயக உரிமைப் போர் நூல் வெளியீடு
## ❖ சனாதன எதிர்ப்புக் கருத்தரங்கம்




மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் திருவள்ளுவர் ஆண்டு 2054 சிலை 24 (08.01.2023) அன்று பிற்பகல் 3 மணிக்கு சென்னை, தேனாம்பேட்டை, அன்பகம் அண்ணா அரங்கத்தில் சிந்தனையாளன் 26-ஆம் ஆண்டு பொங்கல் மலர் வெளியீட்டு விழா நடைபெற்றது. விழாவிற்கு மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளரும் புதிய சிந்தளையானன் இதழின் ஆசிரியருமான வாலாசா வல்லவன் தலைமை ஏற்றார். கட்சியின் காஞ்சிபுரம் மாவட்டச் செயலாளர் சி. நடராசன் வரவேற்புரையாற்றினார். திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் பொதுச் செயலாளர் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் பொங்கல் மலரை வெளியிட மாம்பலம் ஆ. சந்திரசேகர் முதல் படியைப் பெற்றுக் கொண்டார். தொடர்ந்து கட்சித் தோழர்கள் இரா. சிவப்பிரகாசம், புலவர் அ. சகாதேவன், லோ. இரத்தினகுமார், சீனி. அறிவுமழை, மா. முத்தமிழன், மா. தசரதன், சம்மந்த சிவகுமார், நா. வேலு, இரா. நாராயணமூர்த்தி, செந்தமிழ்க் கொற்றி ஆகியோர் பெற்றுக் கொண்டனர்.

அடுத்து தோழர் வே. ஆனைமுத்து அவர்கள் எழுதி, 1990-இல் வெளியிடப்பட்ட "மண்டல் குழு பரிந்துரை மக்கள் நாயக உரிமைப் போர் - வகுப்புரிமை வரலாறு" நூலின் மறுமதிப்பை பெரியார் சமஉரிமைக் கழகத்தின் தில்லி மாநில மேனாள் செயலாளர் ச. தமிழரசு அவர்கள் வெளியிட முதல் படியினை கோ.மு. கறுப்பய்யா பெற்றுக் கொண்டார். இதனைத் தொடர்ந்து கட்சியின் வேலூர் மாவட்டச் செயலாளர் மோ.சி. சங்கர், தலைமைக்குழு உறுப்பினர் மு. சுவாமிநாதன், திருவண்ணாமலை மாவட்டச் செயலாளர் மா. முருகேசன், வாலாசாப்பேட்டை முனைவர் ப. வெங்கடேசன், இராணிப்பேட்டை மாவட்டச் செயலாளர் க. குப்புசாமி, அரியலூர் மாவட்டச் செயலாளர் த. இளவரசன், திருப்பத்தூர் மாவட்டத் துணைச் செயலாளர் இரா. பகுத்தறிவாளன், சோ. அண்ணாதுரை ஆகியோர் வாழ்த்துரையாற்றினர். பின்னர் வாலாசா வல்லவன் தலைமையுரையும் முதல்படி பெற்றுக்கொண்ட மாம்பலம் ஆ. சந்திரசேகர் வாழ்த்துரையும் ஆற்றினர். நிகழ்வின் நிறைவாக மலரினை வெளியிட்ட பேரா. சுப. வீரபாண்டியன் சிறப்புரையாற்றினார். வேலூர் மாநகரச் செயலாளர் மீ. டில்லிபாபு நன்றியுரையுடன் நிகழ்வு நிறைவுற்றது.

மாலை 6 மணிக்கு கட்சியின் பொதுச் செயலாளர் தி. துரை சித்தார்த்தன் தலைமையில் நடந்த சனாதன எதிர்ப்புக் கருத்தரங்கம் திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் நா. மதனகவி வரவேற்புரையுடன் தொடங்கியது. தி. துரை சித்தார்த்தன் தலைமையுரைக்குப்பின் கட்சியின் தலைமைக்குழு உறுப்பினரும் புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினருமான க. முகிலன் தொடக்கவுரையாற்றினார். கட்சியின் தலைமைக்குழு உறுப்பினரும் புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழு உறுப்பினருமான சா. குப்பன் தீர்மானங்களை முன்மொழிந்தார். அடுத்து தமிழ் உரிமைக் கூட்டமைப்பின் செயலாளர் காஞ்சி அமுதன் கருத்துரையாற்றினார். தொடர்ந்து பேரா. அ. கருணானந்தம் அவர்களும் தமிழ்த் தேசிய விடுதலை இயக்கப் பொதுச் செயலாளர் தியாகு அவர்களும் கருத்துரையாற்றினர். தோழர் மு. குடியரசு நன்றியுரையுடன் இரவு 8.15 மணிக்கு நிகழ்வு நிறைவடைந்தது.

# மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில்
# சென்னை தேனாம்பேட்டை அன்பகம் அண்ணா மன்றத்தில்
# 08.01.2023 ஞாயிற்றுக்கிழமை பிற்பகல்
# சனாதன எதிர்ப்புக் கருத்தரங்கில்
# நிறைவேற்றப்பட்டத் தீர்மானங்கள்:

❖ கடந்த 2000 ஆண்டுகளாக சமூகத்திலும் அரசியலிலும் மேலாதிக்கம் செலுத்தி வந்த உயர்சாதியினர் இந்தக் காலத்திலும் கீழ்ச்சாதி மக்களை அடக்குவதும், ஒடுக்குவதும், சுரண்டுவதும், கொடுமைகளுக்கு உள்ளாக்கு வதும் தொடர்ந்து கொண்டுள்ளது.

❖ மன்னர்கள் ஆட்சிக் காலத்தில் மன்னர்களுக்குக் கல்விப் புகட்டுபவர்களாகவும் ஒழுக்கங்களைக் கற்பிப்பவர்களாக வும் சாதிக் கட்டமைப்பின் உச்சத்தில் இருந்த பார்ப்பனர்கள், வருண-சாதிமுறையைச் சமூகத்தில் நிலைக்கச்செய்திட ஏற்ற சாத்திரங்களையும் ஸ்மிருதிகளையும் உருவாக்கி, அவற்றை மன்னர்களின் ஆட்சிக்குரிய சட்டங்களாக இந்தியத் துணைக்கண்டத்தின் எல்லாப் பகுதிகளிலும் நடைமுறைப்படுத்தி வந்தனர்.

❖ இசுலாமிய மன்னர்கள் ஆட்சியிலும் பிரித்தானியர் ஆட்சியிலும் வருண-சாதி அடிப்படையான சாத்திரங்களும் ஸ்மிருதிகளுமே சட்டங்களாகத் தொடர்ந்தன.

❖ சூத்திரர்கள் சொத்து வைத்துக்கொள்ளவும் கல்விகற்கவும் தடுக்கப்பட்டிருந்ததால் இந்து சமூகத்தில் 80 விழுக்காடு மக்கள் தொகையினர் சொத்துடைமையற்றவர்களாகவோ மிகவும் சொற்ப சொத்துள்ளவர்களாகவும் கல்வி பெறா தவர்களாகவும் உள்ளநிலை நீடித்தது. உயர்சாதியினர் சொத்துடைமைத்த வர்க்கத்தினராகவும் அதன் காரணமாக சமூகத்தில் செல்வாக்கான உயர்நிலையில் நீடிப்பதும் காலம் காலமாகத் தொடர்கிறது. பிரித்தானியர் ஆட்சிக் காலத்திலும் சுதந்திரத் திற்குப் பிறகும் கொண்டு வந்த நில உச்ச வரம்புச் சட்டங்களால் குறிப்பிடத்தக்க பயன்கள் விளையவில்லை.

❖ பிரித்தானியர் பொதுக்கல்வி முறையை நடைமுறைப் படுத்திய பின்னரும் பார்ப்பனர்களே உயர்கல்விப் பெற்றவர்கள் என்ற நிலை உருவானது. அரசியல் பதவி களிலும் உயர் அதிகாரப் பதவிகளிலும் பார்ப்பனர்களே நூற்றுக்கு நூறு இடம் பெற்றனர். இதன் காரணமாக பிரித்தானிய ஆட்சியிலும் விடுதலை பெற்ற இந்தியர் ஆட்சியிலும் பார்ப்பன உயர்சாதியினர் ஆதிக்கம் தொடர்ந்தது.

❖ இந்திய அரசமைப்பு யாப்பு அவையில் (Constituent Assembly) பார்ப்பனர்களும் உயர்சாதியினரும் பழமைவாதிகளுமே நிறைந்திருந்ததால் இந்திய அரசமைப்பில் கூறு 13(3) (a), 25 (2) (26), 372 (1) மற்றும் 395 ஆகியவற்றை ஏற்படுத்தி பழக்கச் சட்டம், வழக்கச் சட்டம் என பழைய வருண - சாதி நடைமுறை களுக்குப் பாதுகாப்பும் பழைய நடைமுறைகளே நீடிக்கவும் அதன்வழித் தங்கள் சாதி-பார்ப்பன மேலாதிக்கம் நீடிக்கவும் வழி அமைத்துக் கொண்டனர்.

❖ வருண-சாதி அமைப்பைப் பாதுகாப்பது இந்திய அரசமைப்புச் சட்டத்தின் கூறுகள் 13,25,372 என்பதைத் தெளிவாக அறிந்த பெரியார் 26.01.1957 இல் திராவிடர் கழகத் தோழர்கள் 10,000 பேர் அச்சட்டக் கூறுகளை எரிக்கும் வலிமையானப் போராட்டத்தினை நடத்தினார். இப்போராட்டம் நடந்து 56 ஆண்டுகள் கடந்த பின்னும் இந்திய அரசமைப்புச் சட்டத்தில் இருந்து அந்த கூறுகள் நீக்கப்படவில்லை.

❖ பெரியார் இயக்கத்தின் போராட்டத்தின் நோக்கத்தை நன்கு புரிந்த தமிழ்நாட்டு நாடாளுமன்ற உறுப்பினர்கள் இந்திய அரமைப்புச் சட்டத்தின் கூறுகள் 13(3) (a), 25 (2) (b), 372 (1) விளக்கம் 1 மற்றும் 395இல் உள்ள பிரிவு கவுன்சில் அளித்தத் தீர்ப்புச் செல்லும் என்ற சொற்றொடர் ஆகியவை இந்தியச் சாதி அமைப்பைப் பாதுகாத்து வருகிறது என்பதை உலகுக்கு உணர்த்த அக்கூறுகளை நீக்கிட நாடாளுமன்றத்தில் தீர்மானங்கள் அளித்து, விவாதங்கள் நடைபெற முயற்சிகள் மேற்கொள்ளுமாறு தமிழ்நாட்டில் உள்ள அரசியல் கட்சியினரையும் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் இந்தச் சனாதன எதிர்ப்புக் கருத்தரங்கம் கேட்டுக் கொள்கிறது.

**தீர்மானம் 2**

பெரியாரின் சிந்தனைகளை 21 மொழிகளில் மொழிப் பெயர்த்து உலக அளவில் பரப்பிட முயற்சி செய்யும்

தமிழ்நாட்டு அரசையும், மாண்புமிகு முதல்வர் மு.க.ஸ்டாலின் அவர்களையும் இக்கருத்தரங்கம் பாராட்டுகிறது.

**தீர்மானம் 3**

புதுக்கோட்டை மாவட்டம் இறையூர்-வேங்கைவயல் கிராமத்தில் தாழ்த்தப்பட்ட மக்களின் குடிநீர் தொட்டியில் மலத்தை கலந்தவர்களை உடனடியாக கண்டறிந்து கைது செய்ய வேண்டும். இது மிக மிக கொடூரமான செயல். இதை இந்தக் கருத்தரங்கம் வன்மையாக கண்டிக்கிறது.

**தீல்மானம் 4**

சமூக அவலங்களையும் இழிவையும் ஏற்படுத்தும் வருண சாதி குறித்த புரிதலை மக்களுக்கு ஏற்படுத்தும் தன்மையில் பெரியார், மேதை அம்பேத்கர் ஆகியோரின் எழுத்துக்களையும், பேச்சுக்களையும் பள்ளி, கல்லூரி களில் பாடத் திட்டத்தில் சேர்க்கப்பட மய்ய மாநில அரசுகள் நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் என இந்தக் கருத்தரங்கம் கேட்டுக் கொள்கிறது.

❖

## மணமகள் தேவை

| | | |
|---|---|---|
| பெயர் | : | **க.லெனின் கல்யாண்** |
| பிறந்தநாள் | : | 03.07.1993 |
| வகுப்பு | : | ஆதி திராவிடர் |
| கல்வி | : | DEEE |
| வேலை | : | மேற்பார்வையாளர்<br>அவிலான் டெக்னாலஜிஸ் |
| ஊதியம் | : | 25,000 (மாதம்) |
| தந்தை | : | க.சண்முகம்,<br>வருவாய் மேற்பார்வையாளர்<br>தமிழ்நாடு மின்வாரியம்<br>விருத்தாசலம். |
| தாயார் | : | புஷ்பா - மறைவு |
| தங்கை | : | ச.ஜெனி சுந்தரி, பி.இ., எச்.சி.எல்.,<br>சென்னை - ஊதியம் 30,000<br>திருமணம் ஆகவில்லை |
| அஞ்சல் முகவரி | : | 11/2, நெல்சன் மண்டேலா தெரு<br>பெரியார் நகர் தெற்கு<br>விருத்தாசலம் - 606 001. |
| தொடர்புக்கு | : | சண்முகம் - 9965203920<br>கோ.மு.கறுப்பய்யா- 9444602516 |
| எதிர்பார்ப்பு | : | சாதி மத நம்பிக்கையில்லாத<br>முற்போக்குச் சிந்தனையுள்ளவராக<br>இருத்தல்வேண்டும். |

## மணமகள் தேவை



| | | |
|---|---|---|
| இணைதேடும் இளைஞர் | : | **பொற்கோ.தனி** |
| கல்வி | : | M.Tech.<br>(கணினி அறிவியல்) |
| வேலை | : | தனியார் Tech. Mahindra, Bangalore |
| பிறந்த நாள் | : | 04.10.1994 |
| உயரம் | : | 5' 10" / 172 செ.மீ. |
| எடை | : | 69 கி.கி. |
| பெற்றோர் | : | மருத்துவர்<br>பொன். தனித்தமிழ்க் கொற்றன்<br>உமா இராணி |
| இருப்பிடம் | : | 2-ஆம் தெரு, பெரியார் நகர்,<br>செந்துறை அஞ்சல்,<br>அரியலூர் மாவட்டம். |
| உடன் பிறப்பு | : | அக்கா - மாமா<br>தமிழ்க்கொடி, B.Tech., MBA.,<br>சிவானந்தம், M.Tech., MBA., |
| வழித்தோற்றம் | : | "பெரியாரின் பெருந்தொண்டர்" தமிழ் மறவர் சீ.வை. பொன்னம்பலனார்-தங்கம்மாள் இணையரின மகன்வழிப் பெயரன், உடையார்பாளையம் நினைவில் வாழும், மேனாள் பேரூராட்சித் தலைவர் பக்கிரி நாட்டார் - தனம் இணையரின் மகள்வழிப் பெயரன். |
| எதிர்பார்ப்பு | : | பெரியாரியல் கோட்பாட்டாளர்-மொழி இனச் சார்பு நிலை உள்ள குடும்பத்தினர். இளநிலை, முதுநிலைப் பொறியியல் படிப்பு பணியில் உள்ளவர். |
| தொடர்பு எண் | : | அலைபேசி : 9443952757 |

தூங்குதல் போன்றது சாக்காடு - பின்னர்த்
தூங்கி விழிப்பது நம்பிறப்பு
தீங்குள்ள இந்தியை நாம் எதிர்ப்போம்-உயிர்
தித்திப்பை எண்ணிடப் போவதில்லை!

மாங்குயில் கூவிடும் பூஞ்சோலை-நமை
மாட்ட நினைக்குஞ் சிறைச்சாலை!
ஏங்க விடோம்தமிழ்த் தாய்தனையே-உயிர்
இவ்வுட லைவிட்டு நீங்கும்வரை!

*- பாரதிதாசன்*

## **மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சி** நடத்தும்

### **தமிழர் உரிமைக் காப்பு - கருத்தரங்கம்**

தமிழ்நாட்டரசின் பாவேந்தர் விருது பெற்ற தோழர் **வாலாசா வல்லவன்** அவர்களுக்குப் பாராட்டு விழா

நாள் : **26.02.2023, ஞாயிறு மாலை 4.00 மணிக்கு**
இடம் : **காஞ்சிபுரம், காந்தி சாலை, இராஜ்பவன், ஜவுளிக்கடை சத்திரம் அருகில்**

தலைமை :
தோழர் **சி. நடராசன்**
காஞ்சி மாவட்டச் செயலாளர், மா.பெ.பொ.க.

வரவேற்புரை :
தோழர் **கி. கோபாலகிருட்டிணன்**
காஞ்சி மாவட்டச் து.செயலாளர், மா.பெ.பொ.க.

### **கருத்துரையாற்றுவோர்**

பேரா. **சோம. இராசேந்திரன்**
தமிழ்ப் பேராசிரியர், நேரு நினைவுக் கல்லூரி, புத்தனாம்பட்டி

தோழர் **வாலாசா வல்லவன்**
துணைப் பொ.செ. மா.பெ.பொ.க.
ஆசிரியர் - புதிய சிந்தனையாளன்

**காஞ்சி அமுதன்,** செ., தமிழ் உரிமைக் கூட்டமைப்பு

தோழர் **நாத்திகம் நாகராசன்** தி.மு.க.

**பாசறை செல்வராஜ்**
மாவட்ட செயலாளர், விடுதலைச் சிறுத்தைகள்

தோழர் **இரவி பாரதி**
மாவட்ட பொறுப்பாளர், திராவிடர் விடுதலைக் கழகம்

தோழர் **பூ.இராஜி,** வழக்கறிஞர்
தலைவர் காஞ்சி அண்ணா பேரவை

தோழர் **பெ. பழனி**
தன்னாட்சித் தமிழகம்

**வி.கே. பொன்மொழி**
மாவட்ட அமைப்பாளர், தமிழக வாழ்வுரிமைக் கட்சி

**ஜே. கமலநாதன்**
தொகுதி செயலாளர், இ.பொ.க.

**அ.வெ.முரளி**
மாவட்டத் தலைவர், திராவிடர் கழகம்

தோழர் **தி. துரை சித்தார்த்தன்**
பொதுச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **க. முகிலன்**
தலைமைக் குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

தோழர் **சா. குப்பன்**
தலைமைக் குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

காரை **கு.அருளானந்தம்**

**ச.மகேஷ்,** நகரச் செயலாளர், ம.தி.மு.க.

தோழர் **மோ.சி. சங்கர்,** வேலூர் மா.செ., மா.பெ.பொ.க.

தேழர் **மா. முருகேசன்,** தி.மலை மா.செ., மா.பெ.பொ.க.

தோழர் **மீ. டில்லிபாபு**
வேலூர் மாநகரச் செயலாளர், மா.பெ.பொ.க.

தோழர் **மு. சுவாமிநாதன்**
தலைமைக் குழு உறுப்பினர், மா.பெ.பொ.க.

தோழர் **நா. மதனகவி**
திருப்பத்தூர் மா.செ., மா.பெ.பொ.க.

தோழர் **க. குப்புசாமி**
இராணிப்பேட்டை, மா.செ., மா.பெ.பொ.க.

தோழர் **த. இளவரசன்**
அரியலூர் மா.செ., மா.பெ.பொ.க.

**சம்பந்த சிவக்குமார்,** மா.பெ.பொ.க.

நிகழ்ச்சித் தொடக்கத்தில் அல்லிநகரம்
**சீனி. அறிவுமழை கொள்கைப் பாடல்கள் பாடுவார்.**

நன்றியுரை : தோழர் **இரா. நாராயணமூர்த்தி**
மா.பெ.பொ.க., காஞ்சிபுரம்

அனைவரும் வருக ! வருக !

படங்கள்

படங்கள்

படங்கள்

படங்கள்

படங்கள்

# வேங்கைவயல் மேனிலை குடிநீர்த் தொட்டியில் மனித மலத்தைக் கலந்த கொடுஞ்செயல்


**- சா.குப்பன்**

புதுக்கோட்டை மாவட்டம், அன்னவாசல் ஒன்றியத்தில் உள்ள முத்துக்காடு ஊராட்சியில் உள்ளது இறையூர்-வேங்கைவயல். பட்டியல் வகுப்பு மக்கள் 32 குடும்பங்கள் வசிக்கின்ற ஒரு தெரு இறையூரின் வேங்கைவயல். அந்தப் பகுதியில் உள்ள 5 குழந்தைகளுக்கு உடல் நலக்குறைவு காரணமாக புதுக்கோடை அரசினர் மருத்துக் கல்லூரி மருத்துவமனைக்கு மருத்துவத்திற்கு அழைத்துச் சென்றுள்ளனர். மருத்துவமனையில் குழந்தைகள் அருந்திய நீரில் ஏதாவது கலந்திருக்கலாம் என மருத்துவர்கள் தெரிவித்தனர். அதன்பின் மேனிலை தண்ணீர் தொட்டியை ஆய்வு செய்த போது 26.12.2022 அன்று நீரில் மனித மலம் கலக்கப்பட்டுள்ளது என்பது கண்டறியப்பட்டது.

அடுத்த நாளான 27.12.2022 அன்று மாவட்ட ஆட்சியர் இறையூருக்கு ஆய்வுக்குச் சென்ற போது, அந்த ஊர் அய்யனார் கோவிலுக்குள் பட்டியல் வகுப்பு மக்கள் அனுமதிக்கப்படுவதில்லை என்பதும் தேநீர் கடையில் இரட்டைக் குவளை பயன்படுத்தப்படுகிறது என்பதும் வெளிச்சத்திற்கு வந்தது. மாவட்ட ஆட்சியர் பட்டியல் வகுப்பினருடன் அந்தக் கோவிலுக்குச் சென்ற போது தலித்துகள் நுழைவதைத் தடுக்கும் நோக்கத்துடன் பூசாரியின் மனைவி சாமி வந்ததுபோல் ஆடினார். அதனால் அப்பெண் வன்கொடுமைச் சட்டத்தின்கீழ் கைது செய்யப்பட்டார்.

முத்துக்காடு ஊராட்சியில் முத்துக்காடு, கீழ்முத்துக்காடு கோஞ்சம்பட்டி, புதுவயல், காவேரி நகர், இறையூர், வேங்கைவயல் என 7 பகுதிகள் உள்ளன. வேங்கைவயல் என்பது இறையூரில் உள்ள பட்டியல் சாதி மக்கள் 32 குடும்பங்கள் வசிக்கும் ஒரு தெரு. அந்த ஒரு தெருவுக்கு ஏன் தனி மேனிலைத் தண்ணீர்த் தொட்டி எனின் இறையூரில் அமைந்துள்ள மேனிலை நீர்த் தொட்டியிலிருந்து வேங்கைவயல் பகுதிக்கு தண்ணீர் வழங்குவதில்லை என பல ஆண்டுகளாக இருந்த சிக்கலைத் தீர்க்க விரும்பாத அரசு நிர்வாகம் 2017-இல் அங்கு 10,000 லிட்டர் கொள்ளளவு உள்ள மேனிலை நீர்த் தொட்டியை அமைத்துக் கொடுத்தது.

முத்துக்காடு ஊராட்சி மன்றத் தலைவராக பத்மா என்பவர் உள்ளார். பத்மாவின் கணவர் முத்தய்யா இதற்கு முன் ஊராட்சித் தலைவராக இருந்தவர். முத்தய்யா மனைவியின் சார்பாக இப்போதும் ஊராட்சி மன்றத் தலைவர் போல் செயல்பட்டு வருகிறார். பெண்களுக்காக ஒதுக்கப்படும் ஊராட்சி மன்றத் தலைவர் பதவிகளில் உள்ள பெண்களின் கணவன்களே தலைவர்களாகச் செயல்படும் போக்கே பெரும்பாலும் நிகழ்கிறது.




முத்துக்காடு ஊராட்சியில் ஊர்ப்பகுதி மக்களுக்கான குடிநீர் மேனிலைத் தொட்டிக்கும் வேங்கைவயலில் உள்ள தலித் மக்களுக்கான குடிநீர் மேனிலைத் தொட்டிக்கும் நீரேற்றும் மோட்டாரை இயக்குபவராக சண்முகம் என்பவர் இருந்து வந்தார். சண்முகத்திற்கும் வேங்கைவயல் தலித் மக்களுக்கும் இணக்கமான உறவு இருந்து வந்தது. கடந்த ஊராட்சி மன்றத் தேர்தலின் போது முத்தய்யா, சண்முகத்தை உடன் அழைத்துக் கொண்டு வேங்கைவயல் தலித் மக்களிடம் வாக்குக் கேட்டார். அப்போது சண்முகம், “உங்கள் குறைகளைத் தீர்த்து வைப்பதற்கு நான் பொறுப்பு” என்று தலித் மக்களிடம் உறுதியளித்தார்.

தேர்தல் முடிந்த பின் தலித் மக்களின் குறைகளை முத்தய்யா மதிக்காமல் சாதி ஆணவத்துடன் நடந்து கொண்டார். தலித்துகள் சார்பாக சண்முகம் முத்தய்யாவிடம் வாதிட்டார். எனவே, முத்தய்யா சண்முகத்தை நீரேற்றும் பணியிலிருந்து நீக்கிவிட்டார். பணிநீக்கம் செய்யும் அதிகாரம் வட்டார வளர்ச்சி அலுவலருக்குத்தான் உண்டு.

ஆகவே, சண்முகம் வட்டார வளர்ச்சி அலுவலரிடம் தன் பணிநீக்கம் குறித்து முறையிட்டார். வட்டார வளர்ச்சி அலுவலரின் அறிவுரையைக் கூட முத்தய்யா மதிக்கவில்லை. நேருக்கு நேர் நின்று தன்னை எதிர்க்கும்

தலித்துகளுக்குப் பாடம் புகட்டவும் சண்முகத்தைப் பழிவாங்கவும் எண்ணங்கொண்டு முத்தய்யா தன் ஆட்களை ஏவி வேங்கைவயல் குடிநீர் மேனிலைத் தொட்டியில் மனித மலத்தைக் கலந்திருக்கலாம் என்று கள ஆய்வாளர்கள் கருத்துரைக்கின்றனர்.

இறையூர், வேங்கைவயல் வன்கொடுமை நிகழ்வின் விசாரணையை 14.1.2023 அன்று சிபிசிஅய்டி பிரிவுக்கு அரசு மாற்றி உத்தரவிட்டுள்ளது. விசாரணையை விரைவாக முடித்து, உண்மை குற்றவாளிகளைக் கண்டறிந்து விரைவில் தண்டனை அளிக்கப்பட ஆவன செய்ய வேண்டும் என்பதே நமது கோரிக்கையும் ஆகும்,

அண்மைக் காலத்தில் பட்டியல் வகுப்பு மக்களுக்கு எதிரான இதுபோன்ற வன்கொடுமைச் செயல்கள் பெருகி வருகின்றது. இதற்கான காரணங்களில் ஒன்று, இதற்குமுன் ஆதிக்க சாதியினர் பட்டியல் வகுப்பு மக்களுக்கு நிகழ்த்தப்படும் கொடுமைகளை எதிர்க்காமல் இருந்தனர்; அல்லது கமுக்கமாக மறைக்கப்பட்டு விடும். இப்போது ஏற்பட்டுள்ள விழிப்புணர்வு மற்றும் சமூக ஊடகங்கள் வளர்ச்சியின் தாக்கத்தின் காரணமாக பாதிப்புக்கு உள்ளானவர்கள் எதிர்த்துச் செயல்பட தலைப்பட்டுள்ளனர் என்பது நல்ல மாற்றமே ஆகும்.

எந்த ஊரில் இதுபோன்ற வன்கொடுமைகள் நிகழ்ந்தாலும் தலித் இயக்கத்தினரோ, மனித உரிமை செயற்பாட்டாளர்களோ ஆர்ப்பாட்டம், போராட்டம் என நடத்திய பின்னரே காவல் துறையினர் முதல் தகவல் அறிக்கையைப் பதிவு செய்யும் போக்கு வழக்கமாக நிலவுகிறது. அதன்பின் தொடர் போராட்டங்கள் நடத்தினால் தான் விசாரணையே தொடங்கப்படுகிறது. நடக்கும் விசாரணையும் மிகவும் சுணக்கமாக காலம் இழுத்தடிக்கப்படும் நிலையே உள்ளது. விசாரணை என்பதும் பாதிப்பை ஏற்படுத்தியவர்களுக்கு எதிராகப் போகாமல் பாதிப்புக்கு உள்ளானவர்களையும் இணைத்து இருதரப்பு மோதல் என்று இரண்டு பக்கத்தினரையும் விசாரிக்கிறோம் என்ற பெயரில் பாதிக்கப்பட்டவர்களை விசாரணை - விசாரணை என அடிக்கடி தொல்லைக்கு ஆளாக்குவதும் அச்சமூட்டி, அடக்கி சமாதானம் செய்யும் முயற்சிகளே நடக்கின்றன. குற்றமிழைத்தவர்கள் தண்டனைக்குள்ளாவதில் இருந்து பெரும்பாலும் தப்ப விடப்படுகின்றனர்.

தலித்துகள் குடிசைகள்-வீடுகள் கொளுத்தப்பட்டால் அவர்களே தங்கள் குடிசைகளைக் கொளுத்திக் கொண்டார்கள் என கதைபுனைந்து பரப்பப்படுவதும் வாடிக்கையாக உள்ளது. அவர்கள் அருந்தும் நீர்த்தொட்டியில் கூட அவர்களே மலத்தைக் கலப்பார்களா? அப்படிச் செய்ய மனம் ஒப்புமா என்று கூட கதை கட்டுபவர்கள் கருதுவதில்லை என்பது வருந்தத்தக்க சாதிய மனநிலையாக உள்ளது.

பிரித்தானியர் ஆட்சிக் காலத்தில் இதுபோன்ற கலவரங்கள் நிகழ்ந்தால் அந்த ஊரில் வசிக்கும் அனைவருக்கும் தண்டத் தொகை விதிப்பது என்பது நடைமுறையில் இருந்தது. இப்போதும் அரசு நிர்வாகம் அந்த நடைமுறையை மேற்கொண்டால், சாதிப் பற்றின் காரணமாக உண்மை குற்றமிழைத்தவர்களைக் காப்பாற்ற உண்மை வெளியாகாமல் மூடிமறைக்கும் போக்கை-முட்டுக்கட்டையை அகற்ற முடியுமா என்பதைச் சோதனை செய்து பார்க்கலாம்.

சிபிசிஅய்டி போன்ற புலனாய்வு அமைப்புகள் உண்மையான குற்றவாளிகளைக் கண்டறிந்தபின், குற்றவாளிகளைக் காப்பாற்ற வேண்டி, நடந்த கொடுமையின் காரணங்களை திசைதிருப்பும் நடவடிக்கைகளில் ஈடுபட்ட உள்ளூர் காவல் துறையினர் மற்றும் வருவாய்த் துறை அலுவலர்கள் மீது அரசு நடவடிக்கை எடுக்க வேண்டும். இந்த நடைமுறையை அரசு மேற்கொண்டால் குற்றங்களை மூடி மறைக்கும் முயற்சிகள் குறைய வாய்ப்புள்ளது.

இறையூர்-வேங்கைவயல் வன்கொடுமை நிகழ்வு நடந்த உடனே மாநில/ஒன்றிய பட்டியல் வகுப்பினர் ஆணையமோ, மாநில/ஒன்றிய மனித உரிமைகள் ஆணையமோ புகார்கள் அவர்களுக்கு அளிக்காமலே அங்கு வரத் தடை என்ன? செய்தித்தாள்களில் வந்துள்ள செய்திகள் அடிப்படையில் உடனடியாக அங்கு வந்து விசாரணை நடத்தி உண்மையைக் கண்டறிய ஏன் மறுக்கின்றன என்பது ஒரு புதிராகவே உள்ளது.

1927-இல் மேதை அம்பேத்கர் மகத் நகர் பொதுக் குளத்தில் நீர் அருந்த நடத்திய நெடிய போராட்டம் முதல் இன்று வரை பொதுக் குடிநீர் நிலைகளைப் பட்டியல் வகுப்பு மக்கள் பயன்படுத்தும் உரிமைக்காக நூறாண்டு காலமாக போராடும் நிலை நீடிப்பது மனித குலத்திற்கே அவமானம் அல்லவா? பெரியார், அம்பேத்கர் கொள்கைகளை உயர்த்திப் பிடிப்பதாக நெஞ்சு நிமிர்த்தி நிற்கும் தமிழர்களுக்குத் தலைகுனிவு அல்லவா?

இவ்வளவு காலத்திற்குப் பிறகும் தமிழ்நாட்டில் ஆளுநர் பதவியில் அமர்ந்துள்ள ஒருவர் சமூக நீதி, சமத்துவம், பெரியார், அம்பேத்கர் என்ற சொற்களை உச்சரிக்க மறுப்பதும் அய்.ஏ.எஸ்., அய்.பி.எஸ். - உயர் அதிகாரிகள் மாநில அரசு சொல்வதற்கு கீழ்ப் படியாதீர்கள்; ஒன்றிய அரசு சொல்வதையே செய்யுங்கள் என்று அறிவுரை கூறுவது சாதி ஆணவம் கொண்ட உயர் அதிகாரிகளை ஊக்கப்படுத்துவது ஆகாதா? என்ற வினாவும் எழுகிறது.

தமிழ்நாட்டரசு வேங்கைவயலில் குற்றமிழைத்தவர்கள் விரைவில் தண்டிக்கப்படவும் இதுபோன்ற செயல்கள் இனி நிகழாமல் இருக்க தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ள வேண்டும் என எதிர்பார்க்கின்றோம். ❖

# இசுலாமியர் படுகொலையை அம்பலப்படுத்தும் ஆவணப்படம்

**- தி.துரை சித்தார்த்தன்**


2002ஆம் ஆண்டு பிப்ரவரி 27ஆம் தேதி கோத்ரா இரயில் நிலையம் அருகே சபர்மதி எக்ஸ்பிரஸ் இரயிலில் வந்த கரசேவர்களின் இரண்டு பெட்டிகளில் திட்டமிட்டு தீவைத்தனர். இந்தச் சம்பவத்தில், 59 கரசேவர்கள் எரித்துக் கொல்லப்பட்டனர். இதை செய்தது நரேந்திர மோடிதான் என்று முன்னாள் பிரதமர் வாஜ்பாயி தன்னிடம் சொன்னதாக வாஜ்பாயின் மருமகள் ஊடகங்களுக்கு தெரிவித்திருந்தார்.

இது குறித்து அவர் ஊடகங்களுக்கு வழங்கிய நேர்காணலில், “இரயிலில் வந்த இந்து சாமியார்களை, கோத்ரா இரயில் நிலையத்தில் வைத்து இரயிலோடு சேர்த்துத் தீ வைத்துக் கொளுத்தியதற்குக் காரணம் நரேந்திர மோடிதான். அந்தப் பழியை ஏதுமறியாத இஸ்லாமியர்கள் மீது சுமத்தி,” ஐய்யயோ இந்து சாமியார்களை உயிரோடு கொளுத்திட்டானுங்கடா முஸ்லிம்கள்...!” என்று பொய் மூட்டைகளை அவிழ்த்துக் கொட்டி கலவரத்தை உண்டாக்கி, முஸ்லிம்கள் மீது வன்முறைகளைக் கட்டவிழ்த்துவிட்டு 2000-க்கும் மேற்பட்ட முஸ்லிம்களைக் கொலை செய்ததும் மோடியின் ஆட்கள்தான்!" என்று, முன்னாள் பிரதமர் வாஜ்பேயி தம்மிடம் சொன்னதாக, வாஜ்பேயியின் மருமகள் கூறுகிறார்.

அப்பாவி இந்து சாமியார்களும், ஏதுமறியா இஸ்லாமிய மக்களும் ஆர்.எஸ்.எஸ்-பிஜேபியின் சுயநல அரசியலுக்காகக் கொல்லப்பட்டு 22 ஆண்டுகள் கடந்த நிலையில், உண்மைகள் வெளியே வரத் தொடங்கியுள்ளன. மாந்த குலத்திற்கு எதிராக அதிகாரத்தை நிலைநிறுத்திக் கொள்வதற்காக திட்டமிட்டு நடத்தப்பட்ட நிகழ்வு தான் கோத்ரா இரயில் எரிப்பு சம்பவம், அதைத் தொடர்ந்து சிறுபான்மையினரான இஸ்லாமிய மக்கள் மீது ஏவப்பட்ட பெரிய அளவிலான கலவரம். இந்தக் கலவரத்தில் ஏராளமானோர் கொல்லப்பட்டது குறித்து இந்திய அளவிலும், சர்வதேச அளவிலும் ஏற்கனவே கண்டனங்கள் எழுந்தன. இந்நிலையில் பிபிசி சேனல், அன்றைய குஜராத் முதல்வரும் இன் றைய பிரதமருமான நரேந்திர மோடி குறித்து “இந்தியா: தி மோடி குவெஸ்டின்” என்ற ஆவணப் படத்தை தயாரித்துள்ளது. இந்த ஆவணப்படம் இரு பகுதிகளாக எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணப்படம், முழுமையாக 2 மணிநேரம் ஓடக்கூடியவை. முதல்பகுதி படம் கடந்த மாதம் 17.01.2023 அன்று செவ்வாய் கிழமை வெளி யானது. இது பா.ச.க. இந்துத்துவ கும்பலின் வெறி யாட்டத்தை வெளிச்சம் போட்டுக் காட்டியுள்ளது.

இந்த ஆவணப்படத்தை பாகிஸ்தானைப் பூர்வீக மாகக் கொண்ட பிரிட்டன் எம்.பி. இம்ரான் ஹுசைன் எடுத்துள்ளார். 2022 கோத்ரா கலவரம் என்பது இன அழிப்பு என்று அவர் விமர்சித்துள்ளார்.

இந்த ஆவணப்படம் குறித்து ஒன்றிய அரசு கூறுகையில் இந்தியாவுக்கு எதிராகப் பிரச்சாரம் செய்யும் நோக்கில் இந்தத் திரைப்படம் எடுக்கப்பட்டுள்ளது. இந்த ஆவணப்படத்தை இந்திய




அரசு விரும்பவில்லை. பாரபட்சமாக,உண்மைத்தன்மைஇல்லாமல், கண்ணியத் தன்மையற்று, முற்றிலும் காலணி ஆதிக்க மனோ நிலையுடன் இந்த ஆவணப்படம் எடுக்கப்பட்டுள்ளது எனக் கண்டிக்கிறது. இந்நிலையில் தகவல் மற்றும் ஒளிபரப்புத்துறை அமைச்சகத்தின் செயலாளர் அபூர்வா சந்திரா, தகவல் தொழில்நுட்ப விதிகள் 2021, அவசர கால அதிகாரத்தைப் பயன்படுத்தி, யூடியூப் மற்றும் ட்விட்டரில் மோடி குறித்த ஆவணப்பட இணைப்பு பெறத் (லிங்குகளை) தடை செய்து கடந்த வாரம் திடீரென உத்தரவு பிறப்பித்துள்ளார். இது கடும் கண்டனத்துக்கு உரியது.

பெரியார் சொன்னதைப் போல “அயோகியர்களின் கடைசி புகலிடம் தேச பக்தி” என்பதை மீண்டும் மீண்டும் நிரூபிக்கிறது ஒன்றிய அரசு. ஆனால், இந்தத் தடைதான் இந்த ஆவணப்படம் இன்னும் வீரியத்துடன் மக்களைச் சென்றடைவதில் பெரும் பங்காற்றியது என்னும் அளவு இது பலரால் பதிவிறக்கம் செய்யப்பட்டு பார்க்கப்பட்டு வருகிறது. ஆவணப்படத்தின் சுருக்கம்! இதில் 2002-ஆம் ஆண்டு குஜராத்தில் நடந்த கலவரத்துக்கு அப்போதைய மோடி அரசுதான் காரணம் எனக் குற்றச்சாட்டு முன் வைக்கப்பட்டிருக்கிறது. முதல் பாகத்தில் பாதிக்கப்பட்ட வர்கள் சொல்லும் சாட்சிகளும், இரண்டாம் பாகத்தில் மோடிக்கு எதிராக சாட்சி சொன்ன அமைச்சர்களும், அதிகாரிகளும் இருக்கும் காட்சிகள் வெளி வந்திருக் கின்றன. குறிப்பாக, அமைச்சரின் மர்மமான மரணம், ஐ.ஏ.எஸ் அதிகாரி சிறையில் அடைப்பு என அந்தக் கலவரத்தின் தொடர்ச்சியான சம்பவங்கள் காட்சிப்படுத்தப் பட்டிருக்கின்றன.

கோத்ரா கலவரத்தில் சிறுபான்மையினர்களை பாதுகாக்க அப்போது இருந்த மோடி தலைமையிலான பா.ஜ.க அரசும், குஜராத் காவல் துறையும் தவறிவிட்டது என்று கோத்ரா கலவரம் குறித்து விசாரித்த பிரிட்டன் எம்.பி.க்கள் குழு இந்த ஆவணப் படத்தில் தெரிவித்துள்ளது. இந்தப் பதிவுகள் பெரும் விவாதங் களைக் கிளப்பியிருக்கிறது. குற்றம் சாட்டப்பட்ட அன்றைய முதல்வர் மோடி தொடங்கி அதிகாரிகள் வரை என அனைவரையும் நீதிமன்றம் வழக்கிலிருந்து விடுவித்துவிட்டது.

ஆனால், அப்போது மாநிலத்தின் முதலமைச்சராக இருந்தவர், 2,000 அப்பாவி இஸ்லாமிய மக்கள் கொல்லப் பட்டதற்குப் பொறுப்பாக மாட்டாரா? என்னும் கேள்விதான் இந்த ஆவணப்படத்தின் வாயிலாகவும் எழுப்பப்படும் முதன்மை

யான வினா? ஒருவர் தன்னையே நாடு போற்றும் பிரதமராக முன்னிறுத்தும் போது, எதனைப் பின்னணியாகக் கொண்டு இவர் அதிகார இருக்கையில் அமர்ந்திருக்கிறார் என்பதை மக்கள் அறிந்துகொள்ள வேண்டும். அதிகாரத்துக்கு வர 'இந்து' என்னும் கருவியை ஆர்.எஸ்.எஸ்.ம், பா.ச.க.வும் எப்படி பயன்படுகிறது என்பதற்கு பாபர் மசூதி-ராம ஜென்ம பூமி சிக்கலை 1949 முதல் எழுப்பி வந்ததும் அதற்காக 1990-ஆம் ஆண்டு மண்டல் கமிஷன் அறிக்கை அமுல்படுத்த உத்தரவு பிறப்பித்த வி.பி.சிங் ஆட்சியை கவிழ்க்க அத்வானி நடத்திய ரத யாத்திரை பெரும் தொடக்கப் புள்ளியாக அமைந்தது.

இதற்கு ஆதரவாக விளங்கியது இந்திய தேசிய காங்கிரசு. ஆனால், கோத்ரா சம்பவம் ஒட்டுமொத்த நாட்டையே உலுக்கி எடுத்தது. இப்படியாக தங்களை இந்து காவலராக பா.ச.க.வை கட்டமைத்த பிம்பம்தான் ஆட்சியில் அமர வைத்திருக்கிறது. மதம் வெளியே தெரிந்தாலும் அதன் உள்ளடக்கம் அரசியல்தான். இதில் நரேந்திர மோடி மட்டுமா குற்றவாளி? அதை தடுக்க-தண்டிக்கத் தவறிய-''வேடிக்கை பார்த்த அப்போதையத் தலைமை அமைச்சர் வாஜ்பேயி, அப்போதையக் குடிஅரசுத் தலைவர் அப்துல் கலாம் மற்றும் உள்ள அதிகார அமைப்புகள்




நீதித்துறை உட்பட அனைத்தும் குற்றவாளிகள்தான். மேலும்-அவிழ்த்து விடும் பொய் மூட்டைகளையெல்லாம் உண்மை என்று நம்பி மதவெறி தலைக்கேறி அன்றி லிருந்து இன்று வரை பிஜேபிக்கு வாக்களித்து பிஜேபி ஆட்சியை ஏற்படுத்தத் துணை போகும் அத்தனை பேரும் குற்றவாளிகள்தான். நரேந்திர மோடியின் பாசிச இந்துத்துவத்தை அம்பலப்படுத்துவோம்!

காவி பாசிசத்தையும் ஏகாதிபத்தியத்தையும்எதிர்த்து உழைக்கும் மக்களை அரசியல் மயப்படுத்துவோம்!! ❖

## கரூர் மாநகரில் பெரியாரியல் ஓர் அறிமுகம் பயிலரங்கம் மற்றும் நூல் அறிமுகக் கூட்டம்




கரூர் மாநகரில் 25.12.2022 அன்று காலை 10 மணியளவில் தமிழ்நாடு அரசு ஊழியர் சங்கக் கட்ட டத்தில் பெரியாரியல் ஓர் அறிமுகம் என்ற தலைப்பில் பயிலரங்கம் நடைபெற்றது. சாமானிய மக்கள் நல கட்சியின் பொதுச் செயலாளர் முனைவர் ப. குண சேகரன் அவர்களும், த.பெ.தி.க. தோழர் கு.கி.தனபால், மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் அவர்களும் பெரியாரியல் குறித்து பயிற்றுவித்தனர். கரூர் கண்ணல், மூத்த தோழர்கள் ம.காமராசு, மா.துரைசாமி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

தோழர் ஆ. மலைக்கொழுந்தன் எழுதிய ''போலி களோடு ஒரு போர் நூல்'' அறிமுக விழா நடைபெற்றது. மா. இராமசாமி (ஆசிரியர், ஓய்வு), முனைவர் ப. குணசேகரன் ஆகியோர் உரையாற்றினர். வாலாசா வல்லவன் நூலை அறிமுகம் செய்து சிறப்புரை ஆற்றினார்.

## திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் 17ஆம் ஆண்டு தொடக்க விழா



திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் 17ஆம் ஆண்டு தொடக்க விழா அன்பகத்தில் 22.1.2023 அன்று நடைபெற்றது. வி.சி.க. சட்டமன்ற உறுப்பினர், ஆளூநர் ஷாநவாஸ் கலந்து கொண்டு உரையாற்றினார். விழாவில் மூன்று நூல்கள் வெளியிடப்பட்டன.

வெற்றிச் செல்வன் எழுதிய ''**திராவிடம் அரசியலும், அவதூறும்**''

சாரதா தேவி எழுதிய ''**புல்டோசர் அரசியல்**''

ஜான் வில்லியம் டிராப்பர் எழுதி, ஓவியா அவர்கள் மொழிபெயர்த்த ''**மதத்துக்கும் அறிவியலுக்குமான மோதலின் வரலாறு**'' என்ற நூலை பேராசிரியர் சுப. வீரபாண்டியன் வெளியிட வாலாசா வல்லவன் பெற்றுக் கொண்டார். உமா, சிங்கராயர் உள்ளிட்டோர் திராவிடர் இயக்கத் தமிழர் பேரவையின் கடந்தகால வரலாற்று நிகழ்வுகளை விளக்கி உரையாற்றினர். இறுதியில் பேராசிரியர் சுப. வீரபாண்டியன் அவர்கள் நிறைவுரை ஆற்றினார்.

# காசித் தமிழ்ச் சங்கமம் காவிகளின் கபட நாடகம்

**வாலாசா வல்லவன்**

மோடி தலைமையிலான இந்திய ஒன்றிய அரசு இந்தி மொழியை வளர்ப்பதற்கும் சமற்கிருத மொழியை வளர்ப்பதற்கும் ஆண்டுதோறும் பல நூறு கோடிகளைச் செலவழித்து வருகின்றது.

இந்திய அரசின் சுதந்திர நாள் பவழ விழா கொண்டாட்டத்தின் ஒரு பகுதியாக காசித் தமிழ்ச் சங்கமம் நிகழ்வை ஒன்றிய அரசு ஏற்பாடு செய்தது. சென்னையில் இயங்கிவரும் ஐ.ஐ.டி.யும், வாரணாசியில் இயங்கிவரும் பனாரஸ் பல்கலைக்கழகமும் இதற்கான ஏற்பாடுகளைச் செய்தன.

2022 நவம்பர் 17 தொடங்கி திசம்பர் 16 வரை ஒரு மாத காலம் இந்நிகழ்வு நடைபெற்றது. தமிழ் நாட்டில் இருந்து 13 தொடர் வண்டிகளில் 2,592 பேர் இந்தக் காசித் தமிழ்ச் சங்கத்திற்குச் சென்று வந்தனர், காசி தமிழ்ச் சங்கமம் நிகழ்வுக்குச் சென்று வந்தவர்களுக்குத் தொடர் வண்டிப் பயணம், உணவு, தங்குமிடம் ஆகியவை அனைத்தும் இலவயமாக வழங்கப்பட்டன. ஆளுநர் இரவி கொடி அசைத்து முதல் தொடர் வண்டியை அனுப்பி வைத்தார். இந்த பயணத்திற்கு ஆன செலவு முழுவதையும் ஒன்றிய அரசு ஏற்றது.

தலைமை அமைச்சர் மோடி இந்நிகழ்வைத் தொடங்கி வைத்து உரை யாற்றுகையில், பண்டையக் காலந்தொட்டே தமிழ்நாட்டிற்கும் (இராமேசுவரம்) காசிக்கும் தொடர்பு உண்டு; தமிழகத்திற் கும் காசிக்கும் இணைப்பு எப்போதும் இருந்து வந்துள்ளது என்று கூறினார். பா.ச.க. அரசு கொண்டுவரும் தேசியக் கல்விக் கொள்கை, அந்த இணைப்பை மேலும் வலிமைப்படுத்தும் என்று கூறினார். தமிழ் மிகப் பழமையான மொழி. தமிழ்மொழியை 130 கோடி இந்தியர்களும் போற்றிப் பாதுகாக்க வேண்டும் என்றும் கூறினார்.

இறுதி நாளில் உ.பி. முதல்வர் யோகி ஆதித்யநாத் தலைமையில் உள்துறை அமைச்சர் அமித்சா உரையாற்றினார். இந்திய ஒருமைப்பாட்டை மிகவும் வலியுறுத்திப் பேசினார். இந்த நிகழ்வு அதற்கு வலிமைச் சேர்க்கும் என்றும் பேசினார். இதிலிருந்தே இவர்களின் உள்நோக்கத்தை புரிந்து கொள்ளலாம்.

இந்தி, சமஸ்கிருத மொழிகளை திணிப்பதற்காகவே இப்படி ஒரு நாடகம் நடத்தப்படுவதாக சி.பி.ஐ.(எம்) கட்சி குற்றம் சாட்டி யுள்ளது. இந்திய சனநாயக வாலிபர் சங்கத்தினர் காசி தமிழ்ச் சங்கத்திற்குப் பயணிகளை ஏற்றிச் சென்ற தொடர் வண்டிகளை மறித்துப் போராட்டம் நடத்தினர். தமிழ்நாட்டு அரசையோ, உண்மையான, உணர்வுள்ள தமிழ் அமைப்புகளையோ இவர்கள் அழைத்து இதை நடத்த வில்லை. பா.ச.க. ஆதரவு அமைப்பினர் மட்டுமே இதில் கலந்து கொண்டனர்.

இந்திய ஒன்றிய அரசு உண்மையிலேயே தமிழ் மொழியின் மீது அக்கறைக் காட்டுகிறதா? சென்னை ஐ.ஐ.டி.யில் நடைபெறும் நிகழ்வுகளில் தமிழ்த்தாய் வாழ்த்தே பாடப்படுவதில்லை. ஒன்றிய அரசின் 'கேந்திரிய வித்தியாலயா' பள்ளிகளில் தமிழ் ஒரு பாட மொழியாகக் கூட இடம்பெறவில்லை. சென்னை உயர்நீதிமன்றத்தில் தமிழை வழக்காடு மொழியாகப் பயன்படுத்த வேண்டும் என்ற தமிழ்நாட்டரசின் கோரிக்கையை இன்று வரை ஏற்றுக்கொள்ளவில்லை.

ஒன்றிய அரசு அறிவிக்கின்ற புதியப் புதியத் திட்டங்களுக்கு இந்தி (அ) சமற்கிருதப் பெயர்களையே சூட்டுகின்றனர்.



பெரும்பாலான ஒன்றிய அமைச்சர்கள் இந்தியில் விடை அளிக்கின்றனர். செம்மொழியான தமிழ் மொழிக்கும் சமற்கிருத மொழிக்கும் ஒன்றிய அரசு எவ்வளவு நிதியை ஒதுக்கீடு செய்துள்ளது என்று கரூர் நாடாளுமன்ற உறுப்பினர் சோதிமணி அவர்களின் கேள்விக்கு ஒன்றியக் கல்வி அமைச்சர் எழுத்து பூர்வமாக அளித்த பதிலில் இவர்களின் கபட நாடகம் தெரிய வருகிறது. மோடி அரசு கடந்த எட்டு ஆண்டுகளில் தமிழுக்கு 74.04 கோடியும் சமற்கிருதத்திற்கு 1487.81 கோடியும் செலவழித்துள்ளது. ஆண்டுவாரியாக அதன் விவரம் வருமாறு :

தொகை ரூ. கோடிகளில்...

| | தமிழ் | சமற்கிருதம் |
|---|---|---|
| 2014-15 | 8.27 | 125.80 |
| 2015-16 | 11.99 | 161.47 |
| 2018-17 | 5.10 | 149.19 |
| 2017-18 | 10.67 | 198.31 |
| 2018-19 | 4.65 | 214.37 |
| 2019-20 | 9.80 | 246.99 |
| 2020-21 | 11.73 | 192.85 |
| 2021-22 | 11.86 | 198.83 |

(இந்தியன் எக்ஸ்பிரஸ் 20.12.2022) ஒன்றிய அமைச்சரின் மேற்கண்ட அறிக்கை ஒரு சில ஆயிரம் பேர் மட்டுமே பேசுவதாகக் கூறப்படுகிற செத்த மொழியான சமற்கிருதத்தை உயிர்ப்பிக்க ஆயிரங் கோடிகளைச் செலவு செய்து உள்ளதைக் காட்டுகிறது. உலகில் 8 கோடி மக்கள் பேசுகின்ற தமிழுக்குக் கடந்த 8 ஆண்டுகளில் 74.04 கோடி மட்டுமே செலவு செய்து உள்ளனர்.

ஐக்கிய நாடுகள் சபையில் இந்தி மொழியை ஒரு அலுவல் மொழியாகப் பயன்படுத்த பல நூறு கோடிகளைச் செலவழிக்கிறது இன்றைய பா.ச.க. மோடி தலைமையிலான ஒன்றிய அரசு. இந்தியா என்றால் இந்தி மொழி மட்டுமே பேசப்படுகின்ற நாடு என்று வெளி உலகிற்கு காட்டுவதற்காகப் படாதபாடுபடுகிறார்கள். இந்தியாவில் வாழ்ந்து வருகின்ற பல மொழித் தேசிய இன மக்களின் தாய்மொழிகளை அழித்து வருகின்றனர். இந்தி, சமற்கிருத மொழிகளைத் திணிக்கவும் சமற்கிருத மொழியில் இருந்துதான் தமிழ்மொழி தோன்றியது என்று நம்ப வைப்பதற்காகவும் தான் காசித் தமிழ்ச் சங்கமம் என்ற காவிகளின் சங்கமம் என்கிற நாடகம் நடந்தேறி முடிந்துள்ளது. ❖

# மருத்துவ உயர் கல்வியில் ஒன்றிய அரசின் ஆதிக்கம்

- மரு. சா.மா.அன்புமணி

இன்று தமிழ் நாட்டில் 36 அரசு மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இரண்டு அரசு பல் மருத்துவக் கல்லூரிகள் உள்ளன. இது மட்டுமன்றி சித்தா, ஒவ்வியல், ஆயுர்வேதம், யுனானி, யோகா என்று ஆயுஷ் மருத்துவக் கல்லூரிகள் ஆறு உள்ளன. தனியார் மருத்துவக் கல்லூரிகள் ஏறத்தாழ 50 உள்ளன.

2022 ஆம் ஆண்டில் தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் உள்ள எம்பிபிஎஸ் இடங்கள் 5050. எம்.டி மற்றும் எம்.எஸ் பட்ட மேற்படிப்பு இடங்கள் 2176. டி.எம், எம்.சி.எச். உயர் சிறப்பு மருத்துவ பட்டமேற்படிப்பு இடங்கள் 396. எம்டிஎஸ் 62 இடங்கள். இவற்றில், ஒன்றியத் தொகுப்பிற்கு எம்.பி.பி.எஸ் இடங்களில் 15%, எம்.டி, எம்.எஸ் இடங்களில் 50%, டி.எம், எம்.சி.எச் இடங்களில் 50% 2016 ஆம் ஆண்டு வரை வழங்கப்பட்டு வந்தது. 2016 ஆம் ஆண்டு டி,எம், எம். சி.எச் உயர் சிறப்பு பட்ட மேற்படிப்பு இடங்கள் அனைத்தையும் 100 ஒன்றிய அரசு எடுத்துக் கொண்டது.

தமிழ்நாட்டில் கிராமப்புறங்களில் பணியாற்றும் அரசு மருத்துவர்களுக்கு உள் ஒதுக்கீடு (சர்வீஸ் கோட்டா) 50 வழங்கப்பட்டு வந்தது. முன்னாள் முதல்வர் மறைந்த டாக்டர் கலைஞர் அவர்களால் வழங்கப்பட்டது. சர்வீஸ் கோட்டா நடைமுறையில் இருந்த காரணத்தி னால், கிராமப்புற தொடக்க நலவாழ்வு நிலையங்கள், ஊரக அரசு மருத்துவ மனைகளில் பணியாற்றி வந்த அரசு மருத்துவர்கள் எம்.டி, எம்.எஸ், டி.எம், எம்.சி.எச் பட்ட மேற்படிப்புகளுக்குச் செல்வதற்கு பெரு வாய்ப்பாக இருந்தது. இந்த வாய்ப்பானது 2016 ஆம் ஆண்டு முதல் ஒன்றிய அரசால் பறிக்கப்பட்டது. அதாவது அரசு மருத்துவர்களுக்கான உள் ஒதுக்கீடு (சர்வீஸ் கோட்டா) நடைமுறை நீக்கப்பட்டது.

2016 ஆம் ஆண்டு கட்டாய நீட் தேர்வு சட்டம் இளநிலை எம்பிபிஎஸ் சேர்க்கைக்கு ஒன்றிய பாஜக அரசால் தமிழ் நாட்டின் மீது திணிக்கப்பட்டு இன்றுவரை நடைமுறையில் உள்ளது. எம்பிபிஎஸ் சேர்க்கைக்கான நீட் தேர்வை எதிர்த்து தமிழ்நாடு தொடர்ந்து போராடி வருகிறது. மக்கள் நல வாழ்வு என்பது முழுவதும் மாநில அரசின் பொறுப்பில் இருந்து வருகிறது.

இதைக் கடந்த கொரோனா பேரிடர் காலத்தில் நாம் நேரடியாகக் கண்டோம். உணர்ந்தோம். மாநிலங்களில் உள்ள அரசு மருத்துவக் கல்லூரிகள், மருத்துவமனைகள் மாநில மக்களின் வரிப்பணத்தில் இருந்து மாநில அரசால் கட்டப்பட்டு, நடத்தப்பட்டு வருகின்றன. இதில் ஒன்றிய அரசின் தலையீடு நாளுக்கு நாள் அதிகரித்து வருகிறது.

தமிழ்நாட்டில் எம்பிபிஎஸ் சேர்க்கைக்கான நுழைவுத் தேர்வு 2007 ஆம் ஆண்டு திமுக ஆட்சிக் காலத்தில் நீக்கப்பட்டு +2 மதிப்பெண்கள் அடிப்படையில் 10 ஆண்டுகளாக எம்பிபிஎஸ் மாணவர் சேர்க்கை நடைபெற்றது. ஐக்கிய முன்னணி அரசு ஆட்சிக் காலத்தில் நீட் தேர்வு கொண்டு வரப்பட்டாலும், தமிழ்நாட்டிற்கு நீட் தேர்வில் இருந்து விலக்கு அளிக்கப்பட்டது. ஆனால், பாசக 2014 இல் ஒன்றிய ஆட்சிப் பொறுப்பிற்கு வந்த பிறகு, 2016 முதல் நீட் தேர்வு எம்பிபிஎஸ் சேர்க்கைக்கு கட்டாயமாக்கப்பட்டது.

இதனால் ஏராளமான கிராமப்புற பிற்படுத்தப்பட்ட, பட்டியல் பிரிவு மாணவர்கள் குறிப்பாக மாணவிகள் பாதிக்கப்பட்டனர். இந்த நிலை இன்று வரை நீடிக்கிறது. தமிழ்நாடு சட்டமன்றத்தில் கடந்த அதிமுக ஆட்சியில், இன்றைய திமுக ஆட்சியில் இரண்டு முறை நீட் தேர்வு விலக்கு சட்ட முன் வடிவு நிறைவேற்றப்பட்டது. அதற்கு மாநில ஆளுநர் முட்டுக் கட்டை போடுகிறார். அதற்கு மேல் ஒன்றிய அரசு சட்ட ஏற்பிசைவு வழங்காமல் காலம் கடத்துகிறது.

4/5/2017 அன்று நடுவண் நலவாழ்வு மற்றும் குடும்ப நலத்துறை அமைச்சகம் ஒரு கடிதத்தை மாநில அரசுகளுக்கு அனுப்பியது. அதில் நீட் உயர் சிறப்பு டி.எம், எம்.சி.எச் படிப்புகளுக்கு 100 இடங்களுக்கும் ஒன்றிய அரசே கலந்தாய்வு நடத்தும் என்று தெரிவிக்கப்பட்டது. அது மட்டுமன்றி பணியில் உள்ள மாநில அரசு மருத்துவர்களுக்கு இருந்த சர்வீஸ் கோட்டா எனப்படும் ஒதுக்கீட்டையும் நீக்கிவிட்டது. இது குறித்து மாநில அரசுகளிடம் சிறிதும் கலந்தாலோசிக்காமல், தானடித்த மூப்பாக, எதேச்சதிகாரமாக ஒன்றிய அரசின் நல வாழ்வுத்துறை இயக்குனர் 18-5-2017 இல் மாநில மருத்துவக் கல்வி இயக்குனர்களுக்கு அனுப்பிய கடிதத்தில், 26-7-2017க்குள் மாநில அரசு மருத்துவக் கல்லூரிகளில் இருக்கும் இடங்களின் தரவுகளை அனுப்ப வேண்டும் என்று உத்தரவிடுகிறார். இல்லையேல் உங்கள் மருத்துவ கல்லூரிகளில் சேர்க்கை நடத்த இயலாமல் போகும் என்று தெரிவிக்கிறார். நடுவண் அமைச்சகம் மாநிலங்களிடம் கலந்து ஆலோசிக்காமல் பொதுக் கலந்தாய்வுக்கு அனைத்திந்திய அளவில் உத்தரவிடுகிறது. இது கூட்டாட்சிக் கொள்கைக்கு எதிரானது. இது மாநில நல வாழ்வுக் கொள்கைக்கு எதிரானது. மட்டுமன்றி மாநில மாணவர்கள் மற்றும் நோயாளர் நலனுக்கும் எதிரானது ஆகும்.

மேலும் இந்திய மருத்துவ கவுன்சில் விதிகளுக்கும் முரணானது ஆகும்.

மருத்துவ கவுன்சில் விதிகள் சொல்வது என்ன? விதி 9 ஏ உட்பிரிவு 2 :- மாநில அரசு தரும் 50 விழுக்காடு அனைத்திந்திய ஒதுக்கீட்டு இடங்களுக்கும் ஒன்றிய அரசின் மருத்துவ கல்வி நிலையங்களில் உள்ள இடங்களுக்கும் ஒன்றிய அரசின் நல வாழ்வு இயக்குனரகம் கலந்தாய்வு நடத்தலாம்.

விதி 9ஏ உட்பிரிவு 3:- மாநிலங்களில் மீதம் உள்ள 50 இடங்களுக்கு மாநில அரசு கலந்தாய்வு நடத்தலாம். இவற்றை எல்லாம் கருத்தில் கொள்ளாமல், ஒன்றிய அரசு அனைத்து

அதிகாரங்களையும் தன்னிச்சையாக தானே எடுத்துக் கொள்கிறது.

மாடர்ன் பல் மருத்துவக் கல்லூரி எதிர் மத்திய பிரதேச அரசு வழக்கு. 2016 ஆம் ஆண்டு உச்ச நீதிமன்றத்தில் நடந்த வழக்கின் தீர்ப்பில், மாநில மக்களின் நலன், வளர்ச்சிக்கு மாநில அரசுகளே பொறுப்பு. தனது மாநில மாணவர்களின் நலனுக்கு தேவையான நடவடிக்கைகளை எடுக்க மாநில அரசுக்கு உரிமை உண்டு. உயர்கல்வித் துறை மாநில வளர்ச்சிக்கு, நலனுக்கு மிகவும் அவசியமான துறை ஆகும். மேலும் மாநில அரசு தானே நடத்தும் கல்வி நிறுவனங்களில் மாணவர் சேர்க்கை, கட்டணம், நடை முறைகள் இவற்றின் மீது முழு உரிமை பெற்றுள்ளது. ஏனெனில் மாநிலத்தில் வாழும் மக்களின் நிலைமை, ஏற்றத்தாழ்வுகள், சமமின்மை, வாய்ப்பின்மை இவற்றைப் பற்றி அந்தந்த மாநில அரசுக்குத் தான் முழுமையாகத் தெரியும். மாநில சட்டமன்றமே பல்வேறு தரப்பு மாணவர்களுக்கு சம வாய்ப்பு ஏற்படுத்தி தர முடியும் என்று கூறுகிறது.

அரசு மருத்துவர்களுக்கான உள் ஒதுக்கீடு (சர்வீஸ் கோட்டா) நீக்கப்பட்டதை எதிர்த்து தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் அனைவரும் களத்தில் இறங்கி போராடினர். தமிழ்நாடு மருத்துவ அலுவலர் சங்கமானது உச்சநீதி மன்றத்தில் 2018 ஆம் ஆண்டு, வழக்கு தொடர்ந்தது. வழக்கு எண்.196/2018. இவர்களோடு கேரளா, மகாராட்டிரா, அரியானா மாநிலங்களும் சர்வீஸ் கோட்டா தேவை என்று உச்சநீதிமன்றத்தில் வழக்கு மனு தாக்கல் செய்தனர். இவ்வழக்கில் உச்சநீதிமன்ற அரசமைப்புச் சட்ட அமர்வு, 31.8.2020 அன்று சர்வீஸ் கோட்டா வழங்கப்பட வேண்டும். வழங்குவதற்கு மாநில அரசிற்கு அனைத்து உரிமைகளும் உண்டு என்று தீர்ப்புரைத்தது. அந்த தீர்ப்புரையில் மாடர்ன் பல் மருத்துவக் கல்லூரி வழக்கில் சொல்லப்பட்ட தீர்ப்புப்படி மாநில அரசின் அதிகாரம் மருத்துவக் கல்வியில் நிலை நிறுத்தப்பட்டது. 42 ஆவது திருத்தம் மூலம் சுகாதாரம் பொதுப் பட்டியலில் இருந்த போதும், மாநில அரசின் உரிமை எப்போதும் போலவே தொடர்கிறது. மாநில அரசுப் பணியில் உள்ள மருத்துவர்களுக்கு மாநிலத் தகுதிப் பட்டியல் மூலம் உள் ஒதுக்கீடு (சர்வீஸ் கோட்டா) தருவதற்கு மாநில அரசின் சட்டம் இயற்றும் அதிகாரம் மற்றும் திறனுக்குள் வரும் என்று தீர்ப்புரைத்தனர்.

2020 ஆம் ஆண்டு சர்வீஸ் கோட்டா செல்லும் என்று உச்ச நீதிமன்ற அரசமைப்புச் சட்ட அமர்வு தீர்ப்புரைத்த பிறகும், டி.எம், எம்.சி.எச் உயர் சிறப்பு மருத்துவ மேற் படிப்புகளுக்கு ஒவ்வொரு ஆண்டும் நாம் உச்ச நீதிமன்ற கதவைத் தட்ட வேண்டிய நிலை உள்ளது. டி.எம், எம்.சி.எச் பட்ட மேற்படிப்புகளில் சர்வீஸ் கோட்டா வழங்க வேண்டும் என்று தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் மற்றும் பட்ட மேற் படிப்பு மருத்துவர்கள் சங்கம் சார்பில் அதன் மருத்துவர்கள் வழக்கு தொடுத்தனர். தமிழ்நாடு அரசும் இந்த வழக்கில் இணைந்து கொண்டது. கடந்த இரண்டு ஆண்டுகளாக டிஎம், எம் சி எச் படிப்புகளில் சர்வீஸ் கோட்டா வழங்குவதற்கு இடைக்கால தீர்ப்பு வழங்கி வருகிறது உச்ச நீதிமன்றம். இதில் தமிழ்நாடு அரசும் மனுதாரராக சேர்ந்து வாதிட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

ஒரு மாநிலத்தில் குறிப்பாக தமிழ்நாட்டில் மருத்துவ வளர்ச்சி என்பது பெரு நகரங்கள் மட்டுமன்றி சிறு நகரங்கள் கிராமப்புறம் வரை சீரான வளர்ச்சி பெற்று உள்ளது. இதற்குக் காரணம் இங்கே நூறு ஆண்டுகளாக நடைமுறைப்படுத் தப்பட்டுள்ள சமூக நீதி, 69 இட ஒதுக்கீடு மற்றும் அடுத்தடுத்து வந்த அரசுகள் மாவட்டத்திற்கு ஒரு மருத்துவக் கல்லூரி என்று கொள்கை முடிவு எடுத்து நடைமுறைப்படுத்தியது. கல்வி மற்றும் மருத்துவத்திற்காக தேவையான அளவிற்கு நிதி ஒதுக்கியது போன்றவை முக்கிய காரணங்களாகும்.

2020 ஆம் ஆண்டு தமிழ் நாட்டில் மக்கள் நல வாழ்வுத் துறைக்கு 15,873 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. அதில் மருத்துவக் கல்விக்காக 5623 கோடி ஒதுக்கப்பட்டுள்ளது. இவ்வளவு மிகப்பெரிய தொகையை தமிழ்நாடு அரசு ஆண்டுதோறும் மருத்துவக் கல்விக்காக செலவிட்டு வருகிறது. ஆனால் இதில் ஒன்றிய அரசினுடைய பங்கு எதுவுமில்லை.

தமிழ்நாடு அரசு மருத்துவர்கள் சர்வீஸ் கோட்டா மூலம் மருத்துவ பட்ட மேற்படிப்பு, உயர் சிறப்பு மருத்துவப் படிப்பு படிப்பதால், அவர்கள் தாங்கள் ஓய்வு பெறும் வயது வரை அரசு பணியில் தொடர்வதாக, தமிழ்நாடு அரசிற்கு ஒப்பந்தம், பிணை செய்து தருகிறார்கள். அதன்மூலம் தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளில் போதுமான உயர் சிறப்பு மருத்து வர்கள் தொடர்ந்து இருந்து வருகிறார்கள். வட்ட, மாவட்ட மருத்துவமனைகளிலும் சிறப்பு மருத்துவர்கள் போதுமான அளவிற்கு பணிபுரிகின்றார்கள். ஆனால், அரசு பணியில் இல்லாத மாணவர்கள் பட்ட மேற்படிப்பு படித்துவிட்டு இரண்டு ஆண்டுகள் மட்டுமே அரசிற்கு பணி புரிய வேண்டும் என்று ஒப்பந்தம் செய்யப்படுகிறது. அதிலும் பெரும்பான்மையோர் ஒப்பந்த காலத்தில் பணி புரிவதில்லை. இந்நிலையில் சர்வீஸ் கோட்டா மட்டும் இல்லை என்றால், தமிழ்நாடு அரசு மருத்துவக் கல்லூரிகளுக்கு துறைகளை நடத்துவதற்கு பேராசிரியர்கள், இணை பேராசிரியர்கள், உதவி பேராசிரியர்கள் கிடைப்பது மிகவும் கடினமாகிவிடும். புதிய மருத்துவக் கல்லூரிகளை தொடங்குவது மிக மிக கடினமாகிவிடும். ஒரு பக்கம் மருத்துவக் கல்லூரிகளையே நடத்த முடியாத சூழல் ஏற்படும். இன்னொரு பக்கம், சிறப்பு மருத்துவ சிகிச்சைகளை ஏழை எளிய பொதுமக்களுக்கு தர இயலாமல் போய்விடும்.

தமிழ்நாடு அரசு மருத்துவக் கட்டமைப்பே ஒரு பத்தாண்டுகளில் சிதைந்து போகக்கூடும். இந்த நிலையைக் கருத்தில் கொண்டு தான் தமிழ்நாடு அரசு சர்வீஸ் கோட்டா முறையை 20 ஆண்டுகளுக்கு மேலாக தொடர்ந்து நடைமுறைப்படுத்தி வந்தது. இந்தியாவிற்கு மட்டுமல்லாமல் உலக நாடுகளுக்கு முன்மாதிரியாக தமிழக மருத்துவக் கட்டமைப்பு விளங்கி வருகிறது. இதை சீர்தூக்கிப் பார்த்து தேசிய மருத்துவ ஆணையமும் ஒன்றிய அரசும் தம்மைத் திருத்தி கொள்ள வேண்டும். மாநில அரசுகளின் உரிமைகளை பறிப்பதில் முனைப்பு காட்டாமல் மாநிலங்களுக்கு கூடுதல் அதிகாரங்களை தர முன்வர வேண்டும்.

*(சிந்தனையாளன் பொங்கல் மலர்-2023 கட்டுரை)*

பிற்காலச் சோழர் வரலாற்றில்

# ஆதித்த கரிகாலன் கொலை

முனைவர் ப.வெங்கடேன்

பிற்காலச் சோழர் வரலாற்றில் ஒரு குறிப்பிடத்தக்க மன்னனாகக் கருதப்படுபவன் இரண்டாம் பராந்தகனாகிய சுந்தரசோழன். இம்மன்னன் கி.பி.957-இல் சோழ இராச்சி யத்திற்குச் சக்கரவர்த்தியாக முடிசூட்டப் பெற்றான். இவ் வரசனுக்குரிய மதுரைகொண்ட கோ இராசகேசரிவர்மன், பாண்டியனைச் சுரம் இறக்கின பெருமாள் ஸ்ரீ சுந்தரசோழ தேவர், மதுராந்தகன் சுந்தரசோழன் போன்ற சிறப்புப் பெயர்கள் பாண்டியரோடு போர் புரிந்து வெற்றி பெற்றதை வெளிப்படுத்துகின்றன.

சுந்தரசோழனுக்கும் வானவன் மாதேவிக்கும் பிறந்த வர்கள் ஆதித்த கரிகாலன், குந்தவை, அருண்மொழித் தேவன் ஆகியோர் ஆவர். அவர்களுள் ஆதித்த கரிகாலன் இளைஞனாக இருந்தபோதே வீரபாண்டியனைப் போரில் கொன்றான் என்று ஆனைமங்கலம் செப்பேடுகள் குறிப்பிடு கின்றன. சுந்தரசோழன் தன் மூத்த மகன் ஆதித்த கரிகால னுடைய வீரச்செயலையும் ஆற்றலையும் கண்டு கி.பி.966-இல் இளவரசுப் பட்டம் கட்டினான். மற்றொரு மகனாகிய அருண்மொழித்தேவன் என்கின்ற முதலாம் இராசராச சோழன் என்பவன் எத்திசையும் புகழ்ப் பரப்பி அரசாண்ட மன்னவன் ஆவான். குந்தவைப் பிராட்டி வேங்கி நாட்டுக் கீழைச் சாளுக்கிய மரபைச் சேர்ந்த வல்லவரையன் வந்தியத் தேவனுக்கு மணம் முடிக்கப் பெற்றாள். வல்லவரையன் குந்தவையை மணம் முடித்தப்பின் சோழ நாட்டிலேயே தங்கிவிட்டான்.

சுந்தரசோழனுடைய ஆட்சியின் கடைசிக் காலத்தில் அவன் மிகவும் துன்பமடையக்கூடிய நிகழ்ச்சி ஒன்று நடைபெற்றது. அது இவனுடைய முதல் மகனும் பெரும் ஆற்றல் வாய்ந்த வீரனாகிய ஆதித்த கரிகாலன் கி.பி.969-இல் சோழநாட்டில் சில வஞ்சகர்களால் கொல்லப்பட்டதே ஆகும். இத்துன்ப நிகழ்ச்சியினால் சுந்தரசோழன் துக்கம் தாங்காமல் அவ்வாண்டிலேயே காஞ்சி மாநகரில் அமைந்த பொன்மாளி கையில் உயிர் துறந்தான்.

சுந்தரசோழன் இறந்தவுடன் அவ்வேந்தனுடைய மனைவி வானவன் மாதேவி என்பாள் கணவன் இறந்த துக்கம் தாங்காமல் கணவனுடன் உடன்கட்டை ஏறினாள். அம்மா தேவியின் செயற்கருஞ்செயல் பற்றித் திருவாலங்காட்டுச் செப்பேடுகளில் சொல்லப்பட்டுள்ளது.

சுந்தரசோழன் காஞ்சி மாநகரத்தில் உள்ள பொன்மாளி கையில் இறந்ததால் அம்மன்னனைப் பொன்மாளிகையில் துஞ்சின தேவர் என்று சில கல்வெட்டுகள் குறிப்பிடுகின்றன.

**ஆதித்த கரிகாலன் கொலை வரலாற்று ஆய்வாளர்கள் கருத்து :**

இப்படுகொலைக் குறித்து வரலாற்று ஆய்வாளர்கள் இடையே சில கருத்து வேற்றுமைகள் காணப்படுகின்றன. அவற்றை இங்கு காணலாம்.

**கே.ஏ. நீலகண்ட சாஸ்திரியார் :**

மூத்த கிளை வழிவந்த உத்தமசோழன் தனக்கு முடி சூட்டப்படும் காலத்தை ஆவலோடு எதிர்நோக்கிக் காத்திருந் தான். ஆனால் சுந்தரசோழன் தன் ஆட்சியின் இறுதிப் பகுதியில் தன் மூத்த மகன் ஆதித்த கரிகாலனுக்கு பரகேசரி என்ற பட்டப் பெயருடன் இளவரசுப் பட்டம் சூட்டினான். இதனால் உத்தமசோழன் சீற்றம் அடைந்தான். அம்மணி முடியை அடைவதற்குரிய சூழ்ச்சிகளில் அவன் ஈடுபட்டு உள்நாட்டுக் கலகத்தை ஏற்படுத்தினான். மேலும் கொள்ளிடத்தின் வடகரையிலுள்ள வீரநாராயணச் சதுர்வேதி மங்கலம் என்னும் ஊரிலிருந்த சிலரின் உதவிக்கொண்டு ஆதித்த கரிகாலனைக் கொன்றுவிட்டான் என்பது பேராசிரியர் கே.ஏ.நீலகண்ட சாஸ்திரியின் கருத்தாகும்.

**தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் கருத்து :**

ஆதித்த கரிகாலனைக் கொன்றது உத்தமசோழன் அல்லன் என்பதை சிதம்பரம் வட்டம் காட்டுமன்னார் கோயிலுக்கு அருகிலுள்ள உடையார்குடி என்னும் ஊரில் அமைந்துள்ள சிவன் கோயிலில் வெட்டப்பட்ட முதலாம் இராசராசன் காலத்துக் கல்வெட்டு ஒன்று தெரிவிக்கின்றது.

அக்கல்வெட்டு ஆதித்தக்கரிகாலனை கொன்றவர்கள் யார் என்பதைத் தெளிவாகக் குறிப்பிடுகின்றது. அக்கொலை யைச் செய்தவர்கள் சோமன், ரவிதாசனான பஞ்சவன் பிரமாதிராசன், பரமேசுவரனான இருமுடிச்சோழ பிரமாதிராசன், மலையனூரானான ரேவதாச கிரமவித்தன் ஆகிய பார்ப்ப னர்கள் ஆவர். அந்நால்வரும் உடன்பிறந்தோர் என்பது அக்கல்வெட்டால் அறியக்கிடக்கின்றது. அவர்களுள் இருவர் பஞ்சவன் பிரமாதிராசன், இருமுடிச்சோழ பிரமாதிராசன் என்னும் உயர்ந்த பட்டங்கள் பெற்றவராக இருத்தலால் அவர்கள் அரசாங்கப் பணியில் அமர்ந்திருந்த பார்ப்பனர்கள் ஆவர்.

அவர்கள் அரசியல் அலுவலர்களாக இருந்தும் தம் இளவரசனான ஆதித்த கரிகாலனை வஞ்சகமாகக் கொன்ற மைக்குக் காரணம் புலப்படவில்லை. கண்டராதித்த சோழனின் மகனாகிய உத்தமசோழன் என்பவன்தான் அரசு கட்டில் ஏறும் பொருட்டு ஒரு சூழ்ச்சி செய்து ஆதித்த கரிகாலனைக் கொன் றான் எனப் பேராசிரியர் நீலகண்ட சாஸ்திரி குறிப்பிடு கின்றார். இக்கருத்தினை அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் அவர்கள் கீழ்க்கண்ட சான்றுகளைக் காட்டி மறுத்துரைக்கிறார்.

உத்தமசோழனுக்கு அக்கொலையில் தொடர்பு இருந் திருப்பின் ஆதித்த கரிகாலன் தம்பியும் குடிகளால் அன்பு பாராட்டிப் போற்றப் பெற்றவனும் பெரிய வீரனுமாகிய முதல் இராசராசன் அரியணையைக் கைப்பற்றித் தானே ஆட்சி புரியத் தொடங்குவானேயன்றி, அதனை அந்த உத்தம




சோழன் பெற்று அரசாள உடன்பட்டுத் தான் ஒதுங்கிக் கொண்டிருக்கமாட்டான். இராசராச சோழன் தன் சிறிய தந்தையாகிய உத்தமசோழனுக்கு நாட்டை ஆட்சி புரிவதில் விருப்பமுள்ள வரையில் தான் அதனை மனத்தால்கூட விரும்புவதில்லை என்று தன் குடிமக்களிடம் கூறினான் என்பது திருவாலங்காட்டுச் செப்பேடுகளால் அறியக் கிடக்கின்றது. உத்தமசோழன் சூழ்ச்சியினால் தன் தமையன் கொல்லப்பட்டிருந்தால், முதலாம் இராசராசன் அவன்பால் அத்துணை அன்பும் மதிப்பும் வைத்து அவ்வாறு கூறியிருக்கமாட்டான் என்பது ஒருதலை.

உத்தமசோழன் இளவரசனாக இருந்த ஆதித்த கரிகாலனைக் கொன்று பட்டம் சூடியிருந்தால், அவனுக்கு மக்கள் ஆதரவும் அரசு அலுவலர்கள் ஆதரவும் என்றும் கிடைத்திருக்கமாட்டா. அதனால் உள்நாட்டில் கலகமும் உட்பூசலும் அமைதியின்மையும் ஏற்பட்டிருக்கும். அதனால் சோழநாட்டில் எந்தவிதக் குழப்பமுமின்றி அமைதியாக உத்தமசோழன் ஆட்சி நடைபெற்றது என்பதைப் பல கல்வெட்டுகள் காட்டி நிற்கின்றன.

ஆகவே எக்காரணம் பற்றியோ உட்பகை கொண்டிருந்த இரண்டு அரசு அதிகாரிகளும் அவர்கள் உடன்பிறந்தார் இருவரும் ஒருங்கு சேர்ந்து, ஆதித்த கரிகாலனை வஞ்சக மாகக் கொன்றுவிட்டனர் என்பதும் இக்கொலை நிகழ்ச்சியில் உத்தமசோழனுக்குச் சிறிதும் தொடர்பில்லை என்பதினைத் தெளிவாக அறியலாம்.

இதில் பஞ்சவன் பிரமாதிராசன் என்பவன் பாண்டிய நாட்டில் அரசியல் அதிகாரியாக இருந்தவன் ஆவான். ஆனால் சோழ நாட்டைச் சேர்ந்தவன் என்பது குறிப்பிடத்தக்கதாகும். ஆதித்த கரிகாலன் கி.பி.966-இல் பாண்டிய நாட்டின்மேல் படையெடுத்துச் சென்று வீரபாண்டியனைக் கொன்று வெற்றி வாகை சூடினான். அதனால் ஆதித்த கரிகாலன் வீரபாண்டியன் முடிதலைக் கொண்ட கோப்பரகேசரி வர்மன் எனப் பாராட்டப் பெற்றான். இதனால் பாண்டியர்க்கும் சோழர்க்கும் பகை ஏற்பட்டது. சோழநாட்டைச் சேர்ந்தவனும் பாண்டிய நாட்டு அரசியல் அதிகாரியுமான பஞ்சவன் பிரமாதிராசன் தன்னு டைய சகோதரர்களுடன் சேர்ந்து நால்வருமாக ஆதித்த கரிகாலனைச் சூழ்ச்சி செய்து நயவஞ்சகமாகக் கொலை செய்தனர்.

**ஆதித்த கரிகாலன் கொலை – உடையார்குடி கல்வெட்டு**

உடையார்குடி அனந்தீசுவரர் கோயிலில் பொறிக்கப்பட்ட முதலாம் இராசராசன் (கி.பி.987) உடைய 2ஆம் ஆட்சியாண்டுக் கல்வெட்டு ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்களையும் அவர்களுக்கு விதிக்கப்பட்ட தண்டனை பற்றியும் குறிப்பிடுகி ன்றது. இதோ,

> ஸ்வஸ்திஸ்ரீ கோராஜகேசரி வர்மர்க்கு யாண்டு 2-வது வுடகரை பிரமதேயம் ஸ்ரீவீரநாராயண சதுர்வேதிமங்கலத்துப் பெருங்குறிப் பெருமக்களுக்கு சக்கரவர்த்தி ஸ்ரீமுகம் பாண்டியனைத் தலைக் கொண்ட கரிகால சோழனைக் கொன்ற த்ரோகி களான சோமன், தம்பி ரவிதாஸான பஞ்சவன் பிரஹ்மாதிராஜனும் இவன் தம்பி ஆன இருமுடிச் சோழ பிரமாதிராஜனும் இவர்கள் உடன்பிறந்த மலையனூரானும் இவர்கள் தம்பிமாறும் இவர்கள் மக்களும் இவர் பிரமாணிமார் பேராலும்.

வீரநாராயண சதுர்வேதி மங்கலத்தைச் சேர்ந்த சபை உறுப்பினர்களும் கோட்டையூர் பிரமஸ்ரீராஜனும் புல்லமங்க லத்தைச் சேர்ந்த சந்திரசேகர பட்டரும் சேர்ந்து கலந்து ஆலோசித்து அந்தக் கொலைகாரர்களின் நிலபுலன்களைப் பறிமுதல் செய்து அவற்றை ஏலத்தில் விற்று விற்றுவந்த தொகை சக்கரவர்த்தியின் பண்டாரத்தில் சேர்த்தனர். அக்

கொலைக் குற்றம் புரிந்த அனைவரும் நாடுகடத்தப்பட்டனர். கொலைக்குற்றம் புரிந்தவர்க்கு லேசான தண்டனையே வழாங்கப்பட்டது. காரணம் பிராமணன் கொலைக்குற்றம் செய்தாலும் அதற்குத் தண்டனையாக மரணதண்டனை விதிக்கக் கூடாது என மனுசாத்திரம் குறிப்பிடுகின்றது.

ஆதித்த கரிகாலனைக் கொன்றவர்கள் நான்கு பார்ப்ப னர்கள் என்பதினை முதன்முதலில் வெளிச்சம் போட்டுக் காட்டியவர் அறிஞர் சதாசிவப் பண்டாரத்தார் ஆவார்.

கல்கி கிருட்டிணமூர்த்தி அவர்கள் தான் எழுதிய பொன்னியின் செல்வன் என்னும் புதினத்தில் உத்தமசோழன் பழுவேட்டரையர் சம்புவராயர் ஆகியோர் ஆதித்த கரிகாலனைக் கொல்ல விழைவது போலவும் சதித்திட்டம் தீட்டுவது போலவும் காண்பித்திருப்பார். குந்தவை தேவி ஆதித்த கரிகாலனைத் தவிர்த்து இராசராசன் ஆட்சிக்கு வரவேண்டும் என்ற விருப்பமுடையவளாக இருந்தாள் என எழுதியிருக் கிறார். கற்பனைக் கதைமாந்தரான நந்தினி, வீரபாண்டிய னுக்காகப் பழிவாங்க, ஆதித்த கரிகாலனைக் கொல்லச் சதித்திட்டம் தீட்டுவது போலவும் அவர்களுக்கு அந்த நான்கு பார்ப்பனர்கள் உதவியாக இருந்தது போலவும் எழுதியுள் ளார். கி.பி.969-இல் ஆதித்த கரிகாலன் நான்கு பார்ப்பனர் களால் கொல்லப்படுகிறான் என்ற வரலாற்று உண்மையை ஆயிரம் ஆண்டுகளுக்குமேல் கடந்த பின்னரும் முழு பூசணிக்காயைச் சோற்றில் மறைப்பதுபோல வரலாற்று உண்மையைத் திரித்து மறைத்துப் பார்ப்பனர்கள் எழுதிக் கொண்டிருக்கிறார்கள் என்பதைத் தமிழர்களாகிய நாம் விளங்கிக் கொள்வோம்!

அடிக்குறிப்புகள்


1. S.I.I. Vol.III No.142.
2. *அறிஞர் தி.வை. சதாசிவப் பண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம் -ப.78 மற்றும்* S.I.I. Vol – III, vz: 205.
3. S.I.I Vol-III No-6, S.I.I Vol – V NOS 723, 980.
4. K.A.N. Sastri, cholas page 157-158.
5. Ep.Ind vol XXI – No.27.
6. *தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம் ப-76.*
7. *மேற்படி நூல் ப.77.*
8. S.I.I. Vol. III No.138,142,143,145
9. *தி.வை.சதாசிவப் பண்டாரத்தார் பிற்காலச் சோழர் சரித்திரம் ப-77.*
10. Ep. India Vol – XXI, No : 27
11. Bahler.G, The laws of Manu, oxford – 1886, P-449.


*(சிந்தனையாளன் பொங்கல் மலர்-2023 கட்டுரை)*

❖


# ஆ.பூங்கோதை மறைவு



மார்க்சியப் பெரியாரியப் பொதுவு டைமைக் கட்சியின் சேலம் மாவட்டச் செயலாளர் தோழர் செ.ஆனையப்பன் அவர்களின் துணைவி ஆ.பூங்கோதை அவர்கள் 03.01.2023 அன்று மறை வுற்றார். அம்மையாரை இழந்து தவிக்கும் தோழர் செ.ஆனையப்பன் அவர்களுக்கும் மகன் ஆ.அருண் மொழித்தேவன் மற்றும் குடும்பத்தினருக்கும் மா.பெ.பொ.க. மற்றும் புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழுவின் சார்பில் ஆழ்ந்த இரங்கலைத் தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

# கோ.அருண்மொழி மறைவு



மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் வேளாண் அணிச் செயலாளர் திருவண்ணாமலை மாவட்டம் கீழ்ப்பெண்ணாத்தூர் கோ.கோதண்டராமன் வேண்ட மணி இணையரின் மூத்த மகன் கோ.அருண்மொழி அவர்கள் உடல்நலக்குறைவால் 10.01.2023 அன்று மறைவுற் றார். கோ.அருண்மொழி அவர்கள் சில ஆண்டுகள் சிந்தனையாளன் அலுவலகத்தில் பணியாற்றினார். அவர் 50 வயதில் மறைவுற்றது அதிர்ச்சி அளிக்கிறது. அவருக்கு மனைவியும் இரண்டு பெண் குழந்தைகளும் உள்ளன. அவரை இழந்து வருந்தும் அவருடையக் குடும்பத்தின ருக்கும் கட்சித் தோழர்களுக்கும் மா.பெ.பொ.க. சார்பிலும் புதிய சிந்தனையாளன் ஆசிரியர் குழுச் சார்பிலும் மனம்கசிந்த இரங்களை தெரிவித்துக் கொள்கிறோம்.

**- ஆசிரியர் குழு**

# சாந்தா மறைவு



மா.பெ.பொ.க. மறைந்த வேலூர் தோழர் இரா.சுந்தர் அவர்களின் துணைவியார் திருமதி.சாந்தா அவர்கள் 17.01.2023 அன்று மறைந்துவிட்டார். மா.பெ.பொ.க.ஆழ்ந்த இரங்கலை உரித்தாக்குகிறது.

# பிராமணிய அழிவில்தான் சாதி ஒழிப்பு அடங்கியிருக்கிறது : பெரியாரும்-வள்ளலாரும் இணையும் புள்ளி

- விடுதலை க.இராசேந்திரன்

கடவுள் மறுப்பை பேசிக்கொண்டிருக்கிற பெரியார் இயக்கம் வள்ளலாருக்கு ஏன் விழா எடுக்கிறது? என்பது ஒரு அடிப்படையான கேள்வி. நாங்கள் ஏற்கெனவே தொடர்ச்சியான வைதீக எதிர்ப்பு மாநாடுகளை நடத்தி இருக்கிறோம். வள்ளலாரின் 200ஆவது பிறந்த நாளை ஒட்டி தமிழ்நாடு அரசும் 'வள்ளலார் 200' என்ற விழா நடத்தியிருக்கிறது. பெரியார் இயக்கம் வள்ளலார் மீது எப்படியான பார்வை வைத்திருக்கிறது என்பதைப் பற்றி விளக்க வேண்டிய அவசியமும் எங்களுக்கு இருக்கிறது. பெரியார் கடவுள் மறுப்பை பேசினார் என்பது உண்மை. பெரியார், சமூக விடுதலையை முன்வைத்துத் தான் கடவுள் மறுப்பைப் பேசினார் என்ற கருத்துக்களெல்லாம் பின்னுக்குத் தள்ளப்பட்டு, பெரியார் என்றால் இந்துமத விரோதி, கடவுளை வணங்குகிறவனைக் காட்டுமிராண்டி என்று கூறியவர், தமிழைக் காட்டுமிராண்டி மொழி என்று கூறியவர் என்ற இந்த மூன்று சொற்றொடர் களிலேயே பெரியாரைச் சுருக்கி வைத்து, சமூகத்திலிருந்து பெரியாரைத் தனிமைப்படுத்திவிடலாம் என்ற முயற்சி வைதீகர்களால், சனாதனவாதிகளால் தொடர்ச்சியாகப் பரப்பப்பட்டு வருகிறது.

பெரியாரின் சிந்தனை மரபையும், கடந்த கால செயல் பாடுகளையும் கூர்ந்து கவனிப்பவர்களுக்கு இதில் எந்தச் சந்தேகமும் இருக்காது என்று தான் நாங்கள் நினைக்கிறோம். பெரியார் தொடங்கிய சுயமரியாதை இயக்கத்திலேகூட உறுப்பினர்களாகச் சேர்கின்றவர்கள் கடவுள் மறுப்பாளராக இருக்க வேண்டிய அவசியம் இல்லை என்று சுயமரியாதை இயக்கம் தொடங்கிய காலத்திலேயே பெரியார் கூறியிருக்கிறார். பிறகு காலப்போக்கில் ஏற்பட்ட வளர்ச்சியின் காரணமாக பல சமூகச் சீர்திருத்தவாதிகளை, சமூகத்தை மாற்ற வேண்டும் என்று விரும்புகிறவர்களை வைதீகம், சீரணித்து உள்வாங்கிக் கொண்டு எப்படி ஏப்பம் விட்டுவிட்டது என்று உணர்ந்த காரணத்தால் அத்தகைய ஆபத்து தனக்கும் வந்துவிடக் கூடாது என்று கருதி அவர் கடவுள் மறுப்பு என்ற கோட்பாட்டை முன்வைத்தாலும், அவர் எதற்காக அதை வைத்தார் என்பதைக் கடந்தகால வரலாறுகளின் மூலமாகச் சான்றுகளோடு நாம் சுட்டிக்காட்ட முடியும்.

அந்த வகையில் நான் ஒரே ஒரு செய்தியை மட்டும் சுட்டிக்காட்ட விரும்புகிறேன். பெரியார் கூறுகிறார், "என்னுடைய முதலாவது கொள்கை இந்த நாட்டிலே இருக்கக்கூடிய உயர்வு தாழ்வு, அதற்கு ஆதரவான வர்ணாசிரம தர்மம், அதை ஆதரிக்கிற மதம், வர்ணாசிரமத்தை ஆதரிக்கிற சாஸ்திரம், வர்ணாசிரமத்தை ஆதரிக்கிற புராணம் இவைகளால் கற்பிக்கப்பட்ட கடவுள்கள் ஆகியவைகள் ஒழிய வேண்டும் என்பதே என்னுடைய முதன்மையான கொள்கை" என்று 1951-ஆம் ஆண்டு பெரியார் கூறியிருக்கிறார். எனவே வர்ணாசிரமம் என்ற அடிப்படைக் கோட்பாட்டை முன்வைத்து தான் பெரியார் இயக்கத்தை நடத்தினார். வர்ணாசிரமத்தி லிருந்து சாதி உருவாகியிருந்தாலும்கூட, சாதி எதிர்ப்பு மாநாடு களை பெரியார் நடத்தி இருந்தாலும் கூட சாதி எதிர்ப்புக் கொள்கை இந்தச் சமூகத்தில் இருந்தாலும் கூட அந்தச் சாதி எதிர்ப்புக் கொள்கையையும் வர்ணாசிரமம் விழுங்கி ஏப்பம் விட்டுவிடும்; அதை விட ஆபத்தானது வர்ணாசிரம தர்மம் என்ற கொள்கையின் அடிப்படையில் தான் அவர் இறுதி வரை வைத்த முழக்கம், 'சூத்திரர்கள் இழிவு ஒழிப்பு'. சூத்திர இழிவு ஒழிப்பைத்தான் பெரியார் தனது இறுதி பேச்சிலேகூட கூறினார். 'உங்களையெல்லாம் சூத்திரனாக விட்டுவிட்டுச் சாகிறேனே' என்று தான் பெரியார் கூறினார்.

சாதி ஒழிந்தாலும் கூட, வர்ணாசிரமம் இருந்து கொண்டு இருந்தால் சாதி ஒழிப்பு சமூகத்தையும் வர்ணாசிரமம் விடாமல் கவ்விக் கொண்டுவிடுகிற ஆபத்து என்றைக்கும் இருந்து கொண்டு இருக்கிறது. இந்த வர்ணாசிரம எதிர்ப்பு என்ற கோட்பாட்டின் கீழ் தான் பெரியார் இயக்கங்களை நடத்தினார். வர்ணாசிரமத்தை எதிர்த்த, வைதீகத்தை எதிர்த்த அத்தனை தலைவர்களுடனும் பெரியார் நெருக்கமாக இருந்திருக்கிறார். குறிப்பாக குன்றக்குடி அடிகளாரும், பெரியாரும் கொண்டிருந்த நட்பைக் கூறலாம். குன்றக்குடி அடிகளார் சைவத்திலே மிக ஆழமான பற்று கொண்டவர். பெரியாரும் குன்றக்குடி அடிகளாரும் ஒரே மேடையைப் பகிர்ந்து கொண்டது தமிழ்நாட்டின் வரலாறு. இது அனைவருக்கும் தெரிந்த ஒன்றுதான். அடிகளாருக்கும், பெரியாருக்கும் ஏற்பட்ட நெருக்கம் என்பது சூத்திர இழிவு ஒழிப்பு, சமுதாய இழிவு ஒழிப்பு என்ற தளத்தின்மீது நின்று தான் அந்த உறவே உருவானது. பெரியார், கோவில் கருவறை நுழைவுப் போராட்டத்தைக்கூட சூத்திர இழிவு ஒழிப்பு என்ற அடிப்படையில் தான் போராட் டத்தை முன்னிறுத்தி நடத்தினார்.

ஒரு செய்தியைச் சுட்டிக்காட்ட விரும்புகிறேன், 1971-ஆம் ஆண்டு பெரியார் நடத்திய ஒரு ஊர்வலத்தில் இராமன் கடவுள் அவமதிக்கப்பட்டான் என்று ஒரு பெரிய பிரச்சனை தமிழ்நாட்டிலே உருவாக்கப்பட்டு, அது தேர்தல் பிரச்சனை யாகவும் உருவாக்கப்பட்டு, பெரியாருக்கு எதிராக மிகப்பெரிய பிரச்சாரம் நாடு முழுவதும் கட்டவிழ்க்கப்பட்டது. அந்தக் காலகட்டத்தில் அடிகளார் ஒரு கருத்தை கூறினார். "இன்றைய காலகட்டத்தில், இன்றைய சூழ்நிலையில் ஆத்திகம் என்ற சிந்தனை, உயர்சாதியின் நலம் காப்பது; நாத்திகம் என்ற சிந்தனை ஒடுக்கப்பட்ட மக்களின் நலன் காப்பது" என்றார் அடிகளார்.

சைவத்திலே நம்பிக்கையுள்ள, பக்தியிலே நம்பிக்கை யுள்ள அன்றாடம் கடவுளை வழிபடுகிற அடிகளார் அந்தக் காலத்தின் தேவைக்கேற்ப, நாத்திகத்தினுடைய வரையறை அன்றைக்கு மாறியிருக்கிறது; ஆத்திகத்தினுடைய வரை

யறையும் அன்றைக்கு மாறியிருக்கிறது. காலத்துற்கேற்ப ஒரு சொல்லினுடைய தன்மை மாறுபடுகின்றது. வரலாற்றின் தேவைக்கேற்ப அந்தக் கருத்தை நாம் புரிந்து கொள்ள வேண்டிய அவசியமிருக்கிறது. அதனடிப்படையில்தான் அடிகளார் துணிவாக அதைக் கூறினார். அப்போது பெரியார் நடத்திய உண்மை பத்திரிக்கையில் அடிகளாரின் படத்தை அட்டைப் படத்தில் பதிவிட்டு, இந்த நான்கு வாசகங்களை மட்டும் பெரியார் வெளியிட்டார். அடிகளாருடன் கை கோர்த்துக் கொண்டு நேரடியாக விவாதங்களை பெரியார் நடத்தியிருக்கிறார். இந்த விவாதங்களெல்லாம் எதற்கு நடந்திருக்கிறது என்றால், இந்த மக்களின் இழிவு ஒழிப்பு கிளர்ச்சிக்காகவே ஆகும். இந்த வகையில் அடிகளாருக்கும், பெரியாருக்கும் இருந்த நெருக்கமான உறவு என்பது வரலாற்றுப் பாடமாக இருந்து கொண்டிருக்கிறது.

கடவுள் மறுப்பு என்பது பெரியார் பேசியது, சூத்திர இழிவு ஒழிப்புக்கான ஒரு அடிப்படைக் குறிக்கோள். வைதீகம் இன்றைக்கு வேறு வேறு வடிவில் உருமாறி வந்து கொண்டிருக்கிற இந்த நேரத்தில், பெரியாரை இந்து மதம் என்று இல்லாத ஒன்றிற்குள் அடைத்து வைத்து, இழிவு படுத்துகிற போக்கு இருப்பதனால்தான் வைதீகத்தை எதிர்ப்பவர்களை ஓரணியில் திரட்ட வேண்டிய தேவை இருக்கிறது.

> வள்ளலார் என்றாலே ஆறாம் திருமுறையை விட்டுவிட்டு மற்றதெல்லாம் பேசிக்கொண்டிருக்கிற போக்கு தமிழ் நாட்டில் இருந்து கொண்டு தான் இருக்கிறது. இறுதியாக வள்ளலார் எந்த சிந்தனைக்கு வந்தார் என்பதைப் பேசுவதைத் தவிர்க்கிறார்கள்.

சைவத்தில் பற்று வைத்து பிறகு சிந்தனை வளர்ச்சிப் போக்கில் சைவத்தின் மனித சமத்துவ எதிர்ப்புக் கருத்துக் களை எதிர்த்துப் போர்க்கொடி உயர்த்தியதுதான் வள்ளலாரின் தனித்துவம். அவர் சுய மத மறுப்பாளர். சைவத்துடனேயே அவர் வாழ்நாள் முழுதுவம் போராட வேண்டியிருந்தது.

நாம் இலட்சியம் வைத்துக் கெண்டிருந்த வேதம், ஆகமம், புராணம், இதிகாசம் முதலிய கலைகள் எதனினும் இலட்சியம் வைக்க வேண்டாம்; இதுதான் தனது கடைசி பத்தாண்டுகளில் வள்ளலார் மக்களிடம் முன்வைத்த வேண்டு கோள். அது மட்டுமல்ல சைவம், வைணவம் முதலிய சமயங்களிலும் இலட்சியம் வைக்க வேண்டாம் என்று அனைத்து மதங்களையும் அதன் தத்துவங்களையும் எதிர்த்த புரட்சிக்காரராக அவர் வாழ்ந்தார். அவர் வாழ்ந்த காலம் 51 ஆண்டுகள். ஆனால் தனது ஆறாம் திருமுறையில் அவர் எழுதிய புரட்சிக் கருத்துக்கள் இன்று வரை இருட்டடிக் கப்படுகின்றன. "ஒருமையுடன் நினது திருமலரடி நினைக்கின்ற உத்தமர் தம் உறவு வேண்டும்; கோடையிலே இளைப்பாற்றிக் கொள்ளும் குளிர் தருவே; அம்பலத்தரசே அருமருந்தே ஆனந்தத் தேனே, அருள் விருந்தே; அருட்ஜோதி தெய்வம் எனை ஆண்டு கொண்ட தெய்வம்; அம்பலத்தே ஆடுகின்ற ஆனந்த தெய்வம்" போன்ற பாடல்களோடு அருட்பெருஞ் ஜோதி தனிப்பெருங்கருணை என்று மங்களம் பாடி அவரது சீடர்கள் பலரும் முடித்து விடுகிறார்கள். வரலாற்றில் பார்ப்பனியம் தனது எதிர்ப்புச் சிந்தனைகளை ஜீரணித்து ஏப்பம் விட்ட சதிகளுக்கு இது மற்றொரு சான்று.

1872-இல் ஞானசபையை உருவாக்கிய அவர் அதற்கான விதிகளில் சாதி மறுப்பு, சமய மறுப்புகளை உள்ளடக்கமாக் கினார். வள்ளலார் தொடக்க காலங்களில், சைவப் பற்றோடு தாம் எழுதிய பாடல்களை அச்சு ஏற்றவே விரும்பவில்லை. ஆனால், மக்களிடத்தில் அதற்கு மிகவும் செல்வாக்கு இருந்தது. இறுக்கம் இரத்தின முதலியார் அவரது பாடல்களைத் தொகுக்க விரும்பி அடிகளாரின் சம்மதம் பெற பெரும் பேராட்டமே நடத்த வேண்டி இருந்தது. ஒரு கட்டத்தில் அடிகளார் தனது பாடல்களை அனுப்பி ஒப்புதல் தரும் வரை, தாம் ஒரு வேளை உணவை மட்டுமே உட்கொள்ள முடிவு எடுத்திருப்பதாக அடிகளாருக்கு கடிதம் எழுதினார். இதற்குப் பதறிப் போய் பதில் எழுதிய வள்ளலார், தங்களது பட்டினி அறிவிப்பு தன்னை பாதித்தது என்றும், தாம் உண்ணும் உணவு உடம்பில் ஒட்ட மறுக்கிறது என்றும் இரண்டு மாதங்களில் பாடல்களை அனுப்பி வைப்பதாக பதில் எழுதுகிறார். இவ்வளவு ஆர்வமும், துடிப்பும் உடைய இரத்தின முதலியார், ஆறாம் திருமுறையை பதிப்பதில் ஆர்வம் காட்டவில்லை. பழமை வாதிகளுக்கு ஆறாம் திருமுறை அதிர்ச்சி வைத்தியமாகிவிட்டது.

வள்ளலார் ஓர் இறைப்பற்றில் நம்பிக்கை கொண்டவர் என்றாலும், அதை வர்ணாசிரமக் கட்டமைப்புக்கு பயன்பட்டதைக் கடுமையாக எதிர்த்தவர். கோவில்கள், ஆச்சாரங்கள், சடங்குகள், உருவ வழிபாடுகள் அத்தனையும் எதிர்த்த அவர், தான் ஒரு காலத்தில் ஏற்றுக்கொண்டிருந்த சைவ மதத்திலிருந்தும் ஒதுங்கி நின்றார். சாதிக்கு அடிப்படையாக இருக்கின்ற வர்ணா சிரமக் கட்டமைப்பு ஒழிக்கப்பட வேண்டும் என்பதுதான் வள்ளலாரின் முக்கியமான குறிக்கோளாக இருந்தது என்பதை அவரது எழுத்துக்களில் இருந்து உணரமுடிகிறது.

பிராமணியம் என்ற வருணக் கட்டமைப்பு அழிக்கப்படாத வரை, சாதி முற்றாக ஒழிக்கப்படுவது என்பது சாத்தியமில் லாத ஒன்று என்ற உறுதியான முடிவு வள்ளலாருக்கு இருந்ததைப் போலவே பெரியாருக்கும் இருந்தது. சாதி ஒழிப்புக்கு அடிப்படை வர்ணாசிரம ஒழிப்பு என்ற கருத்தில் பெரியார் எப்படி உறுதியாக இருந்து, இறுதிவரை சூத்திர இழிவு ஒழிப்பு என்பதற்காகப் போராடினாரோ, அதே புள்ளியில் தான் வள்ளலாரும் இணைந்து நிற்கிறார். வள்ளலாரின் ஆறாம் திருமுறையில் தேர்ந்தெடுக்கப்பட்ட பாடல்களைப் பெரியாரின் குடிஅரசு பதிப்பகம் வெளியிட்டது.

ஒருமுறை வடலூருக்குச் சென்ற பெரியார் உள்ளே செல்ல மறுத்துவிட்டார். வெளியில் அறிவிப்புப் பலகை ஒன்றில், 'ஊன் உணவு சாப்பிடுபவர்கள் உள்ளே வரக்கூடாது' என்று எழுதி இருந்தது. நிர்வாகிகள் பரவாயில்லை உள்ளே வாருங்கள் என்று அழைத்தாலும் இந்த அறிவிப்பிற்குப் பிறகு உள்ளே வருவதற்கு என் மனசாட்சி இடம் தரவில்லை என்று கூறி பெரியார் உள்ளே நுழையாமலேயே திரும்பிவிட்டார்.

வள்ளலாரும், பெரியாரும் இணைந்த புள்ளி என்பது வர்ணாசிரம ஒழிப்பு என்பது தான். குன்றக்குடி அடிகளாரையும், பெரியாரையும் இணைத்த புள்ளியும் இதே புள்ளி தான்.

❖ *(சிந்தனையாளன் பொங்கல் மலர்-2023 கட்டுரை)*

## மறைமலை நகரில் பொங்கல் விழா



மறைமலை நகர் திருவள்ளுவர் மன்றம், பொங்கல் பெருவிழாவை 21.1.2023 காரி (சனி)க்கிழமை மாலை 6 மணிக்கு பாலாஜி திருமண மண்டபத்தில் நடத்தியது. அவ் விழாவில் தமிழ் நாட்டரசின் பாவேந்தர் பாரதிதாசன் விருது பெற்ற வாலாசா வல்லவன் அவர்களுக்குப் பாராட்டும் தெரிவிக்கப்பட்டது. தோழர் மு. அரங்கநாதன் தலைமைத் தாங்கினார். மு.பிச்சைமுத்து வரவேற்புரையாற்றினார். திரு வள்ளுவர் மன்றச் செயலாளர் மா.சமத்துவமணி, தே. தென்னவன் (வி.சி.க.), கி. கொண்டல் சாமி (மே 17), சு.ஆனந்த சுகுமார், ஜெ.சண்முகம் (நகரமன்றத் தலைவர்), சித்ரா கமலக்கண்ணன் (நகர மன்றத் துணைத் தலைவர்), திருக்குறள் மா. வெங்க டேசன், தா.மு.டிக்காராம் உள்ளிட்டோர் உரையாற்றினர். வாலாசா வல்லவன் பாராட்டுக்கு ஏற்புரை ஆற்றினார். மாணவ, மாணவிகளுக்குப் பரிசுப் பொருள்கள் வழங்கப்பட்டன. மே 17 இயக்க ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி பொங்கல் விழா பேருரையாற்றினார். இலெனின் காவிரிச் செல்வன் நன்றியுரையாற்றினார்.

## திருச்சியில் மக்கள் அதிகாரம் சார்பில் மொழிப்போர் ஈகியர் நினைவு நாள்



மக்கள் அதிகாரம் மற்றும் புதிய ஜனநாயகத் தொழிலாளர் முன்னணி சார்பில் மொழிப்போர் ஈகியார் நினைவு நாளில் 25.1.2023 அன்று திருச்சி சுமங்கலி மகாலில் இந்தி - சமற்கிருதத் திணிப்பைத் தகர்த்தெறிவோம்! இந்து-இந்தி-இந்தியா என்ற இந்துராஷ்டிரத்தை நிறுவத் துடிக்கும் காவி-கார்ப்பரேட் பாசிசத்தை முறியடிப்போம்! என்ற தலைப்பில் கருத்தரங்கம், கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

தோழர் க. சுந்தரராசு தலைமைத் தாங்கினார். தோழர்கள் தமிழ் காமராசன், கருநாடக திராவிடர் இயக்கத் தலைவர் அபி. கவுடா, முத்துகுமார், வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றினர். தோழர் ஆ.உத்திராபதி நன்றி கூறினார். இறுதியில் கலை நிகழ்ச்சி நடைபெற்றது.

## மதுரையில் சட்டப் பிரிவு எரிப்புப் போராளிகள் நினைவு நாள்



26.11.1957-இல் சாதியைப் பாதுகாக்கும் இந்திய அரசியல் சட்ட பிரிவுகள் 13, 25(2), 392 ஆகியவற்றை எரிக்கும் போராட்டத்தை பெரியார் தலைமையில் திராவிடர் கழகம் நடத்தியது. அதன் நினைவாக சட்டப் பிரிவுகளை எரித்துச் சிறைச் சென்ற தோழர்களுக்கு வீரவணக்கம் கூட்டம் மதுரை யானைகல் பிரசிடெண்டு உணவகத்தில் 26.11.22 அன்று திராவிடர் விடுதலைக் கழகத்தின் சார்பில் நடைபெற்றது. அவ்வமையம் மறைந்த பேராசிரியர் பா.செயப்பிரகாசம் அவர்களின் படத்தை வாலாசா வல்லவனும், பேராசிரியர் க. நெடுஞ்செழியன் அவர்களின் படத்தை தமிழ்பித்தன் அவர்களும் திறந்து வைத்தனர்.

தி.வி.க. மதுரை மாவட்டப் பொறுப்பாளர் பா. மணிஅமுதன் தலைமையில் நடைபெற்ற கூட்டத்தில் காமாட்சிபாண்டி, சத்தியமூர்த்தி, எஸ். தளபதி ஆகியோர் உரையாற்றினர். மா.பெ.பொ.க. துணைச் செயலாளர் வாலாசா வல்லவன் சிறப்புரையாற்றினார்.

## மே 17 இயக்கத்தின் சார்பில் மொழிப்போர்



சென்னை, சைதாப்பேட்டையில் மொழிப்போர் ஈகியர் நாள் தெருமுனைக் கூட்டம் மே 17 இயக்கத்தின் சார்பில் 28.1.2023 காரிக்கிழமை மாலை 6 மணிக்கு நடைபெற்றது. மே 17 இயக்கத் தோழர்கள் கணேசன், ஒருங்கிணைப்பாளர் திருமுருகன் காந்தி ஆகியோர் மற்றும் மா.பெ.பொ.க. துணைப் பொதுச் செயலாளர் வாலாசா வல்லவன் ஆகியோர் உரையாற்றினர்.

## வாணியம்பாடியில் தமிழ்நாட்டுக்கு எதிரான ஆளுநரின் போக்கைக் கண்டித்து ஆர்ப்பாட்டம்




வாணியம்பாடியில் 23.01.2023 அன்று மார்க்சியப் பெரியாரியப் பொதுவுடைமைக் கட்சியின் சார்பில் தமிழ்நாட்டுக்கும் தமிழர்களுக்கும் தமிழ்ப் பண்பாட்டிற்கும் அரசமைப்புச் சட்டத்திற்கும், மக்கள் நாயகத்துக்கும் எதிராகப் பேசிக் கொண்டும் செயல்பட்டுக் கொண்டும் உள்ள ஆளுநரைக் கண்டித்து மா.பெ.பொ.க. திருப்பத்தூர் மாவட்டச் செயலாளர் தோழர் நா.மதனகவி தலைமையில் கண்டன முழக்கங்கள் எழுப்பியும் கண்டன உரைகள் நிகழ்த்தியும் ஆர்ப்பாட்டம் மிகவும் எழுச்சியாக நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்தில் மா.பெ.பொ.க. பொதுச் செயலாளர் தோழர் தி.துரைசித்தார்த்தன், துணைப் பொதுச் செயலாளர் வாலாசாவல்லவன் பங்கேற்று கண்டன உரையாற்றினர்.

மேலும் விசிக மாவட்டச் செயலாளர் இரா.சுபாசுச் சந்திரபோசு, திமுக பழ.இராசேந்திரபிரசாத், இ.பொ.க. இரா.முல்லை, மக்கள் தமிழகம் கட்சி செவ்வேள், புரட்சிகர இளைஞர் முன்னணி செந்தமிழ்முருகன், மக்கள் அதிகாரம் ப.கார்த்திக், இந்திய முசுலீம் லீக் முகமதுநயீம், தமுமுக அப்துல் சுகூர் மற்றும் மக்கள் சமதர்மப் பேரியக்கம் அ.கசேந்திரன், தமிழ்நாடு தொழிற்சங்க நடுவம் ரூபன், ஒ.ம.வி.மு. மு.பிரதாபன், மா.பெ.பொ.க. தோழர்கள் வேலூர் சா.குப்பன், மோ.சி.சங்கர், காஞ்சி சி.நடராசன், சோ.புரம் க.குப்புசாமி, புலவர் அ.சகாதேவன், வேலூர் மீ.டில்லிபாபு, திருப்பத்தூர் இரா.பகுத்தறிவாளன் ஆகியோர் கண்டனங் களைத் தெரிவித்து உரையாற்றினர்.

### புதிய சிந்தனையாளன் வளர்ச்சி நிதி
### பிப்ரவரி-2023

| | | |
|---|---|---|
| மாம்பலம் ஆ.சந்திரசேகர் | சென்னை | 10000/- |
| வெள்ளைச்சாமி | சென்னை | 5000/- |
| ஜெயபால் ராமையா | கோவை | 5000/- |
| அ.லாரன்சு | சென்னை | 5000/- |
| சமத்துவமணி | மறைமலைநகர் | 5000/- |
| தேவதாஸ் சாமிநாதன் | சென்னை | 3000/- |
| தசரதன் | வேலூர் | 2000/- |
| பெ.காளியப்பன் | | 2000/- |
| குயில்தாசன் | ஜோலார்பேட்டை | 2000/- |
| பேரா.மு.திருமாவளவன் | சென்னை | 1500/- |
| கைலாசா (எ) நெடுஞ்செழியன் | புதுவை | 1000/- |
| பேரா.குழந்தைவேலன் | புதுவை | 1000/- |
| பாவலர் வையவன் | திருவண்ணாமலை | 1000/- |
| பெல் கு.ராஜன் | சென்னை | 1000/- |
| து.செ.நிறைமொழி | காட்டுமன்னார்கோவில் | 1000/- |
| யு.இரா.அருவிசோமசுந்தரம் | சென்னை | 1000/- |

ஆசிரியர் மற்றும் வெளிடுபவர் : **வாலாசா வல்லவன்**
எண்.2/12, சி.என்.கே.சந்து, சேப்பாக்கம், சென்னை - 600 005. கைப்பேசி : 8668109047
அச்சிட்டோர் : **பாவை பிரிண்டர்ஸ் பிரைவேட் லிமிடெட்,**
16, (142), ஜானி ஜான்கான் சாலை, இராயப்பேட்டை, சென்னை - 600 014. பேசி : 044-2848 2441

Editor & Published by **VALASA VALLAVAN,** No.2/12, C.N.K. Lane, Chepauk, Chennai - 600 006. Mobile : 8668109047
**Printed by Pavai Printers Pvt. Ltd.,**
16, (142), Jani Jankhan Road, Royapettah, Chennai - 600 014. Phone : 044-2848 2441